1182



# கலைமகள்

## மாதப் பத்திரிகை

பிரமாதி ஹூ கார்த்திகை மீ

கூ

### முக்கிய விஷயங்கள்

அன்னமும் சொன்னமும்
(டாக்டர் உ. வே. சாமிநாதையர்)

இலக்கியம்
(ராவ் பகதூர் வி. எம். இராமசந்திரம் செட்டியார்)

மலைபோல வந்த வினை
('சங்கராம்')

மூன்று முத்துக்கள்
(விஷ்ணு ஸகாராம் காண்டேகர்)

பொன்னகையும் புன்னகையும்
(கி. சாவித்ரி அம்மாள்)

JL
N17K N.
213408

வருஷ சந்தா ரூ. 4—0—0 * தனிப்பிரதி அணா ஆறு

# கலைமகள் காரியாலய வெளியீடுகள்

—:o:—

| | | ரூ. | அ |
|---|---|---|---|
| 1. | முருகன் ஓர் உழவன்—ஸ்ரீமான் வேங்கட ரமணி அவர்கள் எழுதிய அரிய நாவல் ... | 1 | 8 |
| 2. | குமுதினி—ஸ்ரீ ரவீந்த்ரநாத் டாகுர் எழுதிய நாவல் - வங்காளியிலிருந்து ஸ்ரீமதி ரங்கநாயகி மொழிபெயர்த்தது ... | 1 | 8 |
| 3. | மாயாவிநோதினி—ஸ்ரீ ரவீந்த்ரநாத் டாகுர் எழுதியது - ஸ்ரீமதி தஞ்சம் மொழிபெயர்த்தது | 1 | 8 |
| 4. | ஹேமலதா—இரண்டு சகோதரிகள் இனிய எளிய நடையில் எழுதிய நாவல் ... | 1 | 4 |
| 5. | விதியின் செயல் முதலிய கதைகள்—ஸ்ரீ ஏ. எஸ். பஞ்சாபகேச ஐயர், ஐ.ஸி.எஸ். எழுதியது ... | 0 | 6 |
| 6. | ரிஷப விஜயம்—ஓர் இனிய நாடகம் - ஸ்ரீ கே. வி. பஞ்சநதையர் எழுதியது ... | 0 | 12 |
| 7. | அற்புத உலகம்—பெ. நா. அப்புஸ்வாமி ஐயர், பி.ஏ. பி.எல். எழுதியது. ஸர் ஸி. வி. ராமன் முதலிய பேரறிஞர்கள் புகழ்ந்து பாராட்டும் அரிய புஸ்தகம் ... | 1 | 0 |
| 8. | ஸ்ரீ சங்கராசார்யார் உபந்யாஸங்கள்—50 உபந்யாஸங்கள் கொண்ட புஸ்தகம் ... | 1 | 8 |
| 9. | ஸ்ரீ சங்கர விஜயம்— ஸ்ரீ காமகோடி பீடாதிபதியவர்கள் திருவாய்மலர்ந்தருளியது ... | 0 | 10 |
| 10. | சியாமளா தண்டகம்— வடமொழி மூலமும் தமிழுரையும் - ஸ்ரீ அனவரதவிநாயகம் பிள்ளையவர்கள், எம்.ஏ., எல்.டி. மொழி பெயர்த்தது ... | 0 | 1 |
| 11. | கலைமகள் சிறுவர் படங்கள்—10 படங்கள் அடங்கிய ஸெட் ஒன்றுக்கு ... | 0 | 6 |
| 12. | த்வாதசோபநிஷத்—தமிழில் என். எஸ். ராஜாராமையர் மொழிபெயர்த்தது ... | 2 | 0 |

தபாற் கூலி வேறு

"கலைமகள்" சந்தாதார்களுக்குத் தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

---

மானேஜர்—கலைமகள்—மயிலாப்பூர்



சங்கீத

மண்டலத்தில்

உதித்த

புதிய

நட்சத்திரம் !

*  *

ஸ்ரீ கே. ஸாம்பமூர்த்தி

(பவானி) யின்

முதல்

"எச். எம். வி." ரிகார்டு

N. 18070

{ ஆதியாம் ஜோதி
{ கர்த்தன் கருணை

"HIS MASTER'S VOICE"

எல்லா "எச். எம். வி." வியாபாரிகளிடமும் இன்றே கிடைக்கும்.

"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"

# ஜூபிடர் ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்

தலைமைக் காரியாலயம்: பம்பாய்

1919-ல் ஸ்தாபிக்கப்பட்டது

- 'ஜூபிடர் ஜெனரல்' நெருப்பு, கப்பல், மோட்டார், விபத்து, தொழிலாளர் காம்பென்ஸேஷன், ஆயுள் முதலான இன்ஷ்யூரன்ஸ் வியாபாரங்களை நடத்துகிறது.

- 'ஜூபிடர் ஜெனரல்' உலகமுழுவதும் கிளைக் காரியாலயங்களும் ஏஜென்ஸிகளும் ஸ்தாபித்து வாரிசுதார்களின் பிராதைக் கவனித்துத் தீர்த்துவைக்கும் ஏஜெண்டுகளை எங்கும் நியமித்திருக்கிறது.

- 'ஜூபிடர் ஜெனரல்' இந்தியாவிலுள்ள முக்கியமான எல்லா விடங்களிலும் கிளைக்காரியாலயங்களை ஏற்படுத்தியிருக்கிறது. அதன் மதராஸ் கிளைக்காரியாலயம் 1939-ஆம் ஞூ மே மீ 10-ஆம் தேதி திறக்கப்பட்டது.

- 'ஜூபிடர் ஜெனரல்' இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியில் தலைமை ஏஜெண்டுகளாகவும், ஆர்கனைஸர்களாகவும், ஆயுள் ஆர்கனைஸேஷன் இன்ஸ்பெக்டர்களாகவும் விரும்புவோர் கம்பெனியாருக்கு எழுதிக்கேட்கலாம். அவ்விதம் எழுதிக்கேட்போர் அனுபவஸ்தராகவும், பலவிடங்களிலும் பழக்கமுடையவராகவும் இருக்கவேண்டும்.

*நிர்வகிக்கும் ஏஜெண்டுகள்:*

மேஸ்ஸர்ஸ் லால்ஜி நாரணஜீ அண்டு கோ.

*காரியதரிசி:* கே. எஸ். ராமசந்திரையர்.

*கிளைக்காரியாலய மானேஜர்:* என். வேங்கடராமையர்.

காரியாலயம்:

நெ. 99, அரண்மனைக்காரத் தெரு, சென்னை.

| | | | |
|---|---|---|---|
| னி | செ | | சந் கேது |
| குரு | ஸ்ரீ ரமண மஹரிஷி யின் ஜாதகம் | | |
| | | | |
| சூ ரா | பு சு | ல | |

## பிருகு சம்ஹிதை ஜோதிஷம்

பிருகு மஹரிஷியால் சுக்ராச்சாரியாருக்கு உபதேசிக்கப்பட்டதும், ஸம்ஸ்கிருத பாஷையில் எழுதப்பட்டதுமான புராதன சாஸ்திரத்திலிருந்து உங்கள் ஜாதக ஏட்டைத் தேடி எடுத்துக்கொள்ளுங்கள். ஒவ்வொரு ஜாதகத்திலும் ஆயுள் பூராவும் பலன் சொல்லப்பட்டிருக்கிறது.

இதில், ஸ்திரீ ஜாதகமும், அற்புதமாகப் புத்திரதோஷ நிவர்த்தி சாந்தியும், இஷ்டதேவதைகளின் மூலமந்திர ஜபமும், பூர்வ ஜன்ம விவரத்துடன் கூறப்பட்டிருக்கின்றன. ஒரு ஜாதகத்துக்குச் சார்ஜ் ரூ. 5. தமிழில் எழுதி அனுப்பப்படும். ஜாதகத்தைத் தேடி எடுப்பதற்கு, சில நடைபெற்ற சம்பவங்களின் குறிப்புக்களை, பூராத்தொகையுடன் அனுப்பவேண்டும். வி. பி. கிடையாது. ஜாதகம் 3 தினத்தில் அனுப்பப்படும்.

பண்டிட் R. சங்கரன், ஜோதிஷர்,
31, லிங்கசெட்டி தெரு, ஜி. டி. மதராஸ்.

---

## ரூ. 2-4-0 க்கு மனத்தைக் கவரும் கைக்கடிகாரம்

ஒவ்வொன்றிற்கும் 5 வருஷ உத்தரவாதம்



அசல் தற்காலவடிவம். கண்களைக்கவரும் புதியமோஸ்தர் ஸ்விஸ் லீவர் யந்திரவேலை. சரியான மணியை எப்பொழுதும் காட்டும் பலநாள் உழைக்கக்கூடிய கடிகாரங்கள்.

| | |
|---|---|
| வட்டச்சதுரவடிவுடைய நிக்கல் கடிகாரம் | ... ரூ. 2 4 0 |
| உயர்ந்த ரகமுள்ள ,, | ... ரூ. 3 0 0 |
| ரேடியம் டயல் ,, | ... ரூ. 4 0 0 |
| 18 காரட் தங்கமிலாம் பூசிய உறையுடைய ,, | ... ரூ. 4 8 0 |
| நீளச்சதுர நிக்கல் கடிகாரம் | ... ரூ. 6 0 0 |
| தங்க உறையுடைய ,, | ... ரூ. 7 0 0 |
| பத்துவருஷ உத்தரவாதமுடைய நீளச்சதுர ரோல்டுகோல்டு கடிகாரம் | ... ரூ. 10 0 0 |

தபாற் செலவு அணா 10. மேற்கண்டவற்றுள் மூன்றை மொத்தமாக வாங்கினால் தபாற்செலவின்றி அனுப்புவோம்.

**ORIENTAL FANCY STORES,**
**Post Box No 12204, Calcu tta (S.CE. 235.)**

---

## கலைமகள் சித்திரப் படங்கள்

### ஆரம்பப் பாடசாலைக்கு இன்றியமையாதவை

பத்துப் படங்கள் தயாராக இருக்கின்றன
ஒவ்வொன்றும் அளவு 30×24 அங்குலம்

இவை கதை சொல்லுதல், படங்களை ஒட்டின சம்பாஷணை செய்தல், பொது அறிவு, வாசிப்பு இவைகளுக்கு மிகவும் பிரயோஜனமாக உள்ளன. படம் ஒன்றின் விலை 9-பை. ஒரு செட் (10-படங்கள்) அணா 6. தபால் செலவு 0-2-9. வேண்டுவோர் 0-8-9-க்குத் தபால் தலைகள் அனுப்புக.

மானேஜர், கலைமகள், மயிலாப்பூர், சென்னை

# கலைமகள்

தொகுதி ௧௬] பிரமாதி ௵ [பகுதி ௧௫

கார்த்திகை ௴

நவம்பர், 1939

## பொருளடக்கம்

1. அன்னமும் சொன்னமும் — மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் ... 401
2. இலக்கியம்—ராவபகதூர் வி. எம். இராமசந்திரம் செட்டியார், பி.ஏ., பி.எல். ... 407
3. திருமலைநாயக்கரும் ஐரோப்பியரும்—க. அ. நீலகண்ட சாஸ்திரி, எம். ஏ. ... 412
4. கோச்சித் துறைமுகம் (படத்துடன்)—எம். நாராயண ஸ்வாமி, பி.ஏ., எல்.டி. ... 421
5. மனித தெய்வம்—எஸ். கே. ஸ்வாமி ... 425
6. மலைபோல வந்த வினை—'சங்கரராம்' ... 433
7. மூன்று முத்துக்கள்—விஷ்ணு ஸகாராம் காண்டேகர் (கா. ஸ்ரீ. ஸ்ரீநிவாஸாசார்யார் மொழிபெயர்ப்பு) . 439
8. லட்சாதிபதி—'ராகோ' ... 442
9. பைரவி—ஸ்ரீ சரத்சந்த்ர சட்டர்ஜி (த. நா. குமார ஸ்வாமி மொழிபெயர்ப்பு) ... 448
10. மதிப்புரை ... 480
11. மூளையின்வேறுபாடுகள் (படங்களுடன்)—என். ஆர். ரகுநாதாசாரியார், எம்.ஏ., எல்.டி. ... 481
12. பொன்னகையும் புன்னகையும் — கி. சாவித்திரி அம்மாள் ... 487
13. மானம் (படத்துடன்)—'முத்தண்ணா' ... 490
14. (அநுபந்தம்) திருக்குற்றாலச் சிலேடை வெண்பா (குறிப்புரையுடன்)—டாக்டர் உ. வே. சாமி நாதையர் பதிப்பு ... 9—16

முகப்புப் படம்

பைரவி விடைபெற்றுக்கொள்ளுதல்

## விஸ்வா & கோ

ஆர்டிஸ்ட்ஸ், பிளாக் அண்ட் ரப்பர் ஸ்டாம்பு மேக்கர்ஸ்.

50, வாலாஜா ரோட், மவுண்ட் ரோட், மதராஸ்.



பைரவி விடை பெற்றுக்கொள்ளுதல்

(பக்கம் 480)



# கலைமகள்

## அன்னமும் சொன்னமும்

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்

---

திருநெல்வேலி ஜில்லாவில் வடகரை யாதிக்கமென்னும் பெயருடைய சொக்கம்பட்டி ஜமீனில் ஏறக்குறைய இருநூறு ஆண்டுகளுக்குமுன் ஸ்தானாதிபதியாகப் பொன்னம்பலம் பிள்ளையென்பவர் இருந்து வந்தார். அவர் கூரிய அறிவும், தமிழ்ப்புலமையும் உடையவர்; சமயத்திற்கு ஏற்றபடி உபாயங்களை மேற்கொண்டு வேலைகளை நிறைவேற்றுபவர். அவர் காலத்தில் ஸம்ஸ்தானாதிபதியாக இருந்த பெரியசாமிச் சின்னணைஞ்சாத்தேவரென்பவர் தம் அமைச்சருடைய அறிவையும் பெருமையையும் நன்கு உணர்ந்து அவர்பால் நன்மதிப்பும் பேரன்பும் கொண்டிருந்தார். ஜமீன்தாருக்கும் அமைச்சருக்கும் அவ்வளவு நட்பும் மனவொற்றுமையும் இருப்பதைக் கண்டோர் யாவரும் வியந்தனர்.

அக்காலத்தில் சேற்றூரில் இருந்து வந்த ஜமீன்தாராகிய சிவப்பிரகாசத் திருவணாதத்துரையென்பவர் பொன்னம்பலம் பிள்ளையிடத்திலும் சின்னணைஞ்சாத்தேவரிடத்திலும் பெருமதிப்பு வைத்திருந்தார். இப்பொழுது சிவகிரியென்னும் பெயரோடு வழங்கும் ஜமீன் அக்காலத்தில் தென்மலையென வழங்கி வந்தது. தென்மலையாருக்கும் சேற்றூராருக்கும் எப்பொழுதும் பகைமை உண்டு. தென்மலையார் மிக்க பலமுடையவராதலின் சேற்றூராரே மிக்க துன்பத்தை அடைந்து வந்தனர்.



JL
3211, N17K4 N39. 16:5

இவ்வாறு தென்மலையாரால் தமக்கு அடிக்கடி இடையூறுகள் உண்டாவதுபற்றி மிக வருந்திய சேற்றூர் ஜமீன்தார் பலமுடையாரொருவருடைய துணையைப்பெற்றால் அவ்விடையூறுகளினின்றும் நீங்கலாமென்று எண்ணினர். வடகரையாருடைய ஆதரவு கிடைத்தால் இக் கருத்து நிறைவேறுமென்று நம்பி அதனைப் பெறுவதற்குரிய முயற்சிகளையும் செய்யத்தொடங்கினர்.

ஒருநாள் சேற்றூர் ஜமீன்தாராகிய சிவப்பிரகாசத் திருவணுதத்துரை தம்முடைய பரிவாரங்களை யழைத்துக் கொண்டு தக்க காணிக்கைகளுடன் புறப்பட்டுச் சொக்கம் பட்டி வந்து சேர்ந்தார். அங்கே ஸம்ஸ்தானாதிபதியையும் அப்போது இளவரசுப்பட்டத்தில் இருந்த இராஜகோபாலத்தேவரையும் கண்டு பேசித் தம் குறைகளைக் கூறித் தமக்கு உதவி செய்யவேண்டுமென்று வேண்டிக்கொண்டார். ஸம்ஸ்தானாதிபதி அங்ஙனமே செய்வதாக வாக்களித்தனர்.

சேற்றூர் ஜமீன்தார் தமிழ்க்கல்வியிற் சிறந்தவர். வடகரை ஸம்ஸ்தானாதிபதி தமக்கு உதவி புரிவதாக வாக்களித்ததைக் கேட்டு அவர் உள்ளம் பூரித்தார். அந்த உவகைமிகுதியால் பின்வரும் செய்யுளை அவர் கூறினர்:

"கரைகாணு திருந்ததுன்பக் கடல்கடந்து வடகரையுங்
கண்டேன் கல்விக்
குரைகாணுந் துரைபெரிய சாமியைக்கண் டேன்மழைக்கா
ரோங்கக் கண்டேன்
நிரைகாணக் குன்றேடுத்த ராஜகோ பாலனையும்
நேரே கண்டேன்
வரைகாணும் படிபுயமும் பூரித்தேன் நிலைமைபெற்றேன்
வாழ்வுற் றேனே."

[மழைக்கார் - கருமேகம். நிரை - பசுக்கூட்டம். ராஜகோபாலன் - இளவரசுப்பட்டத்தில் இருந்த இராஜகோபாலத்தேவர்.]

தாம் படைகளை அவருக்கு உதவிபுரிய அனுப்புவதாக வடகரை ஸம்ஸ்தானாதிபதி சொல்லியிருந்தார். அதனைக் கேட்டுத் தைரியம்கொண்ட சேற்றூர் ஜமீன்தார் தம் ஊர் சென்று வடகரையிலிருந்து துணைப்படை வரும் வருமென்று காத்திருந்தனர். அப்படை வரவில்லை. அத

ஞல் திருவணுதத்துரை சின்னணைஞ்சாத்தேவருக்கு மீட்டும் விண்ணப்பம் செய்துகொண்டனர். தமிழ்ச் செய்யுட்களால் அவரைப் பாராட்டிப் பல கடிதங்கள் எழுதினர். ஒன்றும் பயன்பெறவில்லை. தேவர் இவ்வாறு பராமுகமாக இருப்பதை உணர்ந்த சேற்றூர் ஜமீன்தார், 'பொன்னம்பலம் பிள்ளை மனம் வைத்தால் இந்தக் காரியம் எளிதிற் கைகூடும்' என்பதை அறிந்து, அவருக்கு நிகழ்ந்த வரலாறுகளைத் தெரிவித்து ஒரு நிருபம் எழுதியனுப்பினர்.

திருவணுதத்துரையினுடைய பணிவையும் அன்பையும் அறிந்த பொன்னம்பலம்பிள்ளை அவருக்கு உதவி செய்வது அவசியமென்று தம்முடைய ஜமீன்தாரிடம் உசிதமாகத் தெரிவித்தனர்; "துரையவர்களுக்கு இவர் பல கடிதங்கள் எழுதியிருக்கிருர். ஒவ்வொரு கடிதத்திலும் இவர் எழுதியுள்ள தமிழ்ச்செய்யுட்கள் மிகவும் சுவையுள்ளனவாக இருக்கின்றன. துரையவர்கள் பராமுகமாக இருந்தும் இவர் கடிதம் எழுதச் சலிக்கவே இல்லை. இவ்வளவு மரியாதையுடன் சலிக்காமல் விண்ணப்பித்து வரும் இவருக்கு உதவி செய்தால் இந்த ஸம்ஸ்தானத்துக்கே பெருமை உண்டாகும்" என்று கூறினர். அன்றியும் தம் கருத்தை அமைத்துப் பின்வரும் செய்யுளையும் இயம்பினர்:

"வேலைகள் சூழ்புவி வேந்தர்கள் போற்ற
விதிமறையோர்
நூலை யெழுதப் படாதென்று வைத்தனர்
நண்ணிசைப்பா
மாலை யெழுதப் பரராசர் மந்திரி
மார்கள்மேச்ச
ஓலை யெழுதச் சடையான் றிருவ
ணுருவனுமே."

[நூலை - வேதத்தை; எழுதாக்கிளவி யென்பது அதன் பெயர். சடையான் - சலியான்.]

பொன்னம்பலம்பிள்ளை சொன்ன பிறகு சின்னணைஞ்சாத்தேவர் அசட்டையாக இருக்கமுடியுமா? "பல வேலைகளினிடையே இதை மறந்துவிட்டோம். அவர் நம்மைப் பாராட்டிப் பல பாடல்கள் எழுதியது உண்

மையே. ஆனாலும் அவ்வளவு பாடல்களுக்கும் மேற்பட்டதாக உங்களுடைய செய்யுளொன்றை இப்போது அவர் பெற்றார். உங்களுடைய அன்புக்கு உரியவராக இருக்கும் அவருக்கு உதவி செய்வதில் என்ன தடை இருக்கிறது? நீங்களே ஒரு படையுடன் சென்று அவருக்கு உதவி செய்து அவர் விருப்பத்தை நிறைவேற்றி வருக'' என்று கூறித் தக்க துணைகளுடன் அனுப்பினர்.

அவ்வாறே பொன்னம்பலம்பிள்ளை சேற்றூராருக்கு உதவியாகச் சென்று தென்மலையின்மேற் படையெடுத்து வென்றார். அதுமுதல் சேற்றூராருக்குத் தைரியம் உண்டாயிற்று. இந்த வெற்றியினால் சிவப்பிரகாசத்திருவணைத்துரை, ''எம் குடியைப் பாதுகாக்க வந்த தெய்வம் நீங்கள்'' என்று பொன்னம்பலம்பிள்ளையைப் பாராட்டினார்.

''சேற்றூரார் நெஞ்சந் திடப்பட்டார் தென்மலையார்
தோற்றாரேமேன் றேடித் துயருற்றார்—மாற்றலர்கள்
தேண்டனிடுஞ் சின்னணைஞ்சான் சேனா பதிபொன்னன்
தண்டிகையைக் கண்டவுடன் றான்''

என்ற செய்யுளையும் கூறினர். புலமைமிக்கவர் இருவர் கூடினால் அவர்களுடைய ஸந்தோஷமும் துக்கமும் செய்யுளாகவே வெளிப்படுகின்றன. சேற்றூர் ஜமீன்தாருடைய அன்பிலும் தமிழறிவிலும் பொன்னம்பலம்பிள்ளை மிகவும் ஈடுபட்டார். ''தங்கள் ஸம்ஸ்தானாதிபதியவர்கள் இங்கே அடிக்கடி வருவதென்பது சாத்தியமன்று. தாங்கள் அக்குறையை நீக்க இங்கே வந்து ஸல்லாபம் செய்து போகவேண்டும்'' என்று ஜமீன்தார் கேட்டுக்கொண்டார். பொன்னம்பலம்பிள்ளையும் அங்ஙனமே செய்வதாக வாக்களித்தார். அதுமுதல் அவ்விருவருடைய நட்பும் வன்மை பெற்றது.

ஒருமுறை பொன்னம்பலம்பிள்ளை சேற்றூருக்கு வந்தார். அவர் வந்தபோது அரண்மனையில் ஜமீன்தார் உணவருந்திக்கொண்டிருந்தார். பொன்னம்பலம்பிள்ளை வந்திருப்பது தெரிந்தவுடன் அவர் தம் போஜனத்தையும் மறந்தார். அவ்வளவு பெரிய மதியூகியைப் பாராமல் அரைக்கணம் காக்கவைப்பதுகூடப் பிழையென்பது அவர் எண்ணம். ஆதலின் உடனே எழுந்து அவசர

மாகக் கையைக் கழுவிக்கொண்டு மிகவும் விரைவாக வந்து பொன்னம்பலம்பிள்ளையை வரவேற்றார்.

ஜமீன்தார் வரும் விரைவையும் அவர் வாயும் கையும் ஈரமாக இருத்தலையும் கண்ட பொன்னம்பலம்பிள்ளை அவருடைய அன்பின் மிகுதியையும் வேகத்தையும் உணர்ந்து மகிழ்ந்தார். ஜமீன்தார் அவசரமாகக் கை கழுவினராதலின் அக்கையில் ஒரு பருக்கை ஒட்டிக்கொண்டிருந்தது. உண்ணும்போது தம் வலக்கையிலே இருந்த மோதிரத்தை இடக்கையிலே அணிந்திருந்தனர்; அதை மீட்டும் வலக் கையில் மாற்றி அணிந்து கொள்ளவில்லை.

அந்தக் கோலத்தைக் கண்டவுடன் பொன்னம்பலம் பிள்ளைக்குச் சிரிப்பு வந்தது. ஜமீன்தார் வரவேற்ற போது அவர் தம் நகைப்பை அடக்க முயன்றார். ஜமீன் தார், "ஏன் நகைக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"உங்களுடைய அன்பின் திறத்தைக் கண்டுதான் சந்தோஷிக்கிறேன். உங்களுக்கு ஒரு கையிலே அன்னமும், ஒரு கையிலே சொன்னமும் உள்ளன. வரும்போதே என்னைப் பாராட்டிக்கொண்டு வருகிறீர்கள். அவை உங்கள் அன்பின் பெருமையைக் காட்டுகின்றன" என்று சொல்லிவிட்டுத் தொடர்ந்து,

> "ஒருகையிலே யன்ன மொருகையிலே சொன்னம்
> வருகையிலே சம்மான வார்த்தை—பெருகுபுகழ்ச்
> சீமான் றிருவாழ் சிவப்பிரகா சத்திருவக்
> கோமானுக் குள்ள குணம்"
>
> [சொன்னம் - பொன்.]

என்னும் வெண்பாவையும் கூறினர்.

'ஒரு கை நிறையச் சோற்றையும் ஒரு கை நிறையப் பொன்னையும் ஏந்திக்கொண்டு அன்பான வார்த்தைகள் கூறி யாசகருக்கு அவற்றைக் கொடுக்கும் குணமுடையவர் சிவப்பிரகாசத் திருவணுகத்துரை' என்ற அர்த்தம் தோன்றும்படி அந்தச் செய்யுள் அமைந்திருக்கிறது; ஆயினும், ஒரு கையிலே அன்னப்பருக்கையும் ஒரு கையிலே பொன்மோதிரமும் கொண்ட கோலத்தையும் குறிப்பாக அது தெரிவிக்கின்றது.

ஜமீன்தார் செய்யுளைக் கேட்டார். "என்னை இப்படி இப்போது பாராட்டக் காரணம் என்ன?" என்று அவர் பொன்னம்பலம் பிள்ளையை வினவினர். பிள்ளையினுடைய முகத்தையே மிகவும் விருப்பத்தோடு பார்த்து நின்ற அவருக்குத் தம் கையை நோக்கச் சந்தர்ப்பம் வாய்க்க வில்லை.

"உங்கள் கைகளைப் பார்த்தேன். உங்களுடைய வண்மையை அவை நினைப்பூட்டின. ஆதலின் இந்தச் செய்யுளைச் சொன்னேன்" என்று பொன்னம்பலம் பிள்ளை கூறினர். அப்போதுதான் ஜமீன்தார் தம் கைகளைப் பார்த்தார். வலக்கையிலுள்ள சோற்றுப்பருக் கையும் இடக்கையிலுள்ள மோதிரமும் அவர் கண்களிற் பட்டன. அவருக்கே சிரிப்புத் தாங்கமுடியவில்லை. உடனே உள்ளே சென்று கையை நன்ருகச் சுத்தம் செய்து கொண்டு மோதிரத்தை வலக்கையில் அணிந்து வந்தார்.

பொன்னம்பலம்பிள்ளை, "நீங்கள் உங்கள் கைகளி லுள்ள பொருள்களை மாற்றிக்கொண்டாலும் நான் என் பாட்டிலுள்ள பொருளை மாற்றுவது அவசியமன்று" என்று கூறினர். அவர் கூறியது உண்மைதானே?



# இலக்கியம்

ராவ்பகதூர் ஸி. எம். இராமசந்திரம் செட்டியார், பி.ஏ.,பி.எல்.

---

நமது நாட்டில் தற்காலப் படிப்புப் பெற்ற மக்களுக்கு இங்கிலீஷ் பாஷையில் இருக்கும் சுவையைப்போலத் தமிழ்ப் பாஷையில் இல்லை. இங்கிலீஷ் பாஷையில் கணக்கில்லாத சுவை பொருந்திய கவிகளும் கருத்துக்களும் உண்டு என்றும், தமிழில் இல்லை என்றும் அவர்கள் எண்ணுகிறார்கள். யாரேனும் ஒருவர் பிழையில்லாமல் உயர்ந்த நடையில் தமிழில் பேசிவிட்டால், 'யாருக்கும் தெரியாதபடி பேசுகிறான்' என்று அவர்கள் எண்ணுகிறார்கள். கொச்சை கொச்சையாகப் பேசினாலும் பிழைகளோடு எழுதினாலும் அந்தத் தமிழே பொதுஜனங்களுக்குத் தகுந்த தமிழ் என்று எண்ணுகிறார்கள். ஆனால் ஆங்கிலத்தில் எத்தனை உயர்ந்த நடையில் ஒருவன் பேசுகிறானோ அத்தனை மதிப்பு அவனுக்குக் கொடுப்பது உண்டு. குறைந்த சம்பளம் பெறும் ஒரு குமாஸ்தா ஓர் எழுத்துப்பிழை செய்துவிட்டாலும் அவன் வேலைக்குத் தகுதியற்றவன் என்று மேலதிகாரிகள் கோபித்துக் கொள்ளுகிறார்கள். ஆகவே, படித்த தற்காலத்து மனிதர்கள் தமிழுக்கும் இங்கிலீஷுக்கும் கொடுத்துள்ள மதிப்புகளிலே எத்தனை தாரதம்யம் வைத்திருக்கிறார்கள்! இதற்கெல்லாம் காரணம் என்னவெனில், தமிழ்ப் படிப்புக் குறைவே. இங்கிலீஷ் பயிற்சிக்கு 20 வருஷம் செலவழித்தால் தமிழுக்கு ஆரம்பத்தில் 5 வருஷங்களே செலவழிக்கிறார்கள். அப்படியானால் தமிழின் சிறப்பை இவர்கள் எப்படி அறிவார்கள்? தமிழ் இலக்கியம் என்ன நிலைமையில் வளர்ந்து வந்திருக்கிறது என்பதைப் பற்றிச் சிறிதேனும் அறியார்கள். திருக்குறள், சிலப்பதிகாரம் இவைகளைப்பற்றி யாராவது புகழ்ந்தால், இவைகளை ஏன் சுலபமான நடையில் எழுதியிருக்கலாகாதென்று கேட்கிறார்கள். "ஷேக்ஸ்பியர், சாஸர் இவர்கள் எழுதியிருக்கும் நடை சுலபமோ? அவர்களின் கவிகளைப் படித்து எவ்வாறு ஆனந்திக்கிறீர்கள்?" என்று கேட்டால் இவர்கள் என்ன விடை தரக்கூடும்? இச்சம்பாஷணை போரில் ஆங்கிலம் கற்ற ஒரு நண்பரிடம் பேசியதே ஆகும். அப்படிப்பட்ட நண்பர்கள், தமிழைச் சிறிதுகாலம் கற்றால் ஒழிய, அதன் பெருமையை அறியவே முடியாது.

ஒரு நாட்டு மக்கள் நாகரிகம் பெற்றவர்கள் என்று கூறுவோ மேயானுல் அவர்கள் பேசும் மொழியின் வளர்ச்சியே அதற்கு அறி குறி எனலாம். பல நூற்ருண்டுகளாக வளர்ச்சி அடைந்து பல அருமையான கருத்துக்களை வெளியிடும் நூல்களை ஒரு மொழி கொண்டிருக்குமேயானுல் அதுவே நாகரிகம்பெற்றது எனலாம். பூர்விக சரித்திரம் அல்லாமல் ஊண் உடைகளைப்பற்றிய கருத்துக் களை மாத்திரம் வெளியிடக்கூடிய ஆப்பிரிக்கா அல்லது ஆஸ்திரே லியா மொழிகளில் ஒன்றை நாகரிகமொழி என்று சொல்லுவோமா? இல்லை. பல ஆயிர வருடங்களாக அரசியல், புலமை, வர்த்தகம், வீரச்செயல், தத்துவம், சமயம் இவைகளில் ஈடுபட்டு அநேக சமயாசாரியர்களையும் புலவர் பெருமக்களையும் போர்வீரர்களையும் வீரத்தாய்மார்களையும் ஒரு மொழி படைத்திருக்குமேயானுல் அம் மொழியே நாகரிகமடைந்த மொழி எனல் வேண்டும். அப்பேர்ப் பட்ட மொழிதான் தமிழ்மொழி என்பதைத் தமிழ் மக்களும் அறியவேண்டும்.

பாமர மக்கள் அறியாதபடி உயர்ந்த செய்யுள் நடையில் எழுதப் பட்டிருக்கும் நூல்களே தமிழ் இலக்கியம் என்று சிலர் எண்ணு கிருர்கள். "சங்ககாலத்துச்செய்யுட்கள், கம்பர் வில்லிபுத்தூரர் சேக்கிழார் முதலியவர்களின் காவியங்கள், தொல்காப்பியம் நன் னூல் முதலிய இலக்கணங்கள் இவற்றை யாரால் அறியக்கூடும்?" என்று சிலர் ஏளனமாய்ப் பேசுகிருர்கள். தமிழ் அறியவேண்டு மானுல் இந்நூல்களைப் படித்துத்தான் ஆகவேண்டும். படிக்காவிடில் இவைகளில் அடங்கியுள்ள சுவைகளை எவ்வாறு அனுபவிக்கக் கூடும்? ஆனுல் இவைகளே தமிழ் இலக்கியம் என்ற எண்ணம் சரியல்ல. நாட்டுப்புறங்களில் தமிழ் மக்கள் பாடும் இனிய பாடல்களும், ஆடும் விளையாட்டுக்களில் சொல்லும் பாட்டுக்களும், பேசும்போது சொல்லும் பழமொழிகளும், விடுகதைகளும், நிலா வெளிச்சத்தில் பாட்டிமார் பேத்திகளுக்குக் கூறும் நாட்டுக் கதைகளும், ஆலயங்களில் பொறித்திருக்கும் லட்சக்கணக்கான கல்வெட்டு உரைகளும், கவிகளும், ஆலயங்களிலுள்ள சிற்பங் களும் ஓவியங்களும் ஆகிய இவை எல்லாம் தமிழ் இலக்கி யத்தைச் சேர்ந்தவைகளே. இவைகளில் அடங்கியுள்ள அருமை பெருமைகளைச் சிறிதளவு அனுபவித்தாலும் ஆங்கிலம் கற்ற எந்த அறிவாளியும் தமிழைக் கேவலமாகப் பேசமாட்டான். இது உண்மை.

தமிழ் இலக்கியம் பல்லாயிரம் ஆண்டுகளாக வளர்ந்து வந்திருக் கிறது என்ருேம். நமது துர்ப்பாக்கியத்தால் 2000 ஆண்டுகளுக்கு முந்தியிருந்த தமிழ் நூல்கள் அழிந்துபோயின. இப்போதுள்ள

பழைய நூல்கள் சங்கத்தார் காலத்தவையே. அக்காலத்தில்தான் நூற்றுக்கணக்கான புலவர்கள் மதுரையில் பாண்டியர்களின் ஆதரவில் இருந்து தமிழை ஆராய்ந்தார்கள். வகுப்பு பேதமும் உயர்வு தாழ்வும் இல்லாமல் எல்லாத் தொழிலாளர்களிலும் கவிஞர்கள் தோன்றியிருந்தார்கள். தாம் எண்ணின கருத்துக்களை அழகிய நடையில் சுருங்கிய அளவில் வெளியிட்டிருக்கிறார்கள். இயல், இசை, நாடகம் என்ற மூன்று தமிழும் அவர்களிடம் இருந்தன. உள்ளதை உள்ளபடி சொல்லும் வகையில் அவர்களே சிறந்தவர்கள். அக்காலத்துத் தமிழ்தான் உன்னத நிலைமையை அடைந்திருந்தது எனலாம். அதற்குப் பின்னால் வந்த நூல்கள் எல்லாம் ஒருபடி குறைந்தவைகளே.

சில ஆராய்ச்சியாளர்கள் சங்கத்தமிழென்பதே இல்லை என்பார்கள். அது சரியல்ல. சங்கத்தமிழ் நூல்களையும் மற்ற நூல்களையும் படித்துப்பார்த்தால் இரண்டிற்கும் உள்ள தாரதம்மியம் எளிதிற் காணப்படும். ஒரேவித நடை, ஒரு தேர்ச்சிபெற்ற கோட்பாடு, ஒரு முதிர்ந்த எண்ணப்போக்கு இவைகளைச் சங்கத் தமிழ் கொண்டதென்றால் அதற்கு ஒரு தனிக்காலமும் ஒரு தனிச்சரிதமும் இருந்தன என்று ஏன் கொள்ளக்கூடாது?

சங்கத்தார் காலத்திற்குப் பிந்தித் தமிழ்நாடு முற்றும், சமய அன்பில் ஈடுபட்ட பெரியார்கள் தோன்றினார்கள். சைவ வைணவ அடியார்கள் தோன்றித் தேவாரம், பிரபந்தம் முதலிய அன்பு பொழியும் பாடல்களை அருளினார்கள். பிறகு சோழர்கள் மேம்பாடு அடைந்த காலத்தில் பெருங்காவியங்கள் தோன்றின. கம்பராமாயணம், திருத்தொண்டர் புராணம், கந்தபுராணம் முதலியவை எழுதப்பட்டன. அப்போது தமிழ்மொழி முதிர்ச்சி நிலைத்துவிட்டபடியால் அறிஞர்களால் இலக்கணங்களும் நிகண்டுகளும் எழுதப்பட்டன. இவ்வகையில் சமணர்களுடைய உதவி போற்றற்பாலது. சோழ அரசியல் மங்கத்தொடங்கிய காலத்தில் சைவ வைணவ மடாலயங்கள் தோன்றின. அம்மடாலயங்களின் தலைவர்களும் புலவர்களும் தத்துவ விசாரணை செய்து சமய இலக்கணங்களை வெளியிட்டனர். இறுதியில் சென்ற நான்கு நூற்றாண்டுகளாகத் தமிழுக்கு யாதோர் ஆதரவும் இல்லாமற்போகவே ஆங்காங்குச் சிறு சிறு புலவர்கள் தோன்றிப் பலவிதமான பிரபந்தங்களையும் தல புராணங்களையும் இயற்றலானார்கள். இதுவே நூல்கள் வழியாக அறியப்படும் தமிழ் இலக்கியத்தின் சுருக்க வரலாறு.

தற்காலத்தில் எழும்பியிருக்கும் தேசிய இயக்கத்தினால் ஒரு புதிய ஊக்கம் நாடெங்கும் பிறந்திருக்கிறது. அவ்வூக்கத்தின்

பலனுகப் பாரதி போன்ற பெரியார்கள் புத்துணர்ச்சிக் கவிகளையும் நூல்களையும் வெளியிட்டு வருகிறுர்கள். எந்த இலக்கியமும் ஊக்கமும் உணர்ச்சியும் இருந்தாலல்லவோ உயர்ந்த நிலைமையை அடையும்? தமிழ்மொழி ஒரு குறுகிய நோக்கத்தைக் கொண்டதென்றும் தாராளமான வளர்ச்சிக்குத் தடையுள்ள குணங்களைக் கொண்டதென்றும் பல பேர் எண்ணுகிறுர்கள். அது தப்பு. தமிழைப்போல் பிறமொழிகளின் கருத்துக்களை வசீகரித்த மொழி வேறில்லை என்று சொல்லவேண்டும். இதனுல் தமிழுக்குத் தனித்த இயல்பு இல்லை என்பது அல்ல. தனித்த இயல்பிலும் தமிழ்தான் சிறந்தது என்பேன். ஆனுல் பிற வகுப்பார்களின் எண்ணங்களிற் சிறந்தவற்றைத் தமிழ்மொழி ஏற்றுக்கொள்ளும். சங்கத்தார் காலத்திலேயே பௌத்த சமணக் கோட்பாடுகளை ஏற்றுக்கொண்டது. இல்லாவிடின் மணிமேகலை, சிலப்பதிகாரம், சூளாமணி, பெருங்கதை இவைகள் நமக்கு ஏது? வீரசைவம், கிறிஸ்தவம், முகம்மதியம் இவைகளையும் ஏற்றுக்கொண்டது. இல்லாவிடின் சிவப்பிரகாசர், வீரமாமுனிவர், உமருப்புலவர் இவர்கள் நமக்குக் கிடைப்பார்களா? வடமொழியைப் புறக்கணிக்காது போற்றி வந்தது. இல்லாவிடின் புராண இதிகாசங்களை நாம் காணேம். இக்காலத்திலோ ஆங்கிலம், இந்தி, திசைமொழிகள் இவைகளையும் ஏற்று வருகின்றது. ஆகவே தமிழுக்குக் குறுகிய நோக்கம் இல்லை என்பது திண்ணம்.

தமிழில் சமய நூல்களைத்தவிர வேறு பொருள்களைக் கூறும் நூல்களே இல்லை என்று சிலர் குறை கூறுவார்கள். அவ்வெண்ணமும் பிசகே. சங்கத்து நூல்களில் அகப்பொருள், புறப்பொருள் சம்பந்தமான பாக்களெல்லாம் சமயச்சார்பு உள்ளவை அல்ல. அகப்பொருள் தமிழுக்கே உரியது என்று சொல்லவேண்டும். கலித்தொகை என்ற நூலில் உள்ள சிறப்புக்களை அறிந்தால் எவனும் இதைப்போல் உள்ள கவிநயம் வேறு எங்கு உண்டு என்று வியந்து பேசுவான். பிற்காலத்து நூல்களிலோ, சிறந்த கதைகள், நீதிகள், இலக்கணங்கள், வைத்தியம், ரசாயனம் முதலிய பொருள்கள் கிடக்கின்றன. வசன நூல்கள் குறைவாக இருப்பதனுல் தமிழ் மொழியில் உள்ள பொருள்களை எல்லாம் பொதுமக்கள் அறிவதில்லை. இப்பொழுதோ வசன நூல்கள் ஏராளமாய் எழுதப்படுகின்றன. அவைகள் பெரும்பாலும் கதைகளாகவும் ஆராய்ச்சி நூல்களாகவும் சரித்திரங்களாகவும் இருக்கின்றன. தற்காலம் கண்டுபிடிக்கப்பெற்றுள்ள விஞ்ஞான அறிவு நூல்கள் இனிமேல் அதிகமாக எழுதப்படவேண்டும். மற்ற மொழிகளிலுள்ள சிறந்த காவியங்களைத் தமிழில் எழுதவேண்டும்.

தமிழ் நடைக்கே ஒருவித அழகு உண்டு. எழுத்து ஓசையில் மென்மை அதிகம். சிலர் அதனை அறியாது தமிழ்மொழி கடினம் என்பார்கள். அது தப்பு.

எல்லா உச்சரிப்புக்களுக்கும் எழுத்துக்கள் இல்லை என்று மற்றொரு குறை கூறுவார்கள். எழுத்து ஓசை குறைவுள்ள ஆங்கிலம் முதிர்ச்சி பெறவில்லையா? குறைந்த எழுத்துக்களைக்கொண்டமையே தமிழுக்கு ஒரு சுலபத்தையும் அழகையும் கொடுக்கின்றது.

தமிழில் நகைச்சுவை இல்லை என்பாரும் உண்டு. தற்போது வெளிவரும் நகைச்சுவைப் பத்திரிகைகளைப் படித்தபின் இக்குறையை எவர்களும் சொல்லமாட்டார்கள். தனிப்பாடற்றிரட்டில் உள்ள சில பாடல்களைக் கூறிப் பொருள் சொன்னால் இவ்வித நகைச்சுவை வேறு எந்த மொழியில் உண்டு என்று அதைக் கேட்டவர்கள் உடனே எண்ணுவார்கள். நாட்டுப்புறத்துப் பாட்டிக்கதைகளும் வரிக்கூத்துப்பாட்டுக்களும் தெருக்கூத்து இசைப்பாட்டுக்களும் போட்டிப்புதிர்களும் எத்தனையோ அழகுகளையும் நகை முதலிய மெய்ப்பாடுகள் என்னும் நவரஸங்களையும் கொண்டிருக்கின்றன. இவைகளை எல்லாம் அனுபவித்தால்தான் தமிழ் இலக்கியத்தை நன்றாக அனுபவிக்கமுடியும்.

ஆகவே தமிழ் இலக்கியத்தின் பெருமையை அறியக் கம்பரிடத்தும் திருத்தக்கதேவரிடத்தும் செல்லவேண்டாம். நாட்டுப்புறத்தில் மாமரத்து அடியில் விளையாடும் சிறுமிகளிடத்தும் மாடு மேய்ப்போர் இடத்திலும் இலக்கிய நுணுக்கங்களை அறியக்கூடும் என்று நான் சொல்லமுடியும். நமது நாட்டில் இன்னும் இந்த முறையில் ஆராய்ச்சிகளை நம் அறிஞர்கள் செய்ய முயலவில்லை. இனிச் செய்வார்கள் என்று நம்பலாம். தமிழ்மொழிக்கு இப்பொழுது ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. அதன் பலனாக நம் தமிழ் மக்கள் தமிழ் மொழியின் உண்மையான சிறப்பை அறிந்து அம்மொழியின் மீது ஆர்வமும் பேரன்பும் கொள்ளுவார்களாக.

தமிழ்மாது வளருகின்றாள் என்று நிகழ்காலத்தில் வரந்தருவார் அருளிய கருத்தை நாம் என்றைக்கும் போற்றி அம்மாது என்றும் பொங்கிவரும் மங்களத்துடனே வளர்ந்து விளங்கும்படி வாழ்த்துவோமாக!

---

திருச்சி அகில இந்திய ரேடியோவில் 7—9—39-இல் பேசியது, அனுமதியுடன் வெளியிடப்பட்டது.

# திருமலை நாயக்கரும் ஐரோப்பியரும்

க. அ. நீலகண்ட சாஸ்திரி, எம். ஏ.

2

**ப**ரங்கியரின் தளர்ச்சியினால் அவர்களை நாயக்கர் எவ்வளவு ஆதரித்தும் பயன்படாமற் போயிற்று. அக்காலத்தில் பரங்கியரின் வியாபாரம் வரவரக் குன்றி உலாந்தர்களின் வியாபாரம் மேலோங்கிக் கொண்டு வந்தது. மலையாளத்திலும், இலங்கையிலும், சோழ மண்டலக்கடற்கரையிலும் உலாந்தர்களுக்கு அநேகம் பெத்திரி வீடுகளும் கிட்டங்கிகளும் சில கோட்டைகளும் ஏற்பட்டிருந்தன. அங்கங்கே உள்ள அரசரும் வணிகரும் அவர்களுடன் வெகு நேசங் கொண்டாடி உடன்படிக்கைகள் செய்தும் மிகுந்த லாபம் விளைக்கும் வியாபார முறைகளைப் பெருக்கியும் வந்தார்கள். இவற்றையெல்லாம் நன்றாக அறிந்த திருமலை நாயக்கரும், தம் நாட்டு வியாபாரத்துக்குச் செழிப்பும் அதனால் ஜனங்களுக்கு நன்மையும் ஏற்படவேண்டுமென்றால், தாமும் உலாந்தர்களுடைய நேசத்தை நாடவேண்டுவது அவசியமென்று தீர்மானித்தார்.

அதே சமயத்தில் உலாந்தர்களுக்கும் மதுரைச்சீமையின் துறைமுகங்களில் தங்கள் வியாபாரத்தலங்களை ஏற்படுத்தவேண்டுமென்ற எண்ணமுண்டாயிற்று. தாங்கள் அப்போது வியாபாரம் செய்து வரும் செஞ்சிநாட்டுத் துறைமுகங்களைவிட மதுரைக் கடற்கரைப் பட்டணங்களில் தங்களுக்கு வேண்டிய சரக்குகள் இன்னும் சகாயமாய்க் கிடைக்குமென்று அவர்கள் கேள்விப்பட்டார்கள். ஆகவே நாயக்கர் எண்ணமும் உலாந்தரின் எண்ணமும் ஒத்திருந்தன.

கி. பி. 1645-இல் பழவேற்காட்டில் உலாந்தா கவர்னரிடத்துக்கு நாயக்கர் ஒரு தூது அனுப்பினபோது இரு கக்ஷியாரும் ஒத்து உடன்படிக்கை செய்துகொள்வது எளிதாயிருந்தது. அதே பிரகாரம் மே மாதம் 30-ஆம் தேதி ஒப்பந்தம் முடிந்தது; நாயக்கரும் உலாந்தர்களுக்கு ஒரு கவுல் எழுதிக்கொடுத்தார். அதன்படி நாயக்கர் நாடுகளில் உலாந்தர்கள் தங்களுக்கு வேண்டிய இடங்களில் பெத்திரிகள் கட்டிக்கொள்ளலாம்; தங்களுடைய வியாபாரிகள், குமாஸ்தாக்கள், மற்றுமுள்ள சிப்பந்திகள் வசிப்பதற்கு ஏற்

பாடுகள் செய்துகொள்ளலாம்: எல்லாச் சரக்குகளையும் தடையின்றி வாங்கவும் விற்கவும் செய்யலாம். இறக்குமதியாகும் சரக்குகளுக்கு அரைச்சுங்கமும், ஏற்றுமதிச்சரக்குகளுக்கு முக்கால் சுங்கமும் அவர்கள் கொடுத்தால் போதும். இறக்குமதி செய்து, நாட்டில் விற்பனையாகாமல் திரும்ப ஏற்றுமதியாகும் சரக்குகளுக்குச் சுங்கம் கொடுக்கவேண்டியதில்லை. நாயக்கருக்குக் காணிக்கையாய்க் கொண்டுவரும் தங்கம் வெள்ளி ரத்னங்கள், பட்டாடைகள் முதலிய சாமான்களுக்கும் சுங்கம் கிடையாது. உலாந்தா வியாபாரிகளுக்காவது அவர்கள் செய்யும் வர்த்தகத்திற்காவது நாயக்கருடைய அதிகாரிகள் யாதொரு தொந்தரவும் கொடுக்கக்கூடாது. பரங்கிகளுக்காவது, ஆங்கிலேயர் முதலிய இதர ஐரோப்பிய நாட்டாருக்காவது, உலாந்தர் வர்த்தகத்திற்குக்கெடுதலாய் முடியக்கூடிய சுதந்திரங்களை நாயக்கர் கொடுக்கக்கூடாது. உலாந்தர்கள் பணத்துக்காகவேனும் பரிவர்த்தனையாகவேனும் வியாபாரம் செய்யலாம். நாட்டு வியாபாரிகளிடமிருந்து உலாந்தருக்குச் சேரவேண்டிய நிலுவைகளிருந்தால் அவைகள் முதலில் தீர்க்கப்படவேண்டும். உலாந்தர்களின் மரக்கலங்கள் உடைந்தோ சேதப்பட்டோ போனால் அவைகளிலுள்ள சரக்குகளுக்கு நாயக்கர் மாமூல்படிக்கு யாதொரு பாத்தியதையும் கொண்டாடக்கூடாது; தவிர, அந்தச் சரக்குகளைக் காப்பாற்றி வேறு கப்பல்களில் ஏற்றுவதற்கு வேண்டிய சகாயமும் செய்யவேண்டும். நாயக்கருக்கும் இதர ஐரோப்பிய ஜாதியாருக்கும் விரோதம் ஏற்பட்டால் நாயக்கர் உலாந்தர்களைத் தமக்கு ஒத்தாசை செய்யச்சொல்லிக் கட்டாயப்படுத்தக்கூடாது. இத்தனை ஷரத்துக்களும் அடங்கிய கவுலை நாயக்கர் தம் சந்தனக்கைம் முத்திரையுடன் உலாந்தர்களுக்குக் கொடுத்தார்.

கி. பி. 1645-ஆம் ஆண்டின் முதலில் உலாந்தர்கள் காயல்பட்டணத்தில் ஒரு பெத்திரியை ஏற்படுத்திக்கொண்டார்கள். வியாபாரம் செழித்தது; அவர்களுடைய அதிகாரமும் ஓங்கிற்று. முத்துக்குளிக்கும் பரவர்களெல்லோரும் இவர்கள் முகம் பார்த்துத் தங்கள் தொழிலை நடத்த ஆரம்பித்தார்கள். இதனால் சுமார் 120 வருஷகாலம் பரவர்களை ஆண்டு வந்த பரங்கியருக்கும் உலாந்தர்களுக்கும் சச்சரவுகள் ஏற்பட்டன. பரங்கியர் உலாந்தர்களுடைய தோணி ஒன்றைப் பிடித்து அதிலுள்ள சரக்குகளையெல்லாம் அபகரித்தார்கள். மேலும் நாயக்கரிடம் சென்று அவர்கள் ஏதேதோ புகார்கள் சொல்லவும், நாயக்கரும் உலாந்தர்களைப் பலாத்காரமாகவும் பல அவமானக்குறிகளுடனும் காயல்பட்டணத்தினின்று ஒழித்துவிடும்படி கட்டளையிட்டார். கி.பி. 1648-ஆம் ஆண்டு ஜூன் மாதம் அப்படியே நடந்தது. காயல்பட்டணத்து உலாந்தர்கள் உயிர்

தப்பிப் பிழைப்பது அரிதாயிற்று. அவர்கள் இலங்கைக்கு ஓடினார்கள். ஆகவே உலாந்தர்கள் காயல்பட்டணத்தில் வாழ்ந்த வாழ்க்கை மூன்று வருஷங்களுக்குக் குறைந்ததே. ஆயினும் இதனின்று விளைந்த கேடுகள் பல.

உலாந்தர்கள் அக்காலத்தில் தென் இந்தியாவிலும் மலேயாத் தீவுகளிலும் பெருத்த செல்வமும் நிலைபெற்ற அதிகாரமும் வாய்ந்த அரசியல் நடத்தி வந்தார்கள். தங்களுக்கு நாயக்கர் நாட்டில் நடந்த அவமானத்தைப் பொறுக்காமல், அந்நாட்டாருக்குத் தகுந்த சிக்ஷை செய்யவேண்டுமென்று தீர்மானித்தார்கள். இலங்கையில் கவர்னராயிருந்த மீட்சுயிகர் என்பவரை இதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யச்சொல்லிப் படேவியா (சாவகத்தீவிலுள்ள உலாந்தர் தலைநகர்)விலிருந்து ஆணை பிறந்தது. கி. பி. 1649 பிப்ரவரி மாதம் மீட்சுயிகரும் இந்தக் காரியத்தில் ஈடுபட்டார். 436 ஐரோப்பியரும், சுமார் 180 சிங்களவரும் அடங்கிய ஒரு படையைத் திரட்டிப் பத்துப்படகுகளில் கொழும்போவினின்று 2-ஆம் தேதி புறப்பட்டு 6-ஆம் தேதி மணப்பாரின் எதிரில் வந்து சேர்ந்தார். இரண்டு நாட்கள் அங்கேயே தங்கிவிட்டு, 8-ஆம் தேதியன்று திரும்பப் புறப்பட்டு வீராம்பட்டணத்திற்கும் திருச்செந்தூருக்கும் நடுவே படைகள் இறங்க வசதியாயிருந்த ஓரிடத்தில் 9-ஆம் தேதியன்று படகுகளைவிட்டு இறங்கினர். அப்போது அவர்கள் இறங்குவதை யாரும் தடுக்கவில்லை. மறுநாள், படையின் ஒரு பாகம் வீராம்பட்டணம் சென்று அங்கிருந்த கத்தோலிக் மாதாகோயிலைக் கைப்பற்றியது. அதிலிருந்த குருக்கள் ஏற்கெனவே ஓடிப்போய்விட்டார். அதே மாதிரி முன் வருஷம் உலாந்தர்களுக்குக் காயல்பட்டணத்தில் கேடுகள் செய்த மனிதர்கள் எல்லோரும் ஓடிப்போய்விட்டதாகப் படையெடுத்து வந்தவர்கள் அறிந்தார்கள். எஞ்சிய ஜனங்கள் வந்தவர்கள்பால் யாதொரு விரோதமும் காட்டாமல் நேசமாகவே இருந்ததால் வந்தவர்களுக்கு அவர்களுடன் போர் புரிவது அசாத்தியமாயிருந்தது. ஆயினும் வந்த படைகள் திருச்செந்தூர்ச் சுப்பிரமணிய சுவாமி கோயிலைத் தங்கள் பாடி வீடாக்கிக்கொண்டார்கள்; மதில் சுவர்களின்மீது பீரங்கிகளை ஏற்றி இன்னும் தற்காப்புக்குவேண்டிய பந்தோபஸ்துகளைச் செய்துகொண்டார்கள். தங்கள் வலிமையை ஜனங்களுக்கு நிரூபிப்பதற்காகப் படையின் ஒரு பகுதியைக் கடலோரத்திலுள்ள பல ஊர்களின் வழியாய்ப் பவனிபோகச் செய்தார்கள். இம்மிலேச்சர்கள் கோயிலை ஆக்கிரமித்தது ஜனங்கள் மனத்தில் வெறுப்பையும் பீதியையும் உண்டு பண்ணிற்று; ஆனால் யார் என்ன சொல்லியும் உலாந்தர்கள் கோயிலைவிட்டு வெளிக்கிளம்பத் தயாராயில்லை. கோயிலைச் சும்மா விட்டுவிட்டால் முந்திய வருஷத்தில்

அவர்களுக்கேற்பட்ட நஷ்டத்திற்குத் தாம் ஈடு செய்வதாக நாயக்கர் அனுப்பிய தூதும் வீணாய்ப் போயிற்று.

பரங்கிகளின் இருப்பிடமான தூத்துக்குடியின்மீது உலாந்தர்களுடைய கவனம் விசேஷமாகச் சென்றது. பிப்ரவரி 12-ஆம் தேதி உலாந்தர் அவ்விடம் சென்றனர். பரங்கியரின் கப்பித்தான், பரவர்கள் எல்லோரும் பரங்கி (போர்த்துகல்) தேசத்தரசனுடைய தனிப்பாதுகாப்புக்கு உட்பட்டவர்களென்று ஒரு சேதியை மீட்சுயிகருக்கு அனுப்பினன். ஐரோப்பாவில் அச்சமயம் பரங்கி தேசமும் உலாந்தா தேசமும் சமாதானமாயிருந்தன: ஆகையால் இவ்விரு தேசத்தாரும் இந்தியாவில் தங்களுக்குள் சண்டைபோடக்கூடாதென்பதுதான் இதன் கருத்து. ஆனால் உலாந்தர் தலைவன் இவ் வழக்கை ஒப்புக்கொள்ளவில்லை; அவன் நாயக்கரால் உலாந்தர்களுக்கேற்பட்ட அவமானத்தைத் துடைக்கத் தான் வந்திருப்பதாகவும், பரவர்களை நாயக்கருடைய பிரஜைகளாகவே தான் கருதுவதாகவும் பதிலளித்தான். இவ்விடத்திலும் மற்ற ஊர்களிற்போலவே உலாந்தருக்கு விரோதமாயிருந்த பரவர்களும் அவர்களின் தலைவர்களான சில பட்டங்கட்டிகளும் ஏற்கெனவே ஓடிப்போய்விட்டார்கள்; எஞ்சி நின்றவர்கள் படையெடுத்து வந்த உலாந்தருடன் சிநேகம் பாராட்டிக் குற்றம் முழுதும் பரங்கிக்கப்பித்தானையும் ஓடிப்போன பரவர்களையுமே சார்ந்ததென்றார்கள். ஆயினும் மீட்சுயிகர் நிராயுதர்களுக்கு விரோதம் ஒன்றும் தாம் விளைவிப்பதில்லை என்றும் தமக்குத் தூத்துக்குடி ஜனங்கள் 40,000 ரீல்கள் (ஒரு ரீல் சுமார் ஒரு ரூபாய் என்று வைத்துக்கொள்ளலாம்) திறைகொடுக்க வேண்டுமென்று அறிக்கையிட்டார். தூத்துக்குடியிலுள்ள மாதா கோயில்களையும் வீடுகளையும் தாம் தகர்த்துவிடுவதாக உலாந்தர்கள் பயமுறுத்தவே, சில முக்கியமான நகரவாசிகளும் கத்தோலிக் குருக்கள்களும் தாங்கள் மூன்று நாட்களுக்குள் குறிப்பிட்ட தொகையைச் சேகரித்துத் திறைகொடுப்பதாக நாயக்கரின் சார்பாக ஒப்புக்கொண்டு ஒரு பத்திரம் எழுதிக்கொடுக்கவேண்டியதாயிற்று. ஆனால் பணம் கிளம்பவில்லை. 14-ஆம் தேதி வரைக்கும் 5463 ரீல்கள் மட்டுமே கொடுபட்டன. ஊராரும் ஆயுதங்களைச் சேகரித்தும், வழிகளைத் தடுத்துச் சுவர்கள் முதலியவை கட்டியும் யுத்தத்திற்குத் தயார் செய்தார்கள். இதைக் கண்டு உலாந்தர்கள் ஊரைமுற்றும் ஒருநாள் முழுவதும் கொள்ளையடித்தார்கள். ஆனால் கொள்ளைப் பொருள்கள் அதிகம் அகப்படவில்லை. சிலநாட்கள் கழிந்தும் பணம் வந்து சேரவில்லை. பணக்காரரெல்லாம் ஊரைவிட்டு ஓடிப் போய்விட்டதனல், படைகள் ஜனங்களை என்ன பாடுபடுத்தினலும் பணத்திற்கு வழியில்லை. இதற்குள் உலாந்தர்களுக்கு ஒரு சேதி

வந்தது. அதாவது திருச்செந்தூர்க்கோயிலை மீட்க நாட்டுஜனங்கள் செய்த முயற்சிகளால் கோவிலுக்குள் இருக்கும் சிறுபடை அபாய ஸ்திதியிலிருக்கிறது என்பதுதான். ஆகையால் மீட்சுயிகர் 18-ஆம் தேதியன்று வேறு ஒரு பத்திரம் எழுதி வாங்கிக்கொண்டு திரும்பிப் போவது நலமென்று கருதினர். இந்தப் புதுப்பத்திரத்தினல் 12-ஆம் தேதியன்று உலாந்தரின் சொற்பிரகாரம் தாங்கள் எழுதிக்கொடுத்த பத்திரத்தைக் குறித்துவிட்டுப் பின் அதிற்கண்ட பெரிய தொகையைக் குறிப்பிட்ட சில நாட்களுக்குள் தூத்துக்குடி ஜனங்களால் சேகரித்துக் கொடுக்கமுடியவில்லையென்றும், அதனல் படையெடுத்து வந்த உலாந்தர்கள் வருகிற மே மாதம் முடிய அவர்களுக்கு வாயிதாக்கொடுத்திருப்பதாகவும், அதன் பிரகாரம் அவர்கள் மே மாதத்திற்குள் பணம் கொடுத்துவிடுவதாகவும், அதுவரைக்கும் இருதிறத்தாரும் ஒருவருக்கொருவர் விரோதம் ஒன்றும் பாராட்டாமலிருக்கவேண்டுமென்றும் ஒப்பந்தம் செய்துகொள்ளப் பட்டது. ஆயினும், பரவர்களின் தலைவர்களான பட்டங்கட்டிகளே சென்ற வருஷம் காயல்பட்டணத்தில் தங்களுக்கேற்பட்ட அவமானத்திற்கு முக்கியமான ஜவாப்தாரிகள் என்று உலாந்தர்கள் கருதியதால், அவர்கள் தூத்துக்குடியை விட்டுப் புறப்படுமுன் பட்டங்கட்டிகளின் வீடுகளை மட்டும் நெருப்பிற்கிரையாக்கினர்கள்.

இதற்குள் நாயக்கரிடமிருந்து உலாந்தரின் கவர்னருக்கும் கடற்கரை ஜனங்களுக்கும் இருதிறத்தாரும் சண்டையை நிறுத்திச் சமாதானம் செய்துகொள்ளவேண்டியதென்று கடிதங்கள் வந்தன. உலாந்தர்கள் தரை வழியாய்ச் சென்றால் ஜனங்கள் சச்சரவு செய்யக்கூடுமாகையால் கடல் வழியே அவர்கள் திருச்செந்தூருக்குத் திரும்பும்படியும் அவர் வேண்டினர். அதே பிரகாரம் மீட்சுயிகர் தூத்துக்குடி ரேவில் அகப்பட்ட தோணிகள் சிலவற்றைச் சேர்த்துக் கொண்டு, தமக்குச் சேரவேண்டிய பணம் கிடைத்ததும் அவைகளைத் திருப்பிக் கொடுப்பதாகச் சொல்லிவிட்டு, 20-ஆம் தேதியன்று கடல் வழியே புறப்பட்டு அன்று சாயந்திரமே திருச்செந்தூர் சென்றடைந்தார்.

22-ஆம் தேதியன்று நாயக்கரின் சார்பாகக் காயல்பட்டணத்து மனிதர் வந்து உலாந்தர்கள் திருச்செந்தூர்க்கோயிலைக் காலி செய்து கொடுக்கவேண்டுமென்று வேண்டினர்கள். தங்களுக்கு இதுவரை ஏற்பட்ட நஷ்டங்களுக்கும் மானக்கேடுகளுக்கும் ஈடாக லட்சம் ரீல்கள் தந்து முன்போல் தாங்கள் வியாபாரம் செய்ய அனுமதியும் தந்தால் கோயிலை விட்டு விடுவதாக உலாந்தர்கள் பதில் சொன்னர்கள். அதற்கு நாயக்கரின் பிரதிநிதிகள் சொன்னதாவது:

"கோயிலை முதல் முதல் காலி செய்து தரவேண்டியது முக்கியம்; ஏனென்றால் இவ்வபசாரத்தால் ஜனங்கள் எல்லோரும் மனம் நொந்தும் பலர் பல நாட்களாகப் பட்டினியாகவும் கிடக்கிறார்கள்; ஆகையால் ஜனங்களின் மனவருத்தத்தையும் அருவருப்பையும் உடனே மாற்றுவது அவசியம். அதன் பிறகு உலாந்தருக்குச் சரக்குகள் அழிந்ததால் ஏற்பட்ட நஷ்டத்திற்கு ஈடும் மறுபடி வியாபாரம் செய்ய அனுமதியும் கொடுக்கப்படும்." இப்படி அவரவர்கள் சொன்னதையே சொல்லிக்கொண்டிருந்தபடியால் சமாதானம் ஏற்படவில்லை. மறுநாள் திருச்செந்தூர் அதிகாரி மறுபடியும் சமாதானத்திற்குச் செய்த பிரயத்தனமும் வீணாகப்போயிற்று. அதற்குள் ஜனங்கள் கோயிலைத் தாக்கி உலாந்தர்களை வெளியாக்க எத்தனங்கள் செய்தார்கள். நான்கு யானைகளும், ஐம்பது அறுபது குதிரைகளும், நானூறு ஐந்நூறு ஆட்களும் தயாராயிருப்பதாய் உலாந்தரின் கவர்னர் மீட்சுயிகருக்குச் சேதி வந்தது. 25-ஆம் தேதி ஒரு சண்டை நடந்தது. நாயக்கரின் பட்டாளத்தில் சுமார் முப்பது பேர் மாய்ந்தனர். உலாந்தர் படைகளில் மூன்று பேர், அவரும் சிங்களவரே, பட்டனர். பிறகு உலாந்தர் திருச்செந்தூர் முழுதும் தேடிப்பார்த்து அகப்பட்ட வெடிமருந்தையெல்லாம் பாழாக்கிவிட்டார்கள். ஜனங்கள் திகிலடைந்து விட்டபடியால் விழுந்த பிணங்கள்கூட எடுக்கப்படவில்லை.

ஆனால் இச்சிறு வெற்றிகளால் உலாந்தர்கள் அடைந்த பயன் யாதொன்றுமில்லை; ஜனங்களுடைய வெறுப்புத்தான் மிச்சம். தம்மால் ஒன்றும் இயலாதென்று மீட்சுயிகர் அறிந்தார். பிப்ரவரி 28-ஆம் தேதியன்று தாம் இலங்கை திரும்பவேண்டுமென்று தீர்மானித்தார். மறுநாள், அதாவது மார்ச்சு முதல் தேதியன்று, அவர் நாயக்கருக்கு ஒரு கடிதமெழுதினார். அதில் நாயக்கரே உலாந்தரை வருந்தியழைத்து வியாபாரம் செய்யச் சொல்லிவிட்டுப் பிறகு அவர்கள் யாதொரு குற்றமும் செய்யாதிருக்கையில் அவர்களுக்குப் பெருங்கேட்டை விளைவித்தாரென்றும், அதனால்தான் தாம் திருச்செந்தூர்க்கோயிலைப் பிடித்துக்கொண்டதாகவும், நாயக்கர் நஷ்ட ஈடு செய்த உடனே கோயிலை ஒரு பங்கமுமின்றித் திரும்பக் கொடுப்பதாகவும் எழுதினார். இக்கடிதத்தை அனுப்பிவிட்டு இலங்கைக்குப் புறப்பட்டார். புறப்படும்போது கற்சிலையான மூல விக்கிரகமுட்படக் கோயிலிலுள்ள விக்கிரகங்கள் எல்லாவற்றையும் தமக்குச் சேரவேண்டிய பணத்திற்குப் பணயமாகத் தம்முடன் கப்பலிலெடுத்துச்சென்றார். அவர் சென்ற பிறகுகூடச் சில வீண் சண்டைகள் நிகழ்ந்தன; கடைசியாய் எஞ்சிய உலாந்தப்படைகளும் திரும்பிச் சென்றன. கோயில் காலியாய்க் கிடந்தது.

1650 ஜனவரியில் மீட்சுயிகர் தூத்துக்குடியினின்றும் தமக்குச் சேரவேண்டிய 30,000 ரீல்களை வசூல் செய்ய மனிதரை அனுப்பினர்; அப்போது அவர்களிடம் திருச்செந்தூர் விக்ரகங்களைப் பற்றி ஜனங்கள் ஆவலுடன் கேட்டார்கள்; அவைகளைத் திருப்பிக்கொடுத்தால் மறுபடி வியாபார வசதிகள் ஏற்படுமென்றும் வாக்களித்தனர். ஆனல் உலாந்தர் தங்களுக்குச் சேரவேண்டியதாகக் கருதிய பாக்கித்தொகையைப்பற்றிய பேச்சே இல்லை.

அடுத்தமாதம், அதாவது கி. பி. 1650 பிப்ரவரி, நாயக்கருடைய அதிகாரிகள் விக்ரகங்களை மீட்க யத்தனம் செய்தார்கள். நாயக்கர் சார்பாகத் திருநெல்வேலியை ஆண்டு வந்த வடமலையப்ப பிள்ளையனவர்கள் உலாந்தரிடமிருந்து விக்ரகங்களைத் திரும்ப வாங்கிவர நான்கு மனிதரை இலங்கையிலுள்ள காலியென்னும் ஊருக்கு அனுப்பும்படியாய்க் காயல்பட்டணத்து அதிகாரியான நாராயண முதலியாருக்கு உத்தரவு அனுப்பினர். அதே பிரகாரம் சென்ற மனிதரிடம் உலாந்தர் விக்ரகங்களைக்கொடாமல் லட்சம் ரீல்கள் கொடுத்தாலன்றி அவை திரும்பக் கொடுக்கப்படமாட்டா என்று ஒரு கடிதம் மட்டும் கொடுத்தனுப்பினர்கள்.

ஆனல் அவர்களுக்கு விக்ரகங்களினல் பயன் ஒன்றுமில்லை. மே மாதத்தில் சாவகத்தீவிலுள்ள படேவியா என்னும் தலைநகருக்கெழுதி அவைகளை என்ன செய்யவேண்டுமென்று கேட்டார்கள். அதற்கு, அகப்பட்ட விலைக்கு நாயக்கருக்குக் 'கற்சிலையையும் அதைச்சார்ந்த விக்ரகங்களையும்' விற்றுவிட்டுக் கூடிய சீக்கிரம் வியாபாரத்தை மறுபடியும் ஆரம்பிக்கவேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டியது அவசியமென்று பதில் வந்தது. அதன்படி கி. பி. 1651 ஜனவரி மாதம் கடைசியில் விக்ரகங்களை உலாந்தர்கள் காயல்பட்டணத்திற்கு அனுப்பித் திருச்செந்தூர்க் கோயிலுக்கு மறுபடியும் கொண்டுசேர்த்தார்கள். 'கொல்லம் 829 (கி. பி. 1653) விஜயஹூ தை மாதம் 23-ஆம் தேதி வெள்ளிக்கிழமையும் திரயோதசியும் சிவயோகமும் சிவகரணமும் பெற்ற புனர்பூசத்தில் மிதுன லக்னத்தில் விசுவநாத நாயக்கர் அய்யன் திருமலை நாயக்கர் அய்யன் வடமலையப்ப பிள்ளை அய்யன் இவர்களை ரக்ஷிக்கும் பொருட்டாகச் சுவாமி எழுந்தருளினர்' என்று கூறும் திருச்செந்தூர்ச்சாஸனம் ஒன்று, உலாந்தரிடமிருந்து விக்ரகங்கள் திரும்பினதன்பின் நடந்த கும்பாபிஷேகத்தின் தேதியைக் குறிப்பதுபோலும். வடமலை வெண்பாவின் இறுதியிற்காணும் கீர்த்தனத்திலும் இச்செய்தி குறிக்கப்பட்டுள்ளது.

உலாந்தர் விக்ரகங்களைக் கொண்டு போகும்போது புயற்காற்றால் அவை கடலில் மூழ்கினவென்றும், அவை கிடக்கு

மிடத்தை முருகன் கனவில் வடமலையப்ப பிள்ளையனுக்குக் கூறின தன்பேரில் அவர் போய் அவைகளை மீட்டாரென்றும் உள்ள கதைகளைப் பார்த்தால் நம் நாட்டுச்சரித்திரத்திற்கும் புராணங்களுக்கும் உள்ள சம்பந்தம் ஒருவாறு விளங்கும்.

திருநெல்வேலி நாட்டுக்குக் கர்த்தராயிருந்த வடமலையப்ப பிள்ளையனைக் காவை வடமலையப்பபிள்ளையென்பர். இவரைக்குறித்த பல விவரங்களடங்கிய கட்டுரையொன்று ஸ்ரீசோமசுந்தரதேசிகரால் எழுதப்பெற்றது 'செந்தமிழ்'த்தொகுதி 35, பகுதி 7 (மே, ஜூன் 1938) இல் காணலாம். பிள்ளையன் மதுரைக்கணித்தான காவனூரில் பிறந்ததால் காவை வடமலையப்பன் எனப்பட்டார். நாயக்கருக்கும் இவருக்கும் ஏற்பட்டிருந்த நட்பின் பெருமையும், பிள்ளையன் குணதிசயங்கள், ஆட்சித்திறன், திருப்பணிகள் முதலியனவெல்லாம் மேற்கூறிய கட்டுரையைப் படிப்போர்க்கு நன்ருக விளங்கும். மச்சபுராண ஆசிரியரான இரசை வடமலையப்பபிள்ளை இவருடைய பேரராவார்.

மேற்கூறிய சம்பவங்களுக்குப் பிறகு கொஞ்சகாலம் உலாந்தர்கள் மதுரை நாட்டுத் துறைமுகங்களில் வியாபாரம் ஒன்றும் நடத்தக்கூடவில்லை; இலங்கையே அவர்களுக்கு முக்கியமாகவிருந்தது. சில வருஷங்களுக்குப்பின் ரைக்ளாப் வான் கூன்ஸ் என்பவர் உலாந்தரின் கவர்னராக வந்தார். அவர் பரங்கியர் ஆதிக்கம் கொஞ்சநஞ்சம் மிஞ்சியிருப்பதையும் அறவே ஒழிக்கவேண்டுமென்று எண்ணி, கி. பி. 1658 ஜனவரி மாதத்தில் தூத்துக்குடியைப் பிடித்துக்கொண்டார். சேதுபதி ரகுநாதத்தேவருடன் அடுத்த மாதம் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். அதன்பிறகு மன்ஞர், கைட்ஸ், யாழ்ப்பாணம் முதலிய இடங்களிலிருந்து பரங்கிகளை ஓட்டிவிட்டு அவ்விடங்களை உலாந்தர் வசமாக்கினுர். இவ்விதமாய்ப் பரங்கிகளை அறவே ஒழித்தபின் அவர் திருமலைநாயக்கருடன் மறுபடி ஒரு வியாபார உடன்படிக்கைக்காகத் தூதுகளை அனுப்பினுர். நாயக்கரோ உலாந்தரின் தன்மையை நன்கறிந்துவிட்டபடியால் வெகு ஜாக்கிரதையாகவே பதில்களளித்து வந்தார். முதலில் வடமலையப்ப பிள்ளையனைக்கொண்டு கி. பி. 1659 மார்ச்சு 18-ஆம் தேதி எழுதப்பட்ட ஒரு கடிதத்தின் மூலமாய்த் தம் கருத்துக்களை ஒருவாறு உலாந்தரின் கவர்னருக்கு அறிவிக்கச்செய்தார். அவர்களுடைய பதில் வந்ததும் அவர்கள் கேட்ட எல்லா வசதிகளையும் கொடுக்காமல் தமக்குச் சரியென்று தோன்றினவற்றை மட்டுமே அளித்தார். அவர்கள் கேட்டதையும் தாம் ஒப்புக்கொண்டதையும் விவரமாக எழுதின கவுல் ஒன்றும் அளிக்கப்பட்டது. இந்தக் கவுல்தான் நாயக்கருக்கு ஐரோப்பியருடன் ஏற்

பட்ட நடிவடிக்கைகளைக் குறிக்கும் ரிகார்டுகளில் கடைசியானது. அதன் ஷரத்துக்களைச் சுருங்கக்கூறி இக்கட்டுரையை முடிப்போம்.

இருதிறத்தாரும் இனி எப்போதும் நேசமாயிருந்து, ஒருவருடைய விரோதிகளை மற்றவரும் தங்களுடைய விரோதிகளாகவே கருதவேண்டியது. உலாந்தர் ஒரு கோட்டை கட்டிக்கொள்ள அனுமதி கேட்டனர். ஆனால் நூறு வருஷங்களுக்கதிகமாக வியாபாரம் செய்துவந்த பரங்கிகளே அப்படி ஒன்றும் கேட்காமல் இருந்தார்களே என்ற கேள்விக்கு, உலாந்தர்கள் தாங்கள் வேண்டுவது ஒரு கோட்டையல்ல, தங்கள் சரக்குகளைப் பந்தோபஸ்தாய் வைக்க வேண்டிய ஒரு வலுவான கட்டிடமேதான் என்றார்கள். நாயக்கர் அதைப்பற்றிப் பின் பார்த்துக்கொள்ளலாமென்றார். பரவர்களும் பட்டங்கட்டிகளும் நாயக்கருக்குக் கப்பங்கட்டினபோதிலும் முன் பரங்கியருக்குப்போலவே இனி உலாந்தருக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டியது. உலாந்தர் இன்னும் தங்களுக்குத் தூத்துக்குடியிலிருந்து சேரவேண்டிய பாக்கிப்பணம் சேரவேண்டுமென்றார்கள்; அதற்கு நாயக்கர் இருதிறத்தாரும் பழங்கதைகளை முழுவதும் மறக்கவேண்டியதென்றார். உலாந்தர் தங்களனுமதியின்றி யாரும் முத்துக்குளிக்கக்கூடாதென்று கேட்டார்கள்; நாயக்கருடைய அதிகாரிகளும் உலாந்தர் உத்தமக்கம்பெனியின் அதிகாரிகளும் சேர்ந்து அனுமதி கொடுக்கவேண்டியதாக ஒப்புக்கொள்ளப்பட்டது. மதுரைச்சீமையில் உலாந்தர் வேறு ஐரோப்பிய ஜாதியாருக்கு வியாபார உரிமைகள் ஏற்படல் கூடாதென்று கேட்டார்கள்; நாயக்கர் அம்மாதிரி ஒப்பந்தம் செய்துகொண்டால் மற்ற ஜாதியாருடன் விரோதமேற்படுமென்றும், ஆனால் அவர்களுக்குக் கட்டடங்களும் பெத்திரிகளும் கட்டிக்கொள்ள அனுமதிகொடுப்பதில்லையென்றும் ஒப்புக்கொண்டார். மிளகு உள்பட எல்லாச்சரக்குகளிலும் உலாந்தர் வியாபாரம் செய்யலாம். சுங்கமே இல்லாமல் மூன்று வருஷங்கள் வியாபாரம் தாங்கள் செய்யவேண்டுமென்று உலாந்தர் கேட்டதை நாயக்கர் ஒப்புக்கொள்ளாமல் முன்போல் அவர்கள் அரைச்சுங்கம் கொடுக்கவேண்டியதென்றார். நாயக்கருடைய பிரஜைகள் உலாந்தர் அனுமதியின்றி இலங்கைக்கரைகளில் கப்பலோட்டக்கூடாது. உலாந்தர் வியாபாரிகளுக்கு நாட்டாராவது அதிகாரிகளாவது யாதொரு கேடும் விளைவிக்கக்கூடாது. உலாந்தர் மதுரை நாட்டு எல்லாத் துறைமுகங்களையும் குத்தகையாகக் கேட்டார்கள்; அது கிடைக்கவில்லை. தங்கள் வேலைக்காரரெல்லோரும் மதுரைச்சீமையில் தடையின்றி வியாபாரம் செய்யவேண்டுமென்றும், தங்கள் மரக்கலங்களுக்குச் சேதம் ஏற்பட்டால் அவைகளிலுள்ள சரக்குகளை நாயக்கர் கைப்பற்றக்கூடாதென்றும் உலாந்தர்கள் கேட்டார்கள். அதற்கு நாயக்கர் உலாந்தாக் கம்பெனியின் அதிகாரிகள் கம்பெனியின் சார்பாகத் தடையின்றி வியாபாரம் செய்யலாமென்றும், சேதப்பட்ட மரக்கலங்கள் விஷயமாய் இருதிறத்தாரும் ஒரே மாதிரியாய் நடந்துகொள்ளவேண்டியதென்றும் ஒப்புக்கொண்டார்.

# கொச்சித் துறைமுகம்

எம். நாராயணஸ்வாமி, பி.ஏ., எல்.டி.

இந்தியாவின் மேற்குக்கரை யோரத்தில் முக்கியமான பல துறைமுகங்கள் உள்ளன. அவற்றுள் இதுவரை முதன்மை ஸ்தானம் பெற்று வந்தது பம்பாய். கராச்சியில் கடல்விமானப் போக்குவரத்து ஏற்பட்டபின், பம்பாயின் பெருமை சிறிது குறையலாயிற்று. சமீபகாலத்தில் ஏற்பட்டுள்ள கொச்சித்துறைமுகம் வெகு சீக்கிரத்தில் முன் சொன்ன இவ்விரண்டு துறைமுகங்களுக்கும் போட்டியாக முளைக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இதுவரை, ஐரோப்பிய நாடுகளின் வியாபாரப்பொருள்கள், பம்பாய் அல்லது சென்னைத்துறைமுகங்கள் மூலம் தென்னிந்தியப் பட்டணங்களை அடைந்தன. மேல்நாடுகளுக்குச் செல்லும் யாத்திரிகர்களும், பம்பாய் அல்லது கொளும்புத் துறைமுகங்களில் கப்பல் ஏறுவது வழக்கமாக இருந்தது. தென்னிந்தியாவில் விளையும் தேயிலை, ரப்பர், கொப்பரைத்தேங்காய், நிலக்கடலை, பஞ்சு முதலிய பல மூலப்பொருள்கள், சென்னை, பம்பாய், கொளும்பு முதலிய தூரமாகவுள்ள துறைகளில் கப்பல் ஏறுவது வழக்கமாக இருந்தது. கொச்சித்துறைமுகம் பூரணமாக ஏற்படுவதற்குள்ளாகவே, இதன் வழியாகச் செல்லும் யாத்திரிகர்களின் எண்ணிக்கையும் வியாபார ஏற்றுமதி இறக்குமதியும் எதிர்பார்த்த அளவுக்கும் மீறியதாகக் காணப்படுகிறது.

கொச்சிக்குச் செல்லும் யாத்திரிகன் ஒருவன் அந்த ஸம்ஸ்தான எல்லையிலுள்ள ஷோரனூர் ஜங்ஷன் வழியாகப் போக வேண்டும். இந்த ஸ்டேஷன் தென்னிந்தியா ரெயில்வேயில் பாலக்காட்டுக் கணவாயை அடுத்து இருக்கிறது. இங்கிருந்து, எரணுகுளத்திற்குச் செல்லும் ரெயில்பாதை சுமார் 65 மைல் நீளமுள்ளது. சமீபகாலம்வரை குறுகிய பாதை (Metre gauge)யாக இருந்தது; துறைமுக விஸ்தரிப்பு ஆரம்பித்ததும் பெரியதாக (Broad gauge) ஆக்கப்பட்டுவிட்டது.

ஷோரனூருக்கருகிலுள்ள 'பாரதப்புழை' என்னும் ஆறு, பிரிட்டிஷ், கொச்சி ஸம்ஸ்தானங்களுக்கு இடையில் இயற்கை எல்லையாக அமைந்துள்ளது. ரெயிலில் செல்லும்பொழுதே ஸம்ஸ்தானத்தின் இயற்கை வளப்பங்களைக் காண்கிறோம். வடக்காஞ்சேரிக் குன்றுகளுக்கிடையில் ரெயில்பாதை செல்லுகிறது. வழி நெடுக, கண்ணுக்கு எட்டிய தூரம்வரை நெல்வயல்களே காணப்படும். மழைக்காலத்தின் முடிவில் இங்கே செல்லுபவர்கள், எங்கும்

பசுமை நிறமுள்ள நெற்பயிர் நிற்பதையும் உயரமான வயல்களிலிருந்து படிப்படியாக ஒவ்வொரு வயலுக்கும் சலசலவென்னும் ஓசையுடன் ஜலம் விழுவதையும் காற்றில் பயிர்கள் அழகுடன் அசைந்தாடுவதையும் காணலாம்.

சாலக்குடி என்பது இந்த ரெயில்பாதையில் ஒரு முக்கிய ஸ்டேஷன். அருகிலுள்ள மலைகளிலிருந்து வெட்டிய தேக்கு, முதலிய பல ஜாதிமரங்களை இங்கே கொண்டு சேர்க்கச் சிறு டிராம்வே அமைத்திருக்கிறார்கள்.

இங்கிருந்து எரணாகுளம் வரையில் தென்னஞ்சோலைகளையும் பல ஆறுகளையும் உப்பங்கழிகளையும் பார்க்கலாம்.

எரணாகுளந்தான் இருப்புப்பாதை முடிவடையும் ஸ்டேஷன். இதன் நேர் எதிர்கரை கொச்சி. நேர்மேற்கில் அரபிக்கடல் இருப்பதும், அதிலிருந்து பிரிந்து செல்லும் உப்பங்கழி கொச்சிக்கும் எரணாகுளத்திற்கும் இடையே நெடுந்தூரம் செல்வதும் எரணாகுளத்திலிருந்து பார்த்தால் தெரியும்.

இரவில், எரணாகுளத்திலிருந்து மேற்குத்திசையைப் பார்த்தால், அந்தக் காட்சி நம்மைப் பரவசப்படுத்தும். எதிர்கரையில் கொச்சிப்பட்டணத்தின் விளக்குகள் மின்மினிப்பூச்சிகள்போல் ஜ்வலிக்கும். இடையிலுள்ள சமுத்திர ஜலத்தில், சாதாரணப் படகுகள், மோட்டார்ப்படகுகள் முதலியன அங்குமிங்கும் அலையும்போது ஏற்படும் ஒளியின் கூத்து, துறைமுகத்தின் நடுவில் நிற்கும் ஸ்டீமர்களின் பலநிற விளக்குகள், அவையல்லாமல் துறைமுகத்திற்கு வழிகாட்டியாகவுள்ள உன்னத ஸ்தம்பங்களின் விளக்குகளின் ஒளி, இவையாவும் ஏதோ ஒரு ஸ்வப்னலோகத்தில் காணும் கார்த்திகைத் தீபவிழாவைப்போலத் தோற்றும்.

எரணாகுளத்திலிருந்து கொச்சிக்கு உப்பங்கழியைக் கடந்து படகில் செல்லவேண்டும். கொச்சியில் மேற்குப்பகுதி பிரிட்டிஷார் ஆதிக்கத்திலுள்ளது. கிழக்குப்பகுதி ஸம்ஸ்தானத்திற்கு உட்பட்டது. மட்டாஞ்சேரி என்று இந்தப் பாகத்திற்குப் பெயர்.

சமுத்திரத்திலிருந்து உப்பங்கழி வரையில் உள்ள பாகத்தில், பெரிய கப்பல்கள் வராதபடி, அங்கு உண்டாகும் மணற்குன்றுகள் தடுத்து வந்தன. அத்தகைய குன்றுகள் உண்டாகாதபடி அவ்வழியை ஆழமாக்கினால் கொச்சிக்கும் எரணாகுளத்திற்கும் இடையிலுள்ள உப்பங்கழி முதல்தரமான கப்பல் தங்குமிடமாகும் என்று கருதினர். மணலை உறிஞ்சி எடுக்கும் கப்பல்கள் ஓயாமல் வேலை செய்து அத்தடங்கல் நீக்கப்பட்டு, மிகப் பெரிய கப்பல்களும் உள்ளே வருமாறு அவ்வழி ஆழமாக்கப்பட்டது.

வெண்டுருத்தித் தீவுக்கும், கொச்சியின் கிழக்குக்கரைக்கும் இடையில், மணலை நிரப்பி ஒரு செயற்கைத்தீவு உண்டாக்கப்பட்டது. இதற்கு 'வில்லிங்டன் தீவு' எனப் பெயர். துறைமுக ஆபீஸ், சுங்க வரி வசூல் ஆபீஸ், சாமான்கள் இறக்கிவைக்கும் கொட்டகைகள், பிரயாணிகள் தங்கும் விடுதிகள், ரெயில்வே ஸ்டேஷன் முதலியவை இந்தத் தீவில் அமைக்கப்படும். இன்னும் எல்லாக் கட்டிட வேலைகளும் முடிந்தபாடில்லை. ரஸ்தாக்களும் கட்டிடங்களும் தகுந்த முன்யோசனையுடன் அமைக்கப்படுகின்றன. துறைமுக வேலைகள் பூர்த்தியானவுடன் 'வில்லிங்டன் தீவு' இரண்டு பெரிய பட்டணங்களிடையே ஜலத்தின் நடுவில் தனி ஜோதியுடன் விளங்கும். இதர முக்கியத் துறைமுகங்களில் காணப்படுவதுபோல், கப்பல்களின் போக்குவரத்து, சாமான்களின் ஏற்றுமதி இறக்குமதி முதலியவற்றில் ஈடுபடுபவர்களின் கூட்டத்தால் இத்துறைமுகமும் சுறுசுறுப்பாகத் தோன்றும்.

வில்லிங்டன் தீவிற்கும், கொச்சியின் கிழக்குக்கரைக்கும் இடையிலுள்ள விஸ்தாரமான இடத்தில் அநேகம் கப்பல்கள் நங்கூரம் பாய்ச்ச வசதியுண்டு.

கடல் விமானங்களும் கொச்சித்துறைமுகத்தில் தங்கலாம். எவ்வகையான புயற்காற்றாலும் துறைமுகத்திலுள்ள கப்பல்கள் பாதிக்கப்படாவண்ணம் கொச்சிப்பட்டணக்கரை பாதுகாக்கிறது.

எரணுகுளத்திற்கும் வெண்டுருத்திக்கும் இடையே பெரிய பாலம் கட்டி முடித்திருக்கிறார்கள். அதன் வழியாக ரெயில்பாதை துறைமுகத்திற்கு நேராகச் செல்லும். இதனால், பிரயாணிகள் ஸ்டீமரிலிருந்து இறங்கியதும் ரெயிலில் சௌகரியமாக ஏறலாம். துறைமுகத்தின் தென்கோடியில் கப்பல்களைப் பழுது பார்க்கும் 'டாக்'கும் உண்டு.

இத்துறைமுகம் கொச்சி ஸம்ஸ்தானத்தில் ஏற்பட்டபோதிலும், அதன் அமைப்பிலே கொச்சி, திருவாங்கூர், இந்தியா சர்க்கார் முதலிய மூன்று ராஜாங்கத்தாரும் பங்கு எடுத்துக்கொண்டுள்ளனர். எதிர்காலத்தில் துறைமுக நிர்வாகம் ஒரு சபையினிடம் ஒப்பிக்கப்படும். அதில் இம்மூன்று சர்க்கார்களின் பிரதிநிதிகளும், பிரிட்டிஷ் கொச்சி, மட்டாஞ்சேரி, எரணுகுளம் முனிஸிபாலிட்டிகள் கொச்சி வியாபார சபை முதலியவைகளின் பிரதிநிதிகளும் ஸ்தானம் வகிப்பர்.

முற்காலத்தில் போர்த்துக்கேசியர், ஆப்பிரிக்கா கண்டத்தைச் சுற்றி நேராகக் கொச்சி, கள்ளிக்கோட்டை முதலிய இடங்களைத் தான் அடைந்தனரென்று சரித்திரம் கூறுகிறது. எதிர்கால யுத்தத்

தில், மத்தியதரைக்கடலின் வழியாக வியாபாரப்போக்குவரத்துத் தடைப்படக்கூடும். அப்பொழுது, ஆப்பிரிக்காவைச் சுற்றி வரும் கப்பல்களுக்குப் பம்பாய், கராச்சி துறைமுகங்களைவிடக் கொச்சியே மிகச் சமீபமாயுள்ளதென்பது கவனித்தற்குரியது.

ஆப்பிரிக்காவின் கிழக்குக்கோடி தென்கோடி இவற்றிலிருந்து இந்தியாவிற்கு மிகச் சமீபமுள்ள துறைமுகம் கொச்சிதான். சூயஸ் கால்வாயிலிருந்து கீழ் ஆசியா, ஆஸ்திரேலியா, நியூஜீலந்து முதலிய இடங்களுக்குச் செல்லும் நேர்பாதையில் கொச்சித்துறைமுகம் உள்ளது. முழுவசதிகளும் ஏற்பட்டவுடன், கொழும்பிலிருந்து பிரியும் கடற்பாதைகள், கொச்சித்துறைமுகத்திலிருந்து பிரியும் எனலாம்.




உள்நாட்டு வியாபாரம் பெருகவும் கொச்சித்துறைமுகம் உதவும். மைசூர், திருவாங்கூர், சென்னை ராஜதானி முதலிய இடங்களிலிருந்து ஏற்றுமதியாகும் பொருள்கள் பல. இந்த ஸம்ஸ்தானங்களுக்கு மேற்குக்கரையில் மிகச் சமீபமாயுள்ள பெரிய துறைமுகம் கொச்சியேயாகும். ஆகையினால் மைசூர், சத்தியமங்கலம், திருப்பூர், பொள்ளாச்சி, கொல்லங்கோடு, திருச்சூர் வழியாக ரெயில் வசதிகள் ஏற்படுத்தப் பெருமுயற்சி நடைபெறுகின்றது.

துறைமுக ஏற்பாடுகள் பூர்த்தியானதும், எவ்விதம் கீழ்த் திசைத் தென்கோடியில் சிங்கப்பூர் யுத்தகால அவசியத்திற்கு முதன்மையாக இருக்கிறதோ, அதேபோல் இந்தியாவின் மேற்குக்கரைப் பாதுகாப்பிற்குக் கொச்சி ஒரு பிரதான கப்பல் துறைமுகமாகவும் விமானத் துறைமுகமாகவும் ஆகக்கூடும் என்று நாம் நிச்சயமாக எதிர்பார்க்கலாம்.

# மனித தெய்வம்

எஸ். கே. ஸ்வாமி

———

## 1

பகல் வேளையில் கொடிய வெப்பத்தினுல் கருகிப்போன செடிகொடிகளுக்கும் புற்பூண்டுகளுக்கும் இப்பொழுதுதான் சற்று ஆசுவாசம் கிடைத்தது என்று சொல்வதற்கேற்ற முறையில் அஸ்தமன சூரியன் சமுத்திரத்தில் மறைய விரைவாக ஓடிப்போகிருன். மாலைக்காற்று வெகு ஆனந்தமாக வீசுகிறது. வானவீதியில் பக்ஷிஜாலங்கள் கூட்டங் கூட்டமாக இரையெடுத்துக் கொண்டு தத்தம் இருப்பிடத்தை நாடிச் சந்தோஷமாகப் பறந்துபோகின்றன. அந்தி நேரத்தில் மேல் வானத்தில் காணப்படும் சிவந்த மேகக் கூட்டங்கள் இயற்கை யழகை அப்படியே கொட்டுவது போலவே கலாரஸிகனுக்குத் தோன்றும். பழுக்கப் பழுக்கக் காய்ச்சிய இருப்புக் கட்டியைப் போன்ற சூரியப் பிழம்பு சமுத்திரத்தில் விழுவதாயிருந்தால் சமுத்திர ஜலம் வற்றிப் போகுமோ என்றும் தோன்றிவிடும்.

பச்சைப் பசேலென்று காணப்படும் அழகிய வயல்களின் காட்சி மாலை வேளையில் மனேரம்மியமானது. அந்த வயல்களின் நடுவே காணப்படும் பெரிய திட்டில் ஓர் ஏழை மனிதன் தனது பக்கத்தில் முளையடித்துக் கட்டியிருக்கும் பசுவைத் தட்டிக்கொடுக்கிருன். அவன் பெயர் கந்தப்பன். அதோ கந்தப்பன் தனது அருமையான பூவாலிப் பசுவை மறுபடியும் தடவிக் கொடுக்கிருன். அந்தப் பசுவும் அவனுடைய தடவுதலில் மிக்க பிரியம் கொண்டது போலவே தலையை நீட்டி நீட்டிக் கொடுக்கிறது. சில நேரம் அந்த ஸாது மிருகம் கந்தப்பனை இரக்கமுடன் பார்க்கிறது. கந்தப்பன் பசுவை அன்பாக முத்தமிடுகிருன். ஹா! எவ்வளவு வாத்ஸல்யம்! இப்படியாக நெடுநேரம் பசுவையே பார்த்துப் பார்த்து ஆனந்தம் கொள்ள அவ் வேழைக்கு அவகாசமுண்டா? பசுவுக்குப் புல் வெட்டுகிருன்; பின்னும் பசுவைப் பார்க்கிருன். மறுபடியும் அவசரம் அவசரமாகப் புல்வெட்டுகிருன். வெட்டிய புல்லைப் பார்க்கிருன். போதுமாவென்று நினைக்கிருன் போலும். சாக்கு நிறைந்துவிட்டது. புல்வெட்டிய களைப்பினுல் கந்தப்பன் சற்றுப் பலவீனமடைந்தான் என்ருலும் 'இன்று அதிகமாகப் புல் வெட்டி விட்டோம்' என்ற எண்ணமானது அவனைப் பரம சந்தோஷத்திற்குள்ளாக்கியது. உடனேயே ஒருவிதமான கர்வம் கொண்டுவிட்டான். தனக்குச் சரி நிகரானவர் யாருமே யில்லை யென்ற பாவத்தினுல் தலை நிமிர்ந்து நின்ருன். பிறகு, சாக்கைத் தோளில் சுமந்துகொண்டு பூவாலிப் பசுவைக் கையில் பிடித்துக் கொண்டு தில்லானுப் பாட்டுப் பாடிக்கொண்டே கந்தப்பன் உற்சாகமாக வீட்டை நோக்கி நடந்தான். சற்று நேரத்தில் தன் யஜமானனுடைய வீட்டை அடைந்தான். நிரம்பப் புல் கிடைத்துவிட்டதால் அன்று யஜமானன்

வீட்டில் வெண்டைக்காய்ச் சாம்பாரும் நிறையப் பழைய சாதமும் கிடைக்குமென்று நினைத்த கந்தப்பனின் சந்தோஷத்தைச் சொல்லமுடியாது. யஜமான்வீட்டு வெளிமுற்றத்தில் தொப்பென்று புல் நிரம்பிய சாக்கைப் போட்டான். அதன்மீது கம்பீரமாக உட்கார்ந்தான். திடீரென்று கந்தப்பனுடைய கண்களைப் பின்புறமாக யாரோ பொத்தினர்.

"இது என்ன தொல்லை?" என்று கோபமாகக் கூறிய கந்தப்பன் பலாத்காரமாகத் தன் கண்களைப் பொத்தின கரங்களை அப்புறப்படுத்தி விட்டான். என்ன ஆச்சரியம்! கந்தப்பனுடைய மனம் பதறியது. ஏன்? ஏழைக் கந்தப்பனை ஏமாற்றிவிட்டதான எண்ணத்துடன் கம்பீரமாகத் தோன்றிய ஒரு பெண் குழந்தை பல்லைக் காட்டிக்கொண்டு நிற்கிறது.

"கந்தா! உன்னை ஒருநாளும் ஏமாற்றவே முடியாது என்று அன்றைக்கு ஜம்பம் பேசினையல்லவா? பார்த்தாயா என் சாமர்த்தியத்தை?" என்று படபடவென்று கூறிக்கொண்டே மறுபடியும் சிரித்தது அந்த அழகிய பெண் குழந்தை. சுமார் பத்து அல்லது பதினொரு வயதுள்ள அந்தக் குழந்தையைக் கந்தப்பன் அப்படியே இரு கரங்களாலும் வாரியெடுத்தான். உச்சி மோந்தான். அடுத்த நிமிஷத்தில் அக்குழந்தை தன்னை விடுவித்துக் கொண்டு மின்னல்போலப் பாய்ந்து வீட்டுக்குள் மறைந்துவிட்டது.

அக்குழந்தையின் பெயர் ருக்மிணி. கந்தப்பனின் யஜமானராகிய சோமசுந்தர முதலியாரின் ஒரே புதல்வி. சோமசுந்தர முதலியார் மஹாதானபுரம் என்ற அந்தக் கிராமத்தில் ஒரு மிராசுதாரர் என்ற நிலைமையில் வாழ்ந்து வருகிறார். நல்ல படிப்பாளி; தர்மசீலர். அவ்வூர் ஜனங்கள் முதலியாரை அதிகமாக மதித்துவந்தார்கள். அவ்வூர் மஹாதேவர் ஆலயத்தின் தர்மகர்த்தாவும் அவரே. அவ்வூரில் பெண்களுக்காக இங்கிலீஷ் மத்திய ஸ்கூல் ஏற்படுத்துவதற்கு முதலியாரே முக்கிய காரணஸ்தராவார். இதனால் முதலியாருக்குப் பெண்கல்வியில் எவ்வளவு தூரம் ஆசை யிருந்ததென்பதை அறிந்து கொள்ளலாமல்லவா?

## 2

நான்கு வருஷங்கள் கடந்தன. ருக்மிணி பெண் பாடசாலையில் படிக்கிறாள். கல்வியில் பெரிதும் ஆர்வங்கொண்ட ருக்மிணியை ஆசிரியைகளெல்லாரும் மிகவும் புகழ்ந்து பாராட்டி வந்தார்கள். சோமசுந்தர முதலியாருக்குத் தம் மகள்மீது அளவிலா அன்பு. அவள் கல்வியில் காட்டி வரும் உற்சாகத்தைக் கண்டு அவருக்குக் குழந்தையைப் பி.ஏ., வரையிலும் படிக்கவைக்க வேண்டுமென்று ஆசை. 'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு?' என்ற குருட்டுக் கொள்கை உடையவரல்ல அவர்; வேதகாலத்திலே பெண்கள் கல்விக் களஞ்சியங்களாக இருந்திருக்கிறார்களென்பதை அறிந்தவர். யாராவது, 'பழைய காலம் பெண்களுக்குக் கல்வியளிக்காத கொடுங் காலம்' என்று சொல்லிவிட்டால் முதலியாருக்குப் பெருங் கோபம் வந்துவிடும். தந்தையும் மகளும் மிகவும் அன்யோன்யமாக வாழ்ந்துவந்தார்கள்.

ஒரு நாள் பள்ளிக்கூடம் விடும் நேரம். வெளியே வீதியோரத்தில் கோச்சுவண்டிகளும், மாட்டு வண்டிகளும் வரிசை வரிசையாக நிற்கின்றன.

கந்தப்பனும் வண்டிக்காரர்கள் கூட்டத்தில் நிற்கின்றான். மணி அடித்தாய் விட்டதாவென்று வாசலில் நின்றுகொண்டு பார்க்கிறான். பெண் பாடசாலை யாதலால் கந்தப்பன் உள்ளே போகக்கூடாதல்லவா? 'இதென்ன அல்லி ராணியார் காலமா?' என்று சில சமயம் கந்தப்பன் கருதியதுண்டு. பெண் குழந்தையைப் பள்ளியில் சேர்ப்பதற்குக் கூடப் பிரதம ஆசிரியையின் உத்தரவு பெற்றுத்தான் தந்தை பாடசாலைக்குள்ளே போகலாம். அவ்வளவு கண்டிப்பான உத்தரவு. மணி நான்கு அடித்தது. கந்தப்பன் தனது ஒற்றை மாட்டு வண்டியைத் தயாராகப் பள்ளிக்கூட வாசலில் கொண்டுவந்து நிறுத்தினான். குடு குடு வென்று ஓடி வந்த ருக்மிணி சட்டென்று வண்டியி லேறிக்கொண்டு கந்தப்பனோடு பர பரவென்று சொல்லலானாள்: "கந்தா! அதோ பார்த்தாயா! அந்தக் குதிரைவண்டி நம் தளவாய்த் தெரு பங்கஜத்தி னுடையது. நேற்றுத்தான் அவள் அப்பா குதிரை வாங்கிக் கொடுத்தாராம். எந்த வண்டியும் அதற்கு முன்னால் போகமுடியாதாம்! இன்னிக்குக் கிளா ஸில் என்னிடம் வாதுக்கு வந்துவிட்டாள். ரொம்ப டம்பம் பேசறாள். என்னவானாலும் இன்னிக்கு மட்டும் நம் வண்டிக்கு முன்னாலே அவர்கள் வண்டியை விடக்கூடாது. உன் சாமர்த்தியத்தைப் பார்க்கணும். ஓட்டு... ஓட்டு..."

**கந்தப்பன்:** ஆஹா! இவ்வளவுதானா ருக்கு? கொஞ்சங்கூட நீ விசனப்படாதே. மோட்டார் வந்தாலுங்கூட இன்னிக்கு நம்மவண்டிக்கு முன்னால் போகவிடமாட்டேன். வண்டி ஓட்டுவதில் கந்தப்பனுக்கு மிஞ்சிய பயல் இந்த ஊரில் இருக்கிறானா? உம்......பார்க்கட்டும்.

**ருக்மிணி:** கந்தா! அதோ! பங்கஜம் வண்டியிலேறிவிட்டாள். காளையை விரட்டு!

**கந்தப்பன்:** ருக்கு! நாம் பேசியதையெல்லாம் இந்தக் காளை தெரிந்து கொண்டது. நம் பூவாலிப் பசுவின் குழந்தையல்லவா இது? அதிருக் கட்டும். ருக்கு, இன்று நான் ஜெயித்து விட்டால்.........

**ருக்மிணி:** உனக்கு ஓர் அபூர்வ வஸ்துவைத் தருவேன்.

கந்தன் விர்ரென்று விரட்டி விட்டான் புள்ளிக் காளையை. புள்ளிக் காளையும் புள்போலப் பறந்தது. அந்தப் புள்ளிக் காளையைக் கந்தப்பன் குழந்தையைப்போல் வளர்த்து வந்தான். அவன் சொன்னதுபோல் புள்ளிக் காளை எல்லாம் தெரிந்துகொண்டதோ என்னவோ ரெயில் வேகத்தில் கிளம்பிவிட்டது. ருக்மிணிக்கு வண்டிக்குள்ளே இருக்கக்கூடப் பயமாயிருந் தது; என்றாலும் பங்கஜத்தின் ஜம்பத்தை அடக்கவேண்டுமென்று பல்லைக் கடித்துக்கொண்டு இருந்துவிட்டாள். குதிரைவண்டிக்காரன் ஆனமட்டும் பார்த்தான்; மாட்டுவண்டிக்கு முன்னால் போகமுடியவில்லை. பங்கஜம் பல்லைக் கடித்தாள். வண்டிக்காரனைத் திட்டினாள். என்ன பிரயோஜனம்? "நான் என்ன செய்யட்டும், அம்மா? குதிரை ஓடாவிட்டால் நான் என்ன செய்வேன்!" என்று சொன்னான். ருக்மிணியின் உற்சாகத்தைச் சொல்ல முடியாது. முப்பத்திரண்டு பற்களையும் காட்டி ஹீ ஹீ என்று சிரித்தாள். பங்கஜத்தின் முகத்திலோ ஈ ஆடவில்லை; சும்மா இருந்தாள். ருக்மிணி,

மிக்க கர்வத்துடன் வண்டியிலிருந்து எட்டி எட்டிப் பார்த்தாள். இந்த வேளைகளில் பங்கஜம் தலையைத் தொங்கவிட்டாள். ஒருத்திக்கு உற்சாகம், மற்றொருத்திக்கு விசனம்.

அன்று விரைவில் வீடுவந்து சேர்ந்த ருக்மிணியை வாசலில் வந்து அழைத்துக்கொண்டு போவதற்கு அவள் தாய் வழக்கம்போல நிற்கவில்லை. காரணம், வழக்கத்திற்கு மாறாக வெகுசீக்கிரம் வந்துவிட்டாளல்லவா? வீட்டுத் திண்ணையில் ஒருவருமே இல்லை. கந்தப்பனுக்கு மிக்க சந்தோஷம். புள்ளிக் காளையின்மீது அளவுகடந்த வாஞ்சை. அருமையாகக் காளையைத் தட்டிக்கொடுத்துவிட்டு ருக்மிணியின் புத்தகங்களையும் எடுத்துக்கொண்டு அங்கே வந்து கம்பீரமாக நின்றான். திடீரென்று ருக்மிணி அவனுடைய கன்னங்களில் ஒரு வீரனுக்குரிய இரண்டு முத்த முத்திரைகளைப் பதித்து விட்டு வீட்டுக்குள்ளே பாய்ந்து விட்டாள். அன்று ஜயித்ததற்கு வண்டிக் காரக் கந்தப்பனுக்கு அளிப்பதாகச் சொல்லியிருந்த அபூர்வ வஸ்து இதுதான் போலும்! பதற்றங்கொண்ட வண்டிக்காரன் தலைநிமிர்ந்து பார்த்தான். வீட்டுக்குள்ளே தாய்க்குப் பக்கத்தில் நின்றுகொண்டு ருக்மிணி குறுநகை புரிந்தாள். ஆம், அந்த விஷமப் பெண்ணின் குறும்புச் சிரிப்புக்குப் பரம ஏழையான ஒரு வேலைக்காரன் என்ன செய்வான்? தன்னையும் மறந்து அவனும் சிரித்துவிட்டான். வேறு என்னதான் செய்யமுடியும்?

## 3

ருக்மிணிக்கு இப்பொழுது வயது பதினைந்து ஆகிவிட்டது; அதாவது பக்குவமடைந்த 'பெரியமனுஷி' ஆகிவிட்டாள். மகள் 'பெரிய மனுஷி' யான போதிலும் பாடசாலைக்கு அனுப்பவேண்டுமென்றுதான் முதலியாருக்கு எண்ணமிருந்தது. என்ன செய்வார்! அவர் மனைவியும் தாயும் ஒரே பிடிவாதமாக, 'ருதுவான பெண்ணைப் பாடசாலைக்கு அனுப்புவதென்பது தர்மத்திற்கே விரோதமானது' என்று கூறினார்கள். முதலியார் எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் பயனில்லை; கடைசியாகப் பெண்ணை வீட்டில் வைத்துப் படிப்பிக்கலாமே என்று நினைத்து ருக்மிணியைப் பாடசாலைக்கு அனுப்புவதை நிறுத்திவிட்டார். இயற்கையிலேயே முதலியார் சாந்த சுபாவமுடையவர். 'குழந்தையைப் படிப்பிக்கத்தான் வேண்டும்; அது வீட்டிலிருந்தும் ஆகலாமல்லவா?' என்று கருதி இதற்காகக் குடும்பத்துக்குள் கலகத்தை விளைவிக்க அவர் விரும்பவில்லை. வண்டிக்காரன் கந்தப்பன் ருக்மிணியைவிடப் பத்து வயது மூத்தவன். ருக்மிணி ஒரு செல்வவந்தனின் ஏக புத்திரி. கந்தப்பன் அநாதையான பரம தரித்திரன். ருக்மிணியின் வீட்டு வேலைக்காரன். கந்தப்பனை, முதலியார் மிகவும் அன்புடன் நேசித்து வந்தார். அவனுடைய நற்குண நற்செய்கைகளைப் பற்றி எல்லோரும் திருப்தியே அடைந்தார்கள். ஏழையென்றாலும் ஒழுக்கத்தினின்றும் வழுவாத உத்தமன். "வறுமைதான் சகல நல்ல குணங்களையும் உற்பத்திசெய்வது" என்று இயேசுநாதர் சும்மாவா சொல்லியிருக்கிறார்? கந்தப்பனுக்குப் படிப்பில்லை. பள்ளிக்கூடப் படிப்புத்தான் இல்லையென்று சொல்லலாமே தவிர உலகப் படிப்பு அவனுக்குண்டு.

கந்தப்பன், வண்டி ஓட்டும் வேலைக்காரனாயிருந்தபோதிலும் நல்ல சுபாவமுடையவன்; கருணையுள்ளம் படைத்தவன்; தீர சித்தன். எப்படியோ அவனுடைய இதயத்தின் அடித்தட்டில் ருக்மிணியைப் பிரதிஷ்டை செய்து சதா சர்வகாலமும் பூஜை செய்து வருகிறான். இது ருக்மிணிக்குத் தெரியாது. இந்த எண்ணத்தை மாற்றப் பலதடவை பகீரதப் பிரயத்தனம் செய்து பார்த்தும் கந்தப்பனால் முடியவில்லை. இது காதலா அல்லது அன்பின் விளைவா என்பதெல்லாம் அவனுக்குத் தெரியாது. கவிஞர்கள் காதல் என்று சொல்வார்கள்போலும். காதலுக்கு உயர்வு தாழ்வில்லையென்பது உண்மைதானோ என்னவோ? சிறு பிராயத்தில் ருக்மிணி பள்ளிக்குப் போகையிலும் வருகையிலும் கந்தப்பனிடம் பல சிறு கதைகளும், வீரர்களின் சரிதைகளும் சொல்லிக் கொடுத்திருக்கிறாள். இந்தக் கதைகளைப் பற்றித் திரும்பத் திரும்பக் கந்தப்பன் யோசித்ததுண்டு. அப்பொழுதெல்லாம் ருக்மிணியின் விஷமச் சிரிப்பை நினைத்து நினைத்து உவகை கொள்வான். தனியே இருக்கையில் ருக்மிணியைப் பற்றிய நினைப்பு அவன் மனத்தில் எப்படியோ புகுந்துவிடும். பாடசாலையில் என்ன நடைபெற்றபோதிலும் ருக்மிணி கந்தப்பனிடம் ஒளியாமல் சொல்லிவிடுவாள். கந்தப்பனிடம் கூறாத ரகசியம் எதுவும் ருக்மிணியிடம் இல்லை. அவ்வளவு நம்பிக்கை. ருக்மிணியின் தாய் ஒரு நாள் தன் மகளை அழைத்து மிகவும் கண்டிப்பாக, "வேலைக்காரனிடம் சிரித்து விளையாடாதே" என்று சொன்னதையுங்கூட அடுத்த நிமிஷத்தில் அவனிடம் சொல்லிவிட்டாள். கந்தப்பனை எவராவது ஏளனமாகப் பேசுவதாயிருந்தால் ருக்மிணிக்கு அசாத்யமான கோபம் வந்துவிடும்.

இப்பொழுது அவள் 'பெரிய மனுஷி' யாகிவிட்டபடியால் வீட்டை விட்டு வெளிவருவதற்கில்லை. மேலும் கந்தப்பனிடம் பேசுவதற்குக்கூடச் சந்தர்ப்பம் கிடையாது. முதலியார் தம் மகளுக்குக் கல்யாணம் செய்வதற்கான காரியத்தில் கவனத்தைச் செலுத்தினார். தப்பித் தவறிக் கந்தப்பனைக் கண்டுவிட்டால் ருக்மிணி தலை குனிந்தவண்ணமாகவே ஓடி மறைந்து கொள்வாள். கந்தப்பனின் மனம் பலவித எண்ணங்களால் குழப்பப்பட்டது. "எட்டாத பழத்திற்குக் கொட்டாவி விடாதே" என்று எவரோ ஒருவர் மனத்துக்குள்ளிருந்து சொல்வதுபோல அவனுக்குத் தோன்றும். ஆனால் அவளைக் கண்டுவிட்டால் எங்கிருந்தோ ஒருவித ஆனந்தம் அவனுக்குப் பிறந்துவிடும். இது எதனால் என்று அவனுக்குத் தெரியவாராது. இதைப்பற்றி அவன் சிந்திக்கவும் இல்லை; சிந்தித்தால் அவனுக்குத் தெரியப்போகிறதா?

இவ்வாறு பல நாட்கள் சென்றன.

## 4

அன்று ருக்மிணியின் ஜன்மதினம். இரவு பன்னிரண்டு மணி வேளை. எங்கும் ஒரே இருட்டு. கந்தப்பன் வழக்கம்போல வெளிக்கூடத்தில் சாக்கை விரித்து அயர்ந்து நித்திரை செய்துகொண்டிருக்கிறான். அவனது நித்திரைக்குப் பொல்லாத கொசுக்கள் இடையிடையே பங்கம் விளைத்தன. நேரம் ஆக ஆகக் கொசுக்கடியும் அதிகரிக்க ஆரம்பித்தது. போர்த்திக் கொள்வதற்குத் துப்பட்டியும் இல்லை. உள்ளே கொசுவலை

போடப்பட்ட மஞ்சத்தில் மிராசுதார் சயனித்திருக்கிறார். அவர் குழந்தை ருக்மிணியும் அப்படியே. வெளியே ஏழை கந்தப்பன் படுக்கப் பாயில்லாமல் குளிரில் போர்த்திக் கொள்வதற்குக்கூடத் துப்பட்டியில்லாமல் தேகத்திலுள்ள ரத்தத்தைக் கொசுக்களுக்கு அர்ப்பணம் செய்துவிட்டுக் கிடக்கிறான். எவ்வளவு வித்தியாசம்! ஆண்டவனின் விசித்திரந்தான் என்ன! காலை முதல் மாலை வரை வேலைசெய்து அயர்ந்து தூங்கலாமென்றால் பாழும் மூட்டைகளும் கொசுக்களும் விடமாட்டோம் என்கின்றன. என்ன செய்வான் பாவம்! அச்சமயம், கதவைத் திறந்துகொண்டு ஏதோ ஓர் உருவம் வருவதைக் கண்டான். அவ்வுருவம் மெல்ல அடிமேல் அடிவைத்து அவன் சமீபம் வந்துவிட்டது. கந்தப்பன் பிரமை கொண்டான்; பரபரப்புடன் அங்குமிங்கும் பார்த்தான். அதற்குள், "கந்தா! சத்தம் போட்டுவிடாதே" என்ற ருக்மிணியின் குரல் மெள்ளக் கேட்டது. வியப்பும் திகைப்பும் அவன் மனத்தில் தோன்றின. ஏழை கந்தப்பனுக்கு ஒன்றுமே விளங்கவில்லை யென்றாலும் ருக்மிணியின் ஆணையைக் கடக்க அசக்தனாகவே காணப்பட்டான். அவன் மேனி 'கிடு கிடு' என ஆடியது. மயிர் சிலிர்த்தது. ருக்மிணி விம்மி விம்மி அழுதாள். கந்தப்பனின் இருகரங்களையும் பிடித்துக்கொண்டு மீண்டும் அழுதாள். கந்தப்பன் அப்படியே நின்றான்.

ருக்மிணி: கந்தா! எனக்கு ஓர் அபேக்ஷை. ஆம், உன்னுடைய ருக்குவின் அபேக்ஷையை நிறைவேற்றுவாயா?

கந்தப்பன்: என் தங்கமே! நீ ஏன் என்னைச் சந்தேகிக்கிறாய்? உனக்கு அணுவளவு சங்கடம் வருவதாயிருந்தாலும் என்னால் பொறுத்துக் கொண்டிருக்க முடியுமா? என்ன அம்மா உனது ஆசை? சொல் சீக்கிரம். உன் அடிமையல்லவா இந்த ஏழை?

ருக்மிணி: கந்தா! இன்னுமொரு தடவை சொல்லு. எனது மனம் குளிர்ந்துவிட்டது. என்னுடைய ஜீவனை நீ ரக்ஷிப்பாயா? இதுதான் எனது அபேக்ஷை.

கந்தப்பன்: உனக்காக எதையும் செய்யத் தயார். அம்மா! விசனப்படாதே. என்ன செய்யவேண்டும்? உனக்கு என்ன ஆபத்து? சொல் சீக்கிரம்.

ருக்மிணி: எனக்குக் கல்யாணம் பண்ண நிச்சயித்து விட்டார்கள்.

கந்தப்பன்: அப்படியா! ரொம்ப சந்தோஷம். உன் கல்யாண விஷயத்தில் யார் தடை விதித்தார்கள்?

ருக்மிணி: உனக்குச் சந்தோஷமா? இந்தப் பாழும் கல்யாணம் வேண்டாமென்று எவ்வளவோ சொல்லியும் அம்மாவும் அப்பாவும் சம்மதிக்கிறார்களில்லை.

கந்தப்பன்: ருக்கு, உனக்கென்ன பயித்தியமா? கல்யாணம் செய்துகொண்டு மாப்பிள்ளையும் நீயும் சுகமாய் இருங்கள்.

ருக்மிணி: (கோபமாக) விவாஹமா? எனக்கா? அதைப்பற்றி உன்னிடம் கேட்க வரவில்லை. நான் கல்யாணம் செய்துகொள்வதாயிருந்தால் உன்னையே கல்யாணம் செய்து வாழ்வேன். இன்றேல் இறப்பேன்.

அவள் மீண்டும் அழத் தொடங்கிவிட்டாள். கந்தப்பனின் கண் கலங்கியது. எவ்வளவோ சமாதான வார்த்தைகள் சொன்னான். அவள் கேட்கவில்லை. கந்தப்பன் மீண்டும் மீண்டும் தனது ஏழைமை நிலைமையை நன்கு விளக்கிக் கூறி அவளுக்கு ஏற்ற புருஷன் தான் அல்லவென்றும் எப்படியாவது ருக்மிணி இன்பமாய் வாழ்வதைக் கண்ணால் பார்த்தாலே போதுமென்றும் கூறி அழுதுவிட்டான். இருவரும் நீண்ட நேரம் அழுதார்கள். காதலுக்கு உயர்வு தாழ்வு இல்லையல்லவா? கடைசியில் ருக்மிணியை விவாஹம் செய்து கொள்வதாகக் கந்தப்பன் உறுதி கூறினான். அவளுடைய அழுத முகம் பளிச்சென்று மாறிவிட்டது. ஆனந்தம் களிநடனமாடியது. இருவரும் அடுத்த நாளிரவு அங்கிருந்து எவருக்குமே தெரியாமல் வெளியூருக்கு ஓடிவிட வேண்டுமென்று பேசிமுடித்துவிட்டுப் பிரிந்தார்கள்.

அடுத்த நாளிரவு. இருள்மயம். ருக்மிணிக்குத் தூக்கம் வரவேயில்லை. கந்தப்பனைப் பற்றியே நினைத்துக் கொண்டிருக்கிறாள். படுக்கையில் அங்குமிங்கும் புரண்டு பார்த்தாள். கடைசியாக எழுந்திருந்து சாய்ந்து இருக்கிறாள். தன்னை அழைத்துக் கொண்டுபோகக் காதலன் வருவான் வருவான் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் பெண்மணிக்கு எப்படித்தான் உறக்கம் வரும்? காலடிச் சப்தம் கேட்டது. திடீரென்று எழுந்தாள். கூர்ந்து பார்த்தாள். முகமூடியணிந்த ஓர் உருவம் அறைக்குள் பிரவேசித்தது. பல்லை நறநறவென்று கடித்துக்கொண்டு அந்தக் கோர உருவம் கைகளை நீட்டி ருக்மிணியின் கழுத்தைப் பிடித்து நெருக்கியது. பயத்தால் அவளுடைய நெஞ்சம் பதறியது. அடுத்த நிமிஷம் அவளுடைய தங்கச் சங்கிலியை அறுத்துக்கொண்டது அவ்வுருவம். பிறகு கழுத்துப் பிடியை விட்டுவிட்டது. ருக்மிணி ஓவென்று கதறினாள். முதலியார் சத்தம் கேட்டு எழுந்தார். லாந்தரும் கையுமாக அங்கே ஓடிவந்தார். அக்கம் பக்கத்திலுள்ளவர்களும் கூடிவிட்டார்கள். அந்த உருவம் நின்ற இடத்தை விட்டு ஓர் அடிகூட எடுத்து வைக்கவில்லை. கையில் தங்கச்சங்கிலியுமிருக்கிறது. எல்லோரும் கள்வனைக் கையும் களவுமாகப் பிடித்துக்கொண்டார்கள்! திருடன் ஓடவில்லையென்றால் பிடித்துக்கொள்வது பிரமாதமான காரியமா? முகமூடி அப்புறப் படுத்தப் பட்டது. திருடனைக் கண்டாள் ருக்மிணி. அப்படியே மூர்ச்சித்து விட்டாள். கந்தப்பன்தான் அந்தக் கள்வன். முதலியார் கல்லாய்ச் சமைந்து விட்டார்.

## 5

பல வருஷங்கள் பறந்தன. ஒரு நாள் ருக்மிணி அம்மாள் தனது வீட்டு வாசற்படியில் நிற்கிறாள். ‘ஏன் இன்னும் அவர்கள் வரவில்லை? மணி ஐந்து இருக்குமே. ஒரு வேளை பார் அஸோஸியேஷனில் ஏதாவது கூட்டம் இருக்குமோ? அப்படியிருந்தால் என்னிடம் முன்பே சொல்லிவிட்டுத் தானே போவார்கள்?’ என்று பலவாறு சிந்தித்துக்கொண்டே அங்குமிங்கும் நடந்தாள். கணவர் வரவை எதிர்பார்த்தவண்ணமாகவே வெளியே பார்க்கிறாள்.

நீண்டதாடியும் சடையுடைய தலைமயிரும் ஒட்டிய கன்னங்களும் அமையப்பெற்ற ஓர் உருவம் மலினமான கிழிந்த ஆடையுடன் ருக்மிணி அம்மாளை நோக்கி வருகிறது. இவன் ஒரு பிச்சைக்காரனாயிருக்கலா மென்று அவள் நினைத்தாள். அந்த மனிதன் அவளைச் சமீபித்துத் தாழ்ந்த குரலில், "ருக்மிணி, என்னை நீ அறியமாட்டாயா?" என்று கேட்டான். ருக்மிணி அம்மாளுக்கு அந்த மனிதன் தன் பெயரைச் சொல்லி அழைத்ததைக் கண்டு அளவிலாக் கோபம் ஏற்பட்டது. "நீ யாராயிருந்தால் எனக்கென்ன? என் கையில் ஒன்றும் இல்லை. அவர்கள் வரட்டும். நாளை வா. ஏதாவது தருகிறேன். போ" என்று படபட வெனச் சொன்னாள். அந்த மனிதன் அவளுடைய முகத்தைக் கூர்ந்து நோக்கினான். மெள்ளச் சிரித்தான். ருக்மிணியின் மகள் ஜயா ஓடிவந்து, "அம்மா, இவன் யார்?" என்று கேட்டாள். அதற்கு அவள், "இவன் கள்ளன். என்னுடைய தங்கச் சங்கிலியைக் களவாடியதற்காகச் சிறையிலடைக்கப்பட்டவன்" என்று ஜயாவின் காதோடு காதாகக் கூறினாள்.

இதை அவன் கேட்டுவிட்டான். பல மாறுதல்கள் அவனுடைய முகத்தில் காணப்பட்டன. மிகவும் சாந்தமாக அவன் கூறலானான்:

"ஆம், நான் கள்வன்தான். சந்தேகமில்லை. இந்த வீட்டில் பிரவேசிப்பதற்கே யோக்கியதை இல்லாத அதமன். என் அருமைக் குழந்தையே! கள்வனா நான்? அந்தோ! உன்னுடைய நகைகளை நான் ஏன் திருடவேண்டும்? அப்படியானால் அன்றிரவு அப்படியே சங்கிலியைக் கையில் வைத்துக் கொண்டு நின்றிருப்பேனா? உன்னுடைய எதிர்கால க்ஷேமத்தை எண்ணியே அப்படிச் செய்தேன்; அல்லாமல் உன்னுடைய விருப்பப்படி நான் உன்னை விவாஹம் செய்துகொண்டிருந்தால் நீ எவ்வளவு கஷ்டமடைந்திருப்பாய்? கேவலம் ஒரு வண்டிக்காரனுக்கு—பரம தரித்திரனுக்கு—மனைவியாக வறுமைக்குழியில் வீழ்ந்து சொல்லமுடியாத துன்பம் அனுபவிக்க வேண்டிவருமல்லவா? இப்பொழுது பாரிஸ்டர் கமலாகரன் மனைவியென்றால் எப்படி இருக்கிறது? இவை யெல்லாவற்றையும் தீர்க்கமாக யோசித்தே நான் கள்வன் ஆனேன். என்னைத் திருடன் என்று நிதர்சனமாக நீ அறிந்துவிட்டால் என்னை வெறுப்பாய் என்றே அவ்வாறு நடந்து கொண்டேன். அம்முயற்சியில் வெற்றியு மடைந்தேன். உலகம் என்னைத் திருடன் என்று கருதிவிட்டது. ஆம், அதைப்பற்றி இந்தக் கந்தப்பனுக்குக் கவலையில்லை. ஆனால் நீ மாத்திரம் சத்தியத்தைத் தெரிந்து கொள்வதற்காக இவ்வளவும் கூறினேன். நேற்றுத்தான் சிறையிலிருந்து விடுவிக்கப்பெற்றேன். உன்னைப் பார்க்கவே விரைந்து வந்தேன்" என்று பதற்றத்துடனும் ஒருவிதச் சந்தோஷத்துடனும் கூறிய கந்தப்பன் ஜயாவை இரு கைகளாலும் வாரியெடுத்து உச்சி மோந்தான்.

ஜயா மறுபடியும், "இவன் யார் அம்மா?" என்ற கேள்வியைக் கேட்டாள். ருக்மிணியின் கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக வழிந்தது. அழுதுகொண்டே அவள், "ஜயா, இவர் மனித சொரூபத்தில் விளங்கும் தெய்வம்" என்று சொன்னாள்.

---

# மலைபோல வந்த வினை

'சங்கரராம்'

---

சிவப்பிரகாச முதலியார் பிறந்தது வளர்ந்தது எல்லாம் சென்னபட்டணமே. அவருக்குப் பிதுரார்ஜிதமாகப் பதினைந்து வீடுகள் உண்டு. அவர் வசித்து வந்த வீடு, தோற்றத்தில் அரண் மனைபோலிருந்தாலும், அவ்வளவு காற்றோட்டமானதல்ல. ஆனால் நான்கு தலைமுறையாகப் பழகிவந்த இடமாகையால் அதை விட்டுப் போக அவரைச் சேர்ந்தவர்களுக்கு இஷ்டமில்லை. அதனால் அவர் பவழக்காரத் தெருவிலேயே அடங்கிக் கிடக்கவேண்டி யிருந்தது.

கிறிஸ்டியன் காலேஜில் படித்து, பி.ஏ., பட்டம் பெற்றுச் சர்க்கார் உத்தியோகத்தில் அமர்ந்து, பெரிய பதவிக்கு வரக்கூடிய யோக்கியதைகளை அவர் சம்பாதித்துக்கொண்டார். அப்படி யிருந்தும் அவருக்கு 'ப்ரமோஷன்' தட்டித் தட்டிப் போனதற்குக் காரணம் அவரிடத்திலிருந்த ஒரு கெட்ட பிடிவாதந்தான்: என்ன வானாலும் சரி, சென்னபட்டணத்தை விட்டு மட்டும் வெளியே போக முடியாதென்று அவர் சொல்லி விட்டார்.

நாளடைவில் அவருடைய சம்பளம் சிறிது சிறிதாக உயர்ந்து வயதும் நாற்பத்தைந்து ஆகிவிட்டது. அதற்குத் தகுந்தாற்போல் ஸம்ஸாரமும் வலுத்துவிட்டது. இரண்டு பெண்களும் மூன்று பிள்ளைகளும் முதலியாரையும் அவர் மனைவியையும் திணறச் செய்தனர்.

ஆனால், முதலியாருடைய செல்வத்திற்கு மட்டும் யாதொரு குறைவும் இல்லை. அது நாளுக்கு நாள் விருத்தியடைந்து கொண்டே வந்தது. தம் சம்பளத்தை ஒரு பொருளாக முதலி யார் எப்பொழுதுமே நினைக்கவில்லை. மூத்த பெண்ணின் கலியா ணத்திற்காக வெகு பாடுபட்டு, நல்ல மருமகனைத் தேடிப் பிடித்துக் கலியாணத்தையும் மிகவும் விமரிசையாக அவர் நடத்தினர்.

கலியாணத்திற்காக எடுத்த 'லீவி'ல் இன்னும் கொஞ்சம் பாக்கியிருந்தது. முதலியார் இக்காலத்தை இஷ்ட மித்திர பந்துக் களுடன் வெகு சந்தோஷமாகக் கடத்தி வந்தார்.

இப்படியிருக்க, ஒரு நாள் காலையில் அவருக்கு மேல் அதிகாரியான வெஸ்டன் என்னும் ஓர் ஐ. ஸி. எஸ். உத்தியோகஸ்தர், தம்மை உடனே வந்து பார்க்கும்படி முதலியாருக்கு ஆள் அனுப்பினார். ஏதாவது ஆபீஸ் விஷயத்தைக் குறித்துப் பேசவேண்டியிருக்குமென்று எண்ணிக்கொண்டு, முதலியார் வெஸ்டன் துரையிடம் சென்றார். ஆனால் சங்கதி வேறு. வெஸ்டன், முதலியாருக்கு ஒரு பிரசங்கம் செய்யத் தொடங்கினார்: "என்ன ஐயா, நீர் ரொம்ப வேடிக்கையான ஆளாய் இருக்கிறீரே! நேற்று உம் பழைய ரிகார்டையெல்லாம் பார்க்கும்படி நேர்ந்தது. மிகவும் புத்திசாலியாயிருந்தும், உம்முடைய நன்மையை உம்மால் அறிந்துகொள்ள முடியவில்லையே. ஆதியில், டிப்டி தாசில்தாராக வெளியே போகச் சொன்னால், வேண்டாமென்று சொல்லிவிட்டீர். பிறகு தாசில்தாராகப் போகச் சொன்னாலும், அதையும் மறுத்துவிட்டீர். உமக்கு மிகவும் கீழ்ப்பட்டவர்களெல்லாம் உமக்கு மேலான உத்தியோகத்திற்கு வந்துவிட்டார்கள். நீரோ, 'இந்த நானூறு ரூபாயிலேயே உத்தியோக வாழ்க்கையைக் கழித்து விடுகிறேன்' என்கிறீர்! இதோ பாரும்: இப்பொழுது ஒரு நல்ல சந்தர்ப்பம் வந்திருக்கிறது. உம்மை டிப்டி கலெக்டராகத் தள்ளிவிடலாமென்று உத்தேசித்திருக்கிறேன். இதை ஒப்புக்கொண்டால் நீர் கலெக்டராகக்கூட வந்துவிடலாம். இந்தத் தடவையும் வம்பு பண்ணுதேயும்—இதென்ன பயித்தியம் ஐயா! சென்னையை விட்டுப் போனால், உமக்கு என்ன பயம்?"

"பயம் ஒன்றுமில்லை. இங்கே இருந்து பழக்கமாய்விட்டது."

"கேட்டவர்கள் சிரிப்பார்கள், ஐயா! வெளியேபோனால் அதுவும் பழக்கமாகிவிடுகிறது. என்னைப் பாரும். நான் எவ்வளவு ஆயிரம் மைல் தூரத்திலிருந்து வந்திருக்கிறேன்? (முதலியார் சிரித்தார்.) சிரித்தால் பிரயோஜனமில்லை. இந்த உத்தியோகத்தை ஏற்றுக்கொள்ளும். திருப்பாதிரிப்புலியூருக்கு டிப்டி கலெக்டராக உமக்கு உத்தரவு போட்டாய்விட்டது. அதற்கு நான்தான் காரணம். நான் செய்தது நன்மையோ தீமையோ, உமக்கு இப்போது தெரியாது; மூன்று வருஷங்களுக்குப் பிறகுதான் தெரியும். ஏன் ஐயா, வஞ்சனையற்று வேலைசெய்து எனக்கு எவ்வளவோ உபகாரமாயிருந்ததற்கு, நான் உமக்கு அபகாரம் செய்வேனா? அதை ஏன் சற்று யோசிக்கமாட்டேன் என்கிறீர்?"

"ஐயோ, என்ன வார்த்தை சொல்லுகிறீர்கள்! என் நலத்தையே நீங்கள் தேடுகிறவர்கள் என்பது எனக்குத் தெரியாதா?" என்றார் முதலியார்.

"அப்படியானால், பதில் பேசாதேயும்; ஊருக்குப் போக மூட்டை கட்டும்" என்று வெஸ்டன் புன்னகையுடன் கட்டளையிட்டார். அரைமனத்துடன் அதை அங்கிகரித்துக்கொண்டு முதலியார் வீடு திரும்பினார்.

உடன்பட்ட பிறகு பின்வாங்க முடியுமா? மூன்று வாரங்களுக்குள் சிவப்பிரகாச முதலியார் குடும்ப சகிதமாய்த் திருப்பாதிரிப்புலியூர் வந்து சேர்ந்தார். அவ்வூருக்கு டிப்டி கலெக்டர் பெரிய அதிகாரியாகையால், தம் அந்தஸ்திற்கு யாதொரு குறைவும் ஏற்படக் கூடாதென்று முதலியார் ஒரு பெரிய பங்களாவைத் தம் வாசத்திற்காக அமர்த்திக்கொண்டார். அவர் எப்பொழுதும் செலவுக்குப் பின்வாங்கினவரல்ல.

விசாலமான வீடு, இரட்டை மாடி; சுற்றிலும் நாலு, ஐந்து ஏகராவுக்குக் குறையாத பெரிய தோட்டம். சென்னையில் பவழக்காரத் தெருவைப்போல் மோட்டார் வண்டிகளின் பயமில்லாமல் குழந்தைகள் ஆடி ஓடி விளையாடலாம். ஆரோக்கியமான காற்று. தோட்டத்தில் எந்தக் கனி வேண்டுமானாலும் கிடைக்கும். இன்னும் என்ன வேண்டும்?

ஆனால், முதலியாரின் மனைவி கனகவல்லியம்மாளுக்கு மட்டும் அவ்விடம் பிடிக்கவில்லை. அந்தப் பங்களா ஊருக்கு ஒரு மைல் தள்ளி இருந்தது. சுற்றுப்பக்கத்திலிருந்த மற்றப் பங்களாக்களும் அரை மைல் தூரத்திற்கப்பாலே யிருந்தன. கனகவல்லியம்மாள் சற்றுப் பயந்த சுபாவம் உடையவள். அதுவுமன்றி, மடியில் கனமிருந்தால், பயமேற்படாமலிருக்குமா? அந்தக் காலத்து நகைகள், இந்தக் காலத்து நகைகள் எல்லாம் சேர்த்தால் அந்த அம்மாள் அணிந்திருந்த ஆபரணங்களே பத்தாயிரம் ரூபாய் மதிப்புப்பெறும். பிறகு, குழந்தைகளுடையவை வேறு இருந்தன. போதும்போதாததற்கு, அத்தோட்டத்தில் குடிசை போட்டுக் கொண்டிருந்த ஒரு தொண்டு கிழவன், ஒரு காலத்தில் தீவட்டிக் கொள்ளைக்காரர்கள் திரிந்த இடம் அது என்று சொல்லி வைத்தான்.

வந்த ஒரு மாதம்வரையில் அந்த அம்மாளுக்கு இரவில் தூக்கமே கிடையாது. பிறகு நாலு பேர் சொல்வதைக் கேட்டு, அந்த அம்மாளுக்கும் வர வரத் தைரியம் ஏற்பட்டது. தீவட்டிக் கொள்ளைக்காரர்கள் இந்தக் காலத்திலும் உண்டா வென்று பலர் நகைக்கும்போது, அவளும் நகைக்க ஆரம்பித்தாள்.

இடம் பழகப்பழக, அந்த அம்மாளுக்கு ஆரோக்கியமும் உற்சாகமும் அதிகரித்தன. எட்டாக்கையாயிருந்தாலும், பிச்சைக்

காரர்களுக்கு மட்டும் குறைவில்லை. விடியற்காலம் மூன்று மணிக்கே குடுகுடுப்பைக்காரன், "யோகம் பொறக்குது, பொறக்குது; மலைபோல வந்த வினை பனிபோல நீங்குது" என்று பல வாறாகச் சொல்லிக் குடுகுடுப்பை அடித்து விட்டுப் போய்விடுவான்; விடிந்த பிறகு பிச்சைக்கு வருவான்.

இதனாலெல்லாம், கனகவல்லியம்மாளுக்கிருந்த கொஞ்ச நஞ்ச பயமும் போய்விட்டது.

இதற்குள் தீபாவளி நெருங்கிவிட்டது. தலை தீபாவளியான தால், மருமகனை இரண்டு தினங்களுக்கு முன்பே, எப்படியாவது நல்ல வார்த்தை சொல்லி வரவழைக்க வேண்டுமென்று கனகவல்லி யம்மாள் தீர்மானித்துக்கொண்டாள்.

இதற்கு முதலியாரும் இணங்கினர். அதே பிரகாரம் மருமகனும் இரண்டு தினங்களுக்கு முன்னரே வந்து சேர்ந்தான். தோட்டம் துரவுகளைப் பார்க்க அவனுக்கு வெகு ஆனந்தமா யிருந்தது. ஆனால், கையோடு பெரும் மழையையும் அவன் அழைத்துக்கொண்டு வந்துவிட்டான். இது மாமூல் தீபாவளி மழைக்கு மேல் மிகவும் மிஞ்சிப்போய்விட்டது. தீபாவளிக்கு முதல்நாள் பகலெல்லாம் இடைவிடாமல் கொட்டிற்று. இரவு ஏழு மணிக்கு ஒரு விதமாக ஓய்ந்தது. வானத்தில் நக்ஷத்திரங்களும் உதிக்கத் தொடங்கின. இனி மழையில்லையென்று எல்லாரும் நிச்சயித்துக் கொண்டு சந்தோஷப்பட்டார்கள்.

அன்றிரவு கனகவல்லியம்மாளுக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. மறுநாள் விருந்திற்குச் செய்யவேண்டிய ஏற்பாடுகளைக் குறித்து அவள் திருப்பித் திருப்பி யோசித்துக்கொண்டிருந்தாள். சுமார் இரண்டு மணியிருக்கும். மாடியில் தன் அறையோடு சேர்ந்தாற் போலிருந்த வராந்தாவிற்கு அவள் வந்தாள். அந்த வராந்தா பங்களாவின் பின்புறமிருந்த தோட்டத்தை நோக்கியிருந்தது. தோட்டத்திற்கு அப்புறம் ஏராளமான சிறு சிறு களாப் புதர் கள் உண்டு. அந்த அம்மாளும் அச்சிறு களாக் காய்களைப் பறித்த துண்டு: இப்பொழுது அக்களாப் புதர்களின் இடையிடையே, விளக்குப்போன்ற வெளிச்சம் தோன்றிற்று. கனகவல்லியம்மாள் கண்களைத் துடைத்துக்கொண்டு உற்றுப் பார்த்தாள். வட்டமாக ஒரு பர்லாங்கு நீளத்திற்கு அநேக விளக்குகள் காணப்பட்டன. மெள்ள மெள்ள அவ்விளக்குகள் தோட்டத்தை நோக்கி நகர்ந்து வருவதை அவள் திகிலுடன் கண்டாள்.

மேகமற்ற வானத்தில் வைரங்களை வாரி இறைத்தாற்போல் நக்ஷத்திரங்கள் நிலவுக்குச் சமானமாகப் பிரகாசித்தன.

ஊர்ந்து வருவன விளக்குகள் மட்டுமல்ல, அவைகளைப் பிடித்திருக்கும் மனிதர்களுங் கூட என்று தெரிந்துகொள்ள, அந்த அம்மாளுக்கு வெகு நேரமாகவில்லை. அவளுடைய கை கால்கள் பதறத் தொடங்கின. தோட்டக்காரக் கிழவன் சொல்லிய வார்த்தையின் உண்மை அவளுக்கு இப்பொழுது தெரிந்தது. அவனும் இக்கொள்ளைக்காரர்களுக்கு உளவோ என்ற சந்தேகமும் மேலிட்டது. பிறகு, கஷ்டப்பட்டுப் பதற்றத்தை அடக்கிக்கொண்டு, முதலியாரை எழுப்பி விஷயங்களை ஒருவாறு அவருக்குத் தெரிவித்தாள்.

முதலில் முதலியார் அவள் வார்த்தைகளை நம்பவில்லை; ஏதோ பயத்தால் உளறுகிருளென்று நினைத்தார். பிறகு அவர் தம் மனைவியுடன் வராந்தாவிற்கு வந்து பார்த்தார். ஆட்கள் சிறு தீவட்டிகளுடன் நகர்ந்து வருவது நன்ருகக் காணப்பட்டது. முதலியாருக்கு உடம்பெல்லாம் ஸ்நானம் செய்தாற் போல் வேர்த்துவிட்டது. அவருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை; மெதுவாக அவ்விடத்தை விட்டு நழுவி அறைக்குள் சென்ருர்.

"இந்தப் பாழும் ஊருக்கு வரவேண்டான்னிட்டு அப்பவே அடித்துக்கொண்டேனே! என் பேச்சைக் கேட்டீங்களா? ஐயோ! தீவாளி நாளுமாச்சுதே!" என்று சத்தம் போடாமல் அடிக்குரலில் அவள் புலம்ப ஆரம்பித்தாள்.

முதலியார் வாயை மூடிச் சும்மாயிருக்கும்படி ஜாடை காட்டினர்; அருவிபோல் பெருகும் நெற்றி வேர்வையைத் துடைத்துக்கொண்டார்; ஒரு நிமிஷ நேரம் ஒன்றும் புரியாதவராய்க் கைகளைப் பிசைந்தார். பிறகு சப்தம் செய்யாமல் அவர் கீழே இறங்கினர். கனகவல்லியம்மாளும் இறங்கினள். கீழே ஹாலில் ஒரு புறத்தில் தூங்கிக்கொண்டிருந்த கேசவன் நாயரை அவர் எழுப்பினர். கேசவன் நாயர் ஏழெட்டு வருஷங்களாக அவரிடம் சமையல் செய்து வந்த ஓர் இளைஞன்; மிகவும் தைரியசாலி. அவனிடம் சங்கதிகளைச் சுருக்கமாகச் சொல்லி, உடனே ஸைகிளில் போலீஸ் ஸ்டேஷனுக்கு ஓடி, அங்கிருக்கும் போலீஸார் அனைவரையும் துப்பாக்கி சகிதமாய் அழைத்துவரும்படி சொன்னர். கேசவன் அவருடைய வேலையாள் என்பது எல்லோருக்கும் தெரிந்திருந்த போதிலும், சந்தேகத்திற்கு இடங்கொடுக்காமல், அவனிடம் தம் வீலையும் கொடுத்து அனுப்பினர்.

ஸைகிளை எடுத்துக்கொண்டு கேசவன் காற்ருகப் பறந்தான். பிறகு, தாழ்ப்பாளைக் கெட்டியாகப் போட்டுக்கொண்டு அவ்விருவரும் மாடிக்குச் சென்ருர்கள். ஒரு மூலையில் பதுங்கி,

இருதயம் படபடவென்று அடித்துக்கொள்ள, அவர்கள் கொள்ளைக் காரர்கள் வரும் திசையை உற்றுப் பார்த்தார்கள். பார்வைக்குச் சமீபம் போல் இருந்தபோதிலும், அவர்கள் குறைந்தது நாலு பர்லாங்குகளுக்கு அப்பால்தான் வந்துகொண்டிருக்கவேண்டும். ஒரு நிமிஷம் போவது அவர்களுக்கு ஒரு யுகமாயிருந்தது. ஐந்து, பத்து, பதினைந்து, இருபது நிமிஷங்களும் ஆகிவிட்டன. இன்னும் கேசவன் வந்தபாடில்லை. கொள்ளைக்காரர்கள் என்னவோ தோட்டத்திற்குள் நுழைந்துவிட்டனர். கனகவல்லியம்மாளுக்குப் பெருமூச்சு மேலிட்டது; மயக்கம் போட்டுக் கீழே விழுந்துவிடுவாள் போல் இருந்தது.

இந்தச் சமயத்தில், புத்துயிர் ஊட்டினாற்போல் கேசவனுடைய குரல் கேட்டது. இருவரும் கீழே ஓடி வந்து கதவைத் திறந்தார்கள். கேசவனும், துப்பாக்கியும் கையுமாய் நான்கு போலீஸாரும் எதிரே நின்றனர். முதலியாருக்கு உடனே தைரியம் வந்தது. துப்பாக்கியின்முன் யார் என்ன செய்யமுடியும்? சப்தம் செய்யாமல், அவர்களை அவர் அந்தப் பங்களாவுக்குப் பின்புறம் அழைத்துச் சென்றார். ஒரு மார் பின்னே, கனகவல்லியம்மாளும் வந்தாள். பிறகு அக்கொள்ளைக்காரர் கூட்டத்தை அவர் காட்டினார்.

அதைப் பார்த்ததும், அப்போலீஸாரின் தலைவனாக இருந்தவன் மெய்ம்மறந்து கௌரவத்தைக் கூடப் பாராட்டாமல், இடி இடியென்று சிரித்தான்.

“ஐயோ, ஸார்! அவுங்க ஈசல் பிடிக்கறாங்க, ஸார். இந்த மழைக்கு அது ஏராளமாகக் கிடைக்குங்க. அதுக்குண்ணு, ஒரு மருந்து இருக்குதுங்க. அதை எடுத்துக்கிட்டு பத்து இருபது பேராக் கிளம்பறது வழக்கமுங்க.”

“என்னது!” என்று முதலியார் பிரமித்தார். ஈசல் பிடிப்பதை அவர் ஒருநாளும் கண்டதில்லை.

“அதுதானுங்க, அந்த ரக்கைப் பூச்சி. அதை ஒரு பலகாரமாத் தின்பாங்க. அவுங்களையே காட்டச் சொல்றேன்—டேய்! யாருடா அவன் ஈசல் பிடிப்பது?” என்று அவன் அதட்டினான்.

“அடியேஞ்சாமி!” என்று வெகு வணக்கமாகப் பதில் வந்தது. கனகவல்லியம்மாளுக்குப் போன பிராணன் திரும்பி வந்தது. இதற்குள் மணி மூன்று ஆய்விட்டபடியால், வழக்கம் போல் குடுகுடுப்பாண்டியும், “மலைபோல வந்தவினை பனிபோல நீங்குது” என்று சொல்லிக்கொண்டே குடுகுடுப்பை அடித்தான்.

---

# மூன்று முத்துக்கள்

விஷ்ணு ஸகாராம் காண்டேகர்

---

[மராத்தியிலிருந்து கா. ஸ்ரீ. ஸ்ரீநிவாஸாசாரியார் மொழிபெயர்த்தது.]

## 1. இறைவன்

வெளியில் இருள் சூழ்ந்திருந்தது. வெட்டுக்கிளியின் மனத்துக்கு அந்த இடம் பிடிக்கவில்லை. அந்தி வேளையில் கதிரவனின் ஒளியிலே ஒளிரும் கடல்நீர்போல, விளக்கின் வெளிச்சம் அதன்மீது பட்டவுடனே, அதன் பசுமை நிறம் ஒளி வீசியது. வெட்டுக்கிளி மிக்க இறுமாப்புடன் தன் நிறத்தைக் கண்டு களித்தது.

'உர்ர்—உர்ர்' என்னும் சப்தத்தைக் கேட்டு அது திடுக்கிட்டுப் பார்த்தது. விளக்கின் கீழே ஒரு பூனை உட்கார்ந்திருந்தது. எவ்வளவு கறுப்பாயிருந்தது அது! 'விளக்கு நிழலில் இருட்டிருக்கும்' என்னும் வசனம் பொய்யல்ல.

வெட்டுக்கிளியின் உள்ளத்தில் கர்வ அலைகள் மோதின; "என் நிறம் எவ்வளவு பச்சைப் பசேலென்று இருக்கிறது, பச்சைமணி போலே! விளக்கின் கீழே கரிக்கட்டையைப் போலிருப்பதைப் பார்! சீ!!" என்று அது ஆனந்தக் கூத்தாடியது.

பறவைகள் மரங்களின் கிளைகளில் தாவி விளையாடுகின்றனவே; அவை ஒரு கிளையின் நுனியில் ஊசலாடிக் கொண்டிருக்கும்; மறு கணம் அடுத்த கிளைக்கு மாறும். வெட்டுக்கிளியும் அவ்வாறே செய்யத்தொடங்கியது. கணத்திலே அது கூரைக்கு மேலே பறந்து செல்லும்; அடுத்த கணத்தில் விர்ரென்று கீழே இறங்கி வரும்.

இறங்கியவாறே, "என் உடல் எப்படி விமானம்போலே அமைந்துள்ளது! விளக்கின்கீழே குந்தியிருக்கும் அந்தக் கறுப்பன் எப்படி இருக்கிறான் பார்; எருமை மாட்டைக்காட்டிலும் மோசம்!" என்றெல்லாம் நினைக்கும் அது.

விளக்கின் நிழலில் பூனை வருத்தத்துடன் உட்கார்ந்திருந்தது. நான்கு நாட்களாக அதற்கு - எலி அகப்படாவிட்டால் போகிறது - ஒரு பல்லி, அதுவுமில்லை யென்றால், ஒரு புழுவாவது அகப்படக்

கூடாதா? பாவம், அதற்கு அதுகூடக் கிடைக்கவில்லை. 'உர், உர்' என்று உறுமிக்கொண்டே, "இறைவன் கருணையில்லாதவன். இன்று நான்கு நாட்களாயின, நான் சாப்பிட்டு" என்றது அது.

அதன் வார்த்தையைக் கேட்டு வெட்டுக்கிளி வியப்புற்று, "இறைவனா கருணையற்றவன்? எந்த இறைவன் எனக்கு இவ்வளவு அழகிய பசுநிறமும், விமானத்தைப்போல் பறக்கும் உடலும் தந்தானோ, அவனா கருணையில்லாதவன்?" என்று தனக்குள் சொல்லிக் கொண்டது.

அது விளக்கினருகிற் சென்று, "பூனையாரே, தங்களைப்போன்ற முழு முட்டாளும் உலகிலுண்டோ? மிகக் கருணை கொண்டவர் கடவுள். பாரும் ஐயா, கடவுள் எனக்குக் கொடுத்த நிறத்தை! இதோ பாரும், என்னுடைய ஆகாய விமானம் செல்லுகிறது......" என்றது.

ஆனால், ஆகாய விமானமோ மேலே பறப்பதற்கு முன்னமே கீழே வீழ்ந்தது. பூனை குறி தவறாமல் அதைப் பிடித்தது.

"இறைவன் கருணையற்றவன்! து...ஷ்...ட...ன்!" எனக் கூவியது வெட்டுக்கிளி.

பூனையோ நாவினால் தன் இரையைச் சுவைத்துக்கொண்டே, "இறைவன் கருணாகரன்; அவனது கருணை மிக மிகப் பெரிது" என்றது.

## 2. கெட்டிக்கார ஆடு

குன்றின் பாதையிலே நடுவில் ஒரு பள்ளம். அக்கம் பக்கத்திலுள்ள பசிய இலைகளை நோக்கிக்கொண்டே செல்லும் ஆடுகள் அதை எவ்வாறு கவனிக்கும்?

எல்லாவற்றிற்கும் முன்னே சென்ற ஆடு, கால் தவறிப் பள்ளத்தில் வீழ்ந்தது. "இந்தப் பள்ளத்தில் ஏதோ ஒரு விசேஷம் இருக்க வேண்டும். நாம் முன்பின் பாராது இதில் விழுவதே சரி" என்று நினைத்தன அதன் பின்னே வந்த ஆடுகள்.

ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து......பள்ளம் நிரம்பிக் கொண்டே வந்தது. கடைசி ஆடு ஓடிவந்தது; ஆனால் பள்ளம் நிறைந்து விட்ட படியால், அது மற்றுமுள்ள ஆடுகளின்மீது விழுந்து புரண்டுகொண்டே, பள்ளத்தைக் கடந்து அப்புறம் சென்றது. பின்னால் திரும்பி மற்ற ஆடுகளை நோக்கி, "மூடர்களே! வழியிலுள்ள பள்ளம் கூடவா உங்கள் கண்ணிற்படவில்லை?" என்று பேசியது அது.

## 3. அவனுடைய உள்ளம்

தனது உடல் மாசற்று இருப்பதிலே அவனுக்குப் பெரிய பெருமை. எங்கேயாவது ஒரு துரும்பு முற்றத்திலே வீழ்ந்து விட்டால், உடனே அவன் அதை அப்புறப் படுத்துவான். அண்டையிலுள்ள மரங்களின் இலைகள் முற்றத்திலே விழும்; ஆனால் அவ்வப்போது அவன் அவ்விலைகளை ஒவ்வொன்றாக எடுத்து வெளியே எறிவான்.

ஆனால், காலம் மாறியது. அதே முற்றம் வெறிச்சென்று இருந்தது. மாசற்ற முற்றத்தைக் கண்டும் மகிழ்ச்சியில்லை அவனுக்கு!

அவன் மனத்தில் அமைதியில்லை. முற்றத்தின் ஒரு மூலையில் ஒரு மல்லிகைக் கொடியைக் கொண்டுவைத்தான் அவன். 'அவ்வளவு மூலைதானே! போனால் போகிறது! பணக்காரன் அவ்வளவு பிச்சையாவது இடவேண்டாமா?' என்று தன் மனத்துக்குச் சமாதானம் சொன்னான் அவன்.

மல்லிகைக் கொடியில் மொட்டுகள் முளைத்தன. அவன் அவைகளைத் தூரத்திலிருந்தே நோக்குவான். மல்லிகை மலர்ந்தது. இப்போது அவனால் தூரத்திலிருக்க முடியவில்லை. அருகிற் சென்று அழகிய இனிய மலர்களைக் கையிலெடுத்துக் கொண்டான். தன்னையும் அறியாமலே அவன் முற்றத்தைப் புறக்கணித்தான்.

நறுமணங் கமழ்ந்த அவனது உள்ளத்தில், அண்டையிலுள்ள மரங்களிலிருந்து முற்றத்தில் விழும் இலைகளின் சத்தம் படவே யில்லை.



# லட்சாதிபதி

"ராகோ"

திருப்பரங்குன்றத்தில் எழுந்தருளியிருக்கும் முருகக்கடவுளைக் கண்டு தரிசித்து வரப் போயிருந்தேன். அன்று கார்த்திகையானதால் ஏராளமான கூட்டம். மக்கள் அனைவரையும் ஒருங்கே கவர்ந்து மகோன்னதமாகக் கொலுவீற்றிருந்த முருகனை வணங்கிவிட்டுக் கிரியைப் பிரதக்ஷிணமாகச் சுற்றிக்கொண்டு ரெயில்வே ஸ்டேஷனை அடைந்தேன். ரெயில்வண்டி வருவதற்கு இன்னும் ஒன்றரை மணிநேரம் இருந்ததால் சமீபத்திலிருக்கும் ஓர் ஆலமரத்தடியில் உட்கார்ந்தேன். சிலுசிலு என்று வீசும் காற்றுடன் பக்தர்கள் வெகு தூரத்தில் மனமுருகிப் பாடும் இசையும் ஒருங்கே சேர்ந்து என்னைப் பரவசப்படுத்தின.

அப்பொழுது, "சாமி! ஒரு காலணு தர்மம் போடுங்கோ" என்று ஒரு கிழவன் என்னை அணுகினன். அவன் நெற்றியில் பட்டை பட்டையாய் விபூதியும், உடம்பில் அழுக்கடைந்த சட்டையும், அரையில் நீர்க்காவி ஏறிய துணியும் இருந்தன. சாதாரணமாகப் பிச்சைக்காரர்கள் வைத்திருக்கும் மூட்டை முடிச்சுகளுடன் ஒரு புஸ்தகத்தையும் வைத்திருந்தான். நான் பேசாமல் இருப்பதைப் பார்த்து, "நேற்றுமுதல் பட்டினி. ஒரு காலணு கொடுங்கோ! ஆப்பம் வாங்கித் தின்கிறேன்" என்று பல்லைக் காட்டிக் கொண்டே கையை நீட்டினன். பிறகு என்ன நினைத்துக் கொண்டானே என்னவோ; "நான் பரம்பரைப் பிச்சைக்காரனல்ல! ஏதோ என் விதி. ரொக்கமாய் இரண்டு லட்ச ரூபாய்க்கு நான் வார்சு" என்ருன். எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. ஏதோ பைத்தியம் போலிருக்கிறது என்று எண்ணினேன்.

"நான் சொல்லுவது உங்களுக்கு ஆச்சரியமாய்த்தானிருக்கும். என் கதையை வேண்டுமானல் சொல்லுகிறேன்."

ரெயில் வண்டி வருமளவும் பொழுதைப் போக்கவேண்டுமல்லவா? நான் கொடுத்த இரண்டு வாழைப்பழங்களைச் சாப்பிட்டுவிட்டுக் கிழவன் கூறலானன்:

"நீங்கள் பட்டணம் மீனுட்சிசுந்தரம் பிள்ளையைப் பற்றிக் கேள்விப் பட்டிருப்பீர்கள். நான் அவருடைய ஒன்று விட்ட மருமகன். அவருடைய இரண்டு லட்ச ரூபாய் சொத்தையும் எனக்குத்தான் எழுதி வைத்திருக்கிருர்."

இதைக் கேட்டதும் என்னை அறியாமலே நான் சிரித்துவிட்டேன்.

"நீங்கள் வேண்டுமானல் இந்த உயிலைப் பாருங்கள்" என்று சொல்லிக்கொண்டே கையில் வைத்திருந்த புஸ்தகத்தைத் திறந்து அழுக்குப் படிந்ததும் பலவிடங்களில் கிழிபட்டதுமான ஒரு காகிதத்தை என்னிடம் நீட்டினன். அது வெகு பேர்கள் கை பட்டு மிகவும் நைந்து போயிருந்தது.

"பரவாயில்லை! அதை நீயே வைத்துக்கொள். உன் கதையை மேலே சொல்லு" என்றேன்.

கிழவன் தன் வரலாற்றை மேலே ஆரம்பித்தான்.

* * *

என் பெயர் சோமசுந்தரம். எனக்குப் பன்னிரண்டு வயதாகும் பொழுது என் தகப்பனர் திடீரென்று இறந்துவிட்டார். நானும் என் தாயும் திக்கற்றவர்களானேம். தகப்பனர் இறந்ததும் என் படிப்பும் நின்றது. வேலை ஒன்றும் இல்லாததால், நான் சோம்பேறியாய்க் காலங் கழித்தேன். என் தாயோ கூலி வேலை செய்து என்னைப் போஷித்து வந்தாள்.

இப்படியிருக்கும் சமயத்தில் எனக்கு ஒன்றுவிட்ட மாமா திடீரென்று லட்சாதிபதியாய் விட்டாரென்று கேள்விப்பட்டோம். அவரே பட்டணம் மீனட்சிசுந்தரம் பிள்ளை. அவர் பணக்காரர் ஆனது மிகவும் ஆச்சரியமான விஷயம். மீனட்சிசுந்தரம் பிள்ளை சென்னைப் பள்ளிக்கூடம் ஒன்றில் உபாத்தியாயராக வேலை பார்த்து வந்தார். நாற்பத்தைந்து வயது வரையில் அதே வேலையில் காலங் தள்ளி விட்டார். ஒருநாள் அவர் பள்ளிக்கூடத்தி லிருந்த உபாத்தியாயர்கள் ஒன்று சேர்ந்து, அயர்லாந்து குதிரைப் பந்தய லாட்டரிச் சீட்டு வாங்கினர்கள். என் மாமாவும் ஒரு சீட்டு வாங்கினர். அதிர்ஷ்ட வசமாக என் மாமாவுக்கு முதல் பிரைஸ் இரண்டு லட்சம் ரூபாய் விழுந்தது.

பிறகு என் மாமா உபாத்தியாயர் வேலையினின்றும் விலகிக்கொண் டார். 'இவ்வளவு நாட்களாகத்தான் மிகவும் கஷ்டப்பட்டோமே; இனி மேலாவது சுகமாக இருப்போம்' என்று எண்ணிச் சகல வசதிகளுடன் இருந்தாரா? அதுதான் இல்லை. ஏற்கெனவே இருந்த வீட்டில்தான் வசித்து வந்தார். உதவிக்காக ஒரு தவசிப்பிள்ளையை அமர்த்திக்கொண்டார். அவருடைய மனைவி வெகு நாட்களுக்கு முன்பே இறந்துவிட்டாள். அவருக்குப் பிள்ளைகுட்டி ஒன்றும் இல்லை.

பத்திரிகை உலகில் பேரும் புகழும் எய்த வேண்டுமென்று என் மாமாவுக்கு வெகு நாட்களாக அவா. ஆனல் அதுவரையில் அவருக்குப் போதிய அவகாசம் இல்லை. ஆகையால் அவருடைய எண்ணங்கள் கை கூடாமலே இருந்தன.

இப்பொழுதுதான் அவருக்கு வேலைத் தொந்தரவு ஒன்றும் கிடையாதே. ஒரு ரீம் காகிதம் வாங்கிக் கொண்டார். பஞ்சாயத்துப் போர்டு தேர்தல் முதல் அகில இந்தியப் பிரச்னைவரையில் உள்ள விஷயங்களைப் பற்றிப் பல கட்டுரைகள் எழுதினர். தற்காலப் போதனு முறையைக் கண்டித்தும், அதைச் சீர்திருத்த வேண்டிய வழியைப் பற்றியும் பல கட்டுரைகளை

எழுதினர். அவர் எழுதியவை இன்னும் எவ்வளவோ; கட்டுக்கடங்கா. ஆனல் பாவம்! அவருடைய கட்டுரைகளைப் பத்திரிகாசிரியர்கள் அங்கீகரிக்கவேயில்லை. அவை அப்படியே அவருக்குத் திரும்பி வந்துவிடும். தம்முடைய கட்டுரைகளைப் பிரசுரித்தால் தாம் ஐந்நூறு முதல் ஆயிரம் பிரதிகள் வரையில் வாங்குவதாகக்கூட ஆசை வார்த்தை சொல்லிப் பார்த்தார். ஒன்றும் பிரயோசனம் இல்லை.

ஆகையால் பத்திரிகைகளின்மேல் அவருக்கு வெறுப்பும் கோபமும் ஏற்பட்டன. கட்டுரைகளைக் காட்டிலும், ருசிகரமான நாவல்களை ஜனங்கள் ஆவலுடன் படிப்பார்கள் என்று எண்ணிக் காதல், திடுக்கிடும் சம்பவங்கள் இவைகளைக் கொண்ட புதிய புதிய கதைகள் எழுதி அவற்றைத் தம் சொந்தச் செலவிலேயே அச்சடித்து வெளியிடுவது என்று தீர்மானித்தார்.

முதன்முதலில் "ஆசையும் பாசமும்" என்ற பெயருடன் நானூறு பக்கங்கள் கொண்ட ஒரு நாவலை எழுதி முடித்தார். அதை நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சடித்து, ஒவ்வொரு பத்திரிகைக்காரருக்கும் இரண்டு இரண்டு பிரதிகள் வீதம் அனுப்பினர். ஆனல் அந்தப் பொல்லாத ஆசிரியர்கள் மாமாவின் புஸ்தகத்தைப் பற்றி விமர்சனம் ஒன்றுமே எழுதவில்லை. என் மாமாவுக்கு, "புஸ்தகம் நன்ருக இல்லை" என்று எழுதியிருந்தால்கூட மனம் கொஞ்சம் சமாதானமாயிருந்திருக்கும். ஆனல் ஒரே யடியாய்ப் புஸ்தகத்தைப்பற்றி ஒன்றுமே எழுதாமல் விட்டது அவருக்கு மிகவும் கோபத்தை விளைவித்தது. அவர் ஆசிரியர்களுக்கு, ஆத்திரம் ஆத்திரமாக எவ்வளவோ கடிதங்கள் எழுதினர். ஆனல் பத்திரிகை ஆசிரியர்களோ அசைந்து கொடுக்கிறவர்களாயில்லை.

பிறகு அந்தப் புஸ்தகத்தின் பிரதிகளைத் தம் நண்பர்களுக்கும், பள்ளிக்கூடம், வாசகசாலை முதலியவற்றிற்கும் அனுப்பிவைத்தார். சில நண்பர்கள் மாத்திரம், "புஸ்தகம் பார்ப்பதற்கு மிகவும் நன்ருயிருக்கிறது. தாங்கள் ஒரு பிரதி அனுப்பியதற்கு மிகவும் வந்தனம்" என்று எழுதினர்களே ஒழியக் கதையைப்பற்றி ஒரு வார்த்தைகூட பிரஸ்தாபிக்கவில்லை.

இந்தச் சமயத்தில்தான் நான் என் தாயுடன், என் மாமா மீனுட்சி சுந்தரம் பிள்ளையைப் பார்க்கப் போனேன். நான் போய்ச் சேருவதற்கு முன்னல், என் மாமாவின் தாயாதி வழியைச் சேர்ந்த ஒரு பையன் அவர் வீட்டுக்கு அடிக்கடி வந்து சென்று கொண்டிருந்தானும். அவனுக்குத்தான் சகல சொத்தையும் கொடுக்கப்போவதாக ஒரு வதந்தி உலாவி வந்தது. ஆனல் என்ன விஷயமோ தெரியாது; திடீரென்று அந்தப் பையனைக் கண்டால் என் மாமாவுக்குப் பிடிக்காமல் போய்விட்டது. அவனை இனிமேல் வீட்டு வழி வரவேண்டாமென்று கடிந்து அனுப்பிவிட்டார். ஆகையால் எனக்குப் போட்டியாயிருந்தவன் எதிர்பாராத விதமாய் விலகிப் போனுன்.

என் தாயையும் என்னையும் கண்டவுடன் என் மாமா மிகவும் சந்தோஷமடைந்தார். எங்களுடைய நிலைமையைக் கேட்டு இரங்கி, மாதம் ஐம்பது ரூபாய் கொடுப்பதாயும் பட்டணத்திலேயே ஓரிடத்தில் குடியிருக்கும்படியும் சொன்னர். சென்னையில் ஒரு வேலையும் இல்லாமல் ஜோராகக் காலங் கழிப்

பதில் எனக்கு வெகு திருப்தி. என் தாய்க்கு மாத்திரம் மாமாவுடன் கூடவே நாங்கள் இருக்கவேண்டுமென்று எண்ணம். நாங்கள் அவருடன் இருப்பது அவருடைய 'எழுத்து வேலை'க்குத் தொந்தரவாக இருக்குமென்று என் மாமா அபிப்பிராயப் பட்டதால், நாங்கள் அவர் ஜாகைக்குச் சமீபத்தில் ஒரு வீட்டைக் குடிக்கூலிக்கு அமர்த்திக்கொண்டு வசித்து வந்தோம்.

ஒவ்வொருநாள் சாயந்திரமும் நான் மாமாவைப் பார்க்கப் போவேன். அப்பொழுதெல்லாம் தாம் எழுதியிருக்கும் புஸ்தகங்களைப் பற்றித்தான் அவர் பேசுவார். அவர் சொல்வதை மிகவும் கவனமாகக் கேட்பவன்போல் உட்கார்ந்திருப்பேன். இரவு ஒன்பது மணியானதும் வீட்டுக்குப் போய் விடுவேன். மாமாவின் சொத்தை உத்தேசித்து, தினமும் அவர் பேச்சால் உண்டாகும் 'தலைவலி'யைப் பொறுத்து வந்தேன்.

பிறகு மாமா ஒன்றன்பின் ஒன்றாய்ப் பல புத்தகங்கள் எழுதிவிட்டார். ஆனால் ஒன்றுகூட விலைபோகவில்லை. "இனமாகக் கொடுக்கிறேன்" என்று சொன்னால்கூட யாரும் வாங்கவில்லை. வீட்டின் கூடத்தில் அவர் எழுதிய புத்தகங்களின் பிரதிகள் சுமார் நாலாயிரம் வரையில் அடுக்கி வைக்கப் பட்டிருந்தன.

இப்படி இருக்கையில் என் மாமாவுக்கு ஜுரம் கண்டது. என் தாய்க்கு மனத்திற்குள் திருப்தி. ஆனால் அதை வெளியில் காட்டிக்கொள்ளவில்லை. என்னுடன் வந்து, மாமாவைப் பார்த்துவிட்டுப் போனாள். ஜுரமாய்க் கிடக்கும்பொழுதுகூட மாமாவுக்குத் தம்முடைய புத்தகங்களின் பிரதாபந்தான். "இந்தக் காலத்தில் வித்தை நசித்துப் போய்விட்டது. அறிவு மழுங்கி விட்டது. என்னுடைய கதைகளை ஏசுகிறார்களே; இவர்களுக்கு என்ன தெரியும்?" என்று பிதற்றுவார். நானும் அவருடன் சேர்ந்து, "ஆமாம்" பாட்டுப் பாடுவேன்.

வியாதி நாளுக்கு நாள் அதிகமாயிற்று. ஒருநாள் மாமாவுக்குப் படுக்கையிலிருந்து எழுந்திருக்கக்கூட முடியவில்லை. என்னைக் கண்டதும், "தம்பி! நான் கடைசியாக எழுதிய 'கானல் நீர்' என்ற புத்தகத்தைப் படித்தாயா? எப்படி இருக்கிறது?" என்று வினவினார். "மிக நன்றாக இருக்கிறது. கதையின் போக்கும் வெகு சுவாரசியமாயிருக்கிறது. இன்னும் முழுவதும் படிக்கவில்லை" என்று ஒரு போடு போட்டேன். மாமாவுக்குப் பரம சந்தோஷம். "இந்தா! என் சொந்தக் கையெழுத்திட்ட பிரதி ஒன்று இருக்கிறது. அதை உன்னிடத்தில் நேரில் கொடுக்க வேண்டுமென்று இருந்தேன். வெகு ஜாக்கிரதையாய் வைத்துக்கொள்" என்று சொல்லிப் படுக்கையின் சமீபத்திலிருந்த அலமாரியைத் திறந்து, 'கானல் நீர்' என்ற புத்தகம் ஒன்றைக் கொடுத்தார். அப்பொழுது அவர் கைகள் தடுமாறியதைக் கண்டு, 'சரிதான்! வியாதி முற்றிப்போய்விட்டது. பிழைப்பது அரிது' என்று எனக்குத் தோன்றிற்று.

புத்தகத்தை வாங்கிக்கொண்டு வீட்டுக்கு வந்தவன் அதைத் திறந்து கூடப் பார்க்கவில்லை. அதை அப்படியே ஒரு மூலையில் போட்டு விட்டேன்.

அன்று இரவு மாமாவுக்குத் திடீரென்று மார்பை அடைத்துக்கொண்டு விட்டதென்று ஆள் வரவே நானும் என் தாயும் பறந்தோடினோம். நாங்கள் போய்ச் சேருவதற்குள்ளேயே மாமா பரலோகமடைந்து விட்டார். அவருடைய திரண்ட ஆஸ்திக்கு நானே வார்சு ஆனேன் என்று இறுமாப்புக் கொண்டேன்.

மறுநாள் கொட்டு முழக்கத்துடன் மாமாவின் பிரேதம் அடக்கம் செய்யப்பட்டது. ஈமக்கிரியைகளை முடித்துக்கொண்டு வீடு திரும்பியதும், மாமாவின் தாயாதிப் பையனும் அவனுடைய தகப்பனாரும் அங்கே உட்கார்ந்திருந்தார்கள். அவர்கள் ஓர் உயிலை எடுத்துக் காட்டி, சகல சொத்துக்களும் அந்தப் பையனுக்குத்தான் என் மாமா எழுதி வைத்திருக்கிறார் என்று சொல்லி, எங்களை வீட்டைவிட்டு வெளியே போகச் சொன்னார்கள். எனக்கு வந்த ஆத்திரத்தில் அவர்களுக்கு ஆளுக்கு ஓர் அறை கொடுக்கலாமா என்று கூடத் தோன்றிற்று.

பழைய உயிலை ரத்து செய்துவிட்டு, என்பேருக்குப் புதிய உயில் எழுதி வைத்திருப்பதை என் தாய் சமையற்காரன் மூலம் அறிந்திருந்தாள். ஆகையால் அவர்களது மிரட்டலுக்குப் பயப்படவில்லை. சமையற்காரனும் என் பேரில் மறு உயில் எழுதியிருப்பதாயும் அதற்குத் தான் சாட்சிகூடப் போட்டதாகவும் கூறினான்.

ஆனால் அந்தத் தாயாதிப் பையனும் அவன் தகப்பனாரும் சும்மா இருக்கவில்லை. வேறு உயில் கிடையாதென்றும், அப்படி இருந்தால் அதைக் காண்பிக்க வேண்டுமென்றும் கூச்சல் போட்டார்கள். இதற்குள் தெருவிலுள்ளவர்கள் கூடி விட்டார்கள். என் பேரில் எழுதி வைத்திருந்த உயிலைக் காட்டி, தாயாதிப் பையனை வீட்டைவிட்டுப் போகச் சொல்லும்படி என் தாய்க்கு அவர்கள் யுக்தி சொல்லிக் கொடுத்தார்கள். நாங்கள் இரும்புப் பெட்டி, அலமாரி, பீரோ முதலிய சகல இடங்களையும் சல்லடை போட்டுத் தேடிப் பார்த்தோம். உயில் ஓரிடத்திலும் அகப்படவில்லை. எங்கள் மனக் கோட்டையில் இடி விழுந்தது. எங்களுக்கு என்ன செய்வது என்று புலப்படவில்லை. "உயில் இருந்தால்தானே அகப்படும்?" என்று தாயாதிப் பையன் பரிகாசம் செய்தான்.

பிறகு தெருவிலுள்ளவர்கள் ஒரு மத்யஸ்தம் செய்தார்கள். எனக்கு எழுதிவைத்த உயில் ஒன்றும் அகப்படாததால், சொத்து முழுவதும் தாயாதிப் பையனைத்தான் சேரவேண்டு மென்றும், ஆனால் தயா விஷயமாய் எனக்கு ஆயிரம் ரூபாய் கொடுப்பது என்றும் முடிவு செய்தார்கள். முதலில் தாயாதிப் பையனின் தகப்பனார் எனக்கு ரூபாய் கொடுக்க ஒப்புக்கொள்ளவில்லை. பல தகராறுகளுக்குப் பிறகு ஐந்நூறு ரூபாய் கொடுப்பதாகச் சம்மதித்தார்.

என் மாமா இறந்துபோன ஒரு மாதத்திற்குள் என் தாய் ஏக்கத்தினால் இவ்வுலகை நீத்தாள். எனக்குக் கிடைத்த ஐந்நூறு ரூபாயைக் கொண்டு நான் பட்டணத்திலேயே வறுமையுடன் காலங் கழித்து வந்தேன்.

எனக்குப் போட்டியாக வந்தவனோ, மோட்டார் கார் என்ன, மீனம்பாக்கத்தில் பங்களாவென்ன, விருந்துகள் குதிரைப் பந்தயம் இவ்விதமான

கேளிக்கையில் மூழ்கிக் களித்து வந்தான். அவன் பெயர் சென்னையில் அடிபடாத இடமில்லை. தெருவில் அவன் மோட்டாரில் செல்வதைக் காணும் பொழுதெல்லாம், எனக்கு வயிற்றைப் பற்றிக்கொண்டு எரியும்.

ஐந்து வருஷங்களில் அவன் இரண்டு லட்ச ரூபாயையும் கரைத்து விட்டான். பிறகு கொடிய காசநோய் கண்டு இரண்டே மாதத்தில் ஜெனரல் ஆஸ்பத்திரியில் மாண்டான். 'கடவுள் அவனுக்குச் சரியான தண்டனை கொடுத்தார்' என்று நான் எண்ணினேன்.

எனக்கும் சென்னையை விட்டு வெளிக்கிளம்பி விடவேண்டுமென்ற எண்ணம் உண்டாயிற்று. ஆகையால் என்னிடமிருந்த தட்டுமுட்டுச் சாமான்களை விற்றுப் பணமாக்கிக்கொண்டேன். கடைசியில் என் மாமா கொடுத்த 'கானல் நீர்' என்ற புத்தகத்தைக் கண்டேன்.

ஆமாம்! அவருடைய ஆஸ்தி எனக்குக் கானல் நீராகத்தான் ஆயிற்று. எனக்கு வந்த ஆத்திரத்தில் அதை வீசி எறிந்தேன். அந்தப் புத்தகம் அறையின் மூலையில் போய் விழுமுன் அதிலிருந்து ஒரு நீலக் கவர் கீழே விழுந்தது. அதைக் காண எனக்கு வியப்பாயிருந்தது. அதை உடைத்துப் பார்த்தேன்: மாமா சகல சொத்துக்களையும் என் பேருக்கு எழுதி வைத்திருந்த உயில்தான்!

* * *

கிழவன் சொன்ன கதையைக் கேட்டுக் கொண்டிருந்த எனக்குப் பொழுது போனதே தெரியவில்லை. ஆனல் அவன் சொன்னது நிஜமா அல்லது கௌரவப்பிச்சை எடுக்கும் ஒரு தந்திரமா என்ற எண்ணம் மனத்தில் அடிக்கடி தோன்றாமலில்லை.*

*ஆங்கிலக் கதையொன்றைத் தழுவி எழுதியது.



ஸ்ரீ சரத்சந்த்ர சட்டர்ஜி

(சென்ற இதழ் 381-ஆம் பக்கத் தொடர்ச்சி)

---

## 23

**பா**ரிஸ்டர் நிர்மல்பாபு திடீரெனப் போய்விட்டது, ஷோடசி ஊரைவிட்டே போவது, கோயில் சம்பந்தமான தஸ்தவேஜுகள் சாவி முதலியன அவளிடமிருந்து பறிக்கப்பட்ட சமாசாரம் யாவும் ஜனங்களிடையே பரவ அதிக நேரம் ஆகவில்லை. சிரோமணிக்கிழவர் கொந்தளிப்புடன், வேஷ்டியின் கச்சம் அவிழ்ந்து தரையில் புரள்வதுகூடத் தெரியாமல், ஜனார்த்தன ராயிடம் ஓடி வந்தார்.

மாமனாரிடமிருந்து விடை பெற்றுச் சென்ற கட்டம் நிர்மல் பாபுவுக்கு அவ்வளவாகச் சந்தோஷத்தை அளிக்கவில்லை. ஜனார்த்தன ராயின் முகமும் இதே காரணத்தினால் ஆழ்ந்தும் வாட்டமுற்றும் விளங்கியது; ஆனால் குதூஹலம் பொங்கும் சிரோமணி இதை ஏன் கவனிக்கப்போகிறார்? அவர் ராய் மஹாசயரை ஆசீர்வதிக்கும் தோரணையில் கையைத் தூக்கி நாக்குழற, "நீ நன்றாக இன்னும் நூறு வருஷகாலம் இருக்கவேண்டும். எல்லாம் உன் ஸாமர்த்தியத்தினால்தான்" என்றார்.

ஜனார்த்தனராய் நிமிர்ந்து, "சமாசாரம் என்ன சொல்லுமே" என்றார்.

"சமாசாரமா? அடராமா! அக்கம்பக்கத்து ஊர்களுக்குக் கூட எட்டிவிட்டதே. உனக்குத் தெரியாதோ? அதிசயமாயிருக்கிறது! அந்தச் சிறுக்கி ஊரைவிட்டே போய்விடுகிறாள்" என்றார்.

காலையில் கண் விழித்ததும் தாம் வெளியில் கடனாகக் கொடுத்திருக்கும் தொகைக்கு வட்டிக்கணக்கைப் பார்க்கும் அந்தப் பெரிய மனுஷ்யரான ராய், "என்ன என்ன! வாஸ்தவமாகவா? சிறுக்கி ஒழிந்து போகிறாளா? நான் என்ன பிரமாத பிரயத்தனம் செய்துவிட்டேன்? எல்லாம் உங்களால்தான்" என்றார்.

சிரோமணிகள் ஓர் ஆஸனத்தில் அமர்ந்து, "பாக்கி சமாசாரத்தைக் கேட்கவில்லையே. சாவியை அந்தச் சனியன் பிடித்தவள் ஜமீன்தாரின் கையில் அல்லவோ ஒப்பித்துவிட்டாள். இவ்வளவு சிரமப்பட்டும், கடைசியில் இரும்புப் பேழையிலுள்ள அம்பிகையின் பொன் நகைகளையும் வெள்ளி உடைமைகளையும்

இந்தக் குடிகாரன் சூறையாடிவிட்டு என்ன என்ன பாபகிருத்தியங்களைச் செய்யப் போகிருனே?......உம்......'' என்ருர்.

அப்புறம் ஜனுர்த்தன ராயிடம் ஒவ்வொருவராகக் கிராமத்தவர்கள் வந்தனர். எல்லோரும் கலந்து யோசனை செய்து ஜமீன்தாரிடமிருந்து சாவியைப் பிடுங்கிவிடுவதென்று உறுதிகொண்டனர். மத்தியானம் மூன்று மணிக்குள் யஜமானரைப் பேட்டி கண்டால்தான் ஏதாவது காரியம் கைகூடும். அதற்குமேல் அவர் மதுபானத்தில் இறங்கிவிடுவார். ஜனுர்த்தன ராய், "இந்தக் குடியன் நடுவில் புகுந்து சாவியைக் கைப்பற்றுவானென்று நான் எண்ணவே இல்லை. இப்போது அவன் கொடுத்துவிட்டால் நல்லதாகப்போகிறது. பத்து நாட்கள் கழிந்ததும் போய்க் கேட்டோமானுல், 'ஏது, இரும்புப் பெட்டியில் ஒன்றையும் காணுேமே?' என்று கையை விரித்துவிடுவான். ஷோடசி எதைச் செய்தாலும் அம்பிகையின் உடைமைகளை மட்டும் களவாடமாட்டாள் என்பது எனக்குத் தெரியும். செப்பால் அடித்த காசைக் கூட அவள் தொடவே மாட்டாளே. சீக்கிரம் ஏதாவது பிரயத்தனம் செய்தால்தான் அம்பாளின் சொத்துக் கொஞ்சமாவது மிஞ்சும்'' என்ருர்.

ராய்மஹாசயரின் அபிப்பிராயத்தை எல்லோரும் ஆமோதித்தனர்.

'ஜமீன்தாரைவிட ஷோடசி எவ்வளவோ மடங்கு மேல்' என்ற எண்ணம் எல்லோருக்கும் வந்துவிட்டது.

காலத்தைப் போக்காமல் ஊரிலுள்ள பிரபலஸ்தர்கள் ஜமீன்தாரின் 'சாந்திகுஞ்ஜ'த்தில் ஆஜராயினர். ஜீவானந்த சௌதுரி வெளிப்பக்கமாயுள்ள பெரிய அறை ஒன்றில் வீற்றிருந்தான். அவனுக்கு எதிரே சாராயப் புட்டிகளுக்குப் பதிலாகக் கட்டுக் கட்டாகத் தஸ்தவேஜுகள் இருந்தன. அருகில் உட்கார்ந்த வண்ணம் அவனுடைய கூட்டாளியான பிரபுல்லன் பத்திரிகையொன்றைப் படித்துக்கொண்டிருந்தான். அவன் வந்தவர்களை வரவேற்று அமரும்படி கேட்டுக்கொண்டான்.

சிரோமணிக்கிழவர் எப்போதுமே எல்லோருக்கும் முன்னுல் வாயை விட்டு விட்டுக் கடைசியில் வருத்தப்படுவது வழக்கம். இன்றும் அவரே பேச முற்பட்டார். "யஜமானருடைய தூக்கத்திற்கு இடையூருக இருக்குமோவென்று பயந்துகொண்டே வந்திருக்கிறேம்'' என்ருர்.

ஜீவானந்தன், தஸ்தவேஜுகளை ஒரு புறமாகத் தள்ளிவிட்டுச் சிரித்தவண்ணம், "பயப்படுவானேன். உங்களுடைய வருகையினுல் யஜமானருடைய தூக்கம் சற்றும் தடையுருது. ஏனென்ருல் அவர் பகலில் தூக்கம் போடுவது கிடையாது'' என்ருன்.

"ஆனுல் நாங்கள் கேள்விப்பட்டது..."

"கேள்விப்பட்டிருக்கிறீர்களா? ஆனுல் நீங்கள் கேள்விப்பட்டதில் அநேக விஷயங்கள் உண்மையானவை அல்ல; நீங்கள் சொல்லுவதிலும் பெரும்பான்மை பொய்யே கலந்திருக்கிறது.

உதாரணமாக, என்னையும் பைரவியையும் பற்றி நீங்கள் கட்டிவிட்ட அபாண்டத்தை எடுத்துக்கொள்வோமே--'' என்றதும் இடி இடி யென்று நகைத்தான் ஜீவானந்தன். எதிரே உட்கார்ந்திருந்த கூட்டத்தாரின் முகங்களில் அசடு வழிந்தது.

"இவ்வளவு அவசரமாக நீங்களெல்லாம் வந்திருப்பதனால் ஏதோ முக்கியமான காரியமாகத்தான் இருக்கவேண்டும். விஷயத்தைச் சொல்லுங்கள்'' என்றான் ஜீவானந்தன்.

ஜனார்த்தன ராய் வெகுவாய்ச் சமாளித்துக்கொண்டு, தமக்குள்ளேயே, 'எதற்காக இப்படிப் பயந்து சாகவேண்டும்?' என்று எண்ணிகொண்டு வெளிப்படையாக, "கோயிலைப்பற்றிய சிக்கல் இவ்வளவு சுலபமாகத் தீர்ந்துவிடுமென்று நான் நினைக்கவே இல்லை. நிர்மலும் வக்கரித்துக்கொண்டு நின்றதிலிருந்து எனக்கென்னவோ...'' என்று அரை குறையாகக் கூறி நிறுத்தினார்.

"ஆனால் அவர் மறுபடியும் நேராகியதன் மாயம் என்னவோ?'' என்று எடுப்பாகக் கேட்டான் ஜீவானந்தன்.

ஜனார்த்தன ராய்க்கு இந்த வார்த்தை உள்ளூற உறைத்து விட்டது. ஆனால் சிரோமணிகள் அதை மனத்தில் கொள்ளவே இல்லை. "எல்லாம் அம்பாளின் இச்சை. எதுவும் நேராகத்தான் கடைசியில் முடிவடையும், பிரபோ! பாப கிருத்தியங்கள் நடப்பதை அவள் சற்றும் சகியாள்'' என்றார்.

தலையை அசைத்து ஜீவானந்தன், "வாஸ்தவமே. அப்புறம் என்ன?'' என்றான்.

"ஒரு பாபம் தொலைந்தது இப்போது. ஓய் ஜனார்த்தன ராய், யஜமானரிடம் விஷயத்தை எடுத்துச் சொல்லுமே'' என்று சிரோமணிக்கிழவர் ராயை முன்னுக்குத் தள்ளினார்.

ஜனார்த்தன ராய் திடுக்குற்றவராய், "கோயில் சாவியை ஷோடசி, நாங்கள் இருக்கும்போது தாராதாஸிடம் கொடுத்து விட்டாள். இன்று அவர் ஸந்நிதிக் கதவைத் திறந்தார். ஆனால் இரும்புப் பெட்டியின் சாவியை மட்டும் அவள் தங்களிடத்தில் ஸமர்ப்பித்து விட்டதாகக் கேள்விப்பட்டோம்'' என்றார் தடுமாற்றத்துடன்.

"ஆமாம், என்னிடந்தான் கொடுத்திருக்கிறாள். வரவு செலவுக் கணக்கும் என் கையில்தான் இருக்கிறது'' என்றான் ஜீவானந்தன்.

நடுவே சிரோமணி ஒரு வார்த்தையைக் கிளப்பினார்:

"சிறுக்கி இன்னும் ஊரைவிட்டுப் போகவில்லை. அவள் இருக்கும்போதே......போய்விட்டால் திரும்ப அகப்படுவாள் என்ற நிச்சயம் இல்லை.''

ஜீவானந்தன் கிழவரையே சற்று நேரம் கவனித்துவிட்டு, "அதற்காக நீங்கள் இப்படி ஆத்திரப்படுவானேன்?'' என்றான்.

பிறகு ஜனார்த்தனராயிடமிருந்து விடை வருமென்று பார்த்தான்.

அவரும் தைர்யமாகவே' "பத்திரங்கள், விலையுயர்ந்த சாமான்கள், அலங்காராதிகள், தேவிக்கு எவை எவை உண்டோ அவை யாவும் இந்தக் கிராமத்துப் பெரியவர்களுக்குத் தெரியும். ஷோடசி இருக்கும்போதே அவை சரியாக இருக்கின்றனவாவென்று பார்த்து விடுவது மேல் என்கிறார் சிரோமணிகளும். ஒருவேளை..." என்றார்.

"ஒருவேளை சரியாக இராமற்போனால் என்கிறீர்களா? அப்படித்தான் சில உடைமைகள் காணமற் போகின்றன; நீங்கள் அவற்றை எங்கிருந்து தருவிப்பீர்கள்?"

ஜனார்த்தனரால் சட்டென இந்தக் கேள்விக்குப் பதில் தரமுடியவில்லை. முடிவில், "அதுவும் பரிசோதித்துப் பார்த்தால்தானே தெரியும்? சௌதுரி மஹாசயரே" என்றார்.

"எனக்கு இன்று அவகாசமில்லை, ராய் மஹாசயரே" என்றான் ஜீவானந்தன்.

ஜமீன்தாரை மடக்கத் தங்களுடைய சூழ்ச்சி பலன் அளிப்பதைக் கண்டு ஜனார்த்தனர் தமக்குள்ளேயே பூரிப்புக்கொண்டார். சிரோமணிக்கிழவர் பொறுமைபற்றவராய், "நம்ம ஜனார்த்தனராய் அவர்களிடம் சாவியைக் கொடுத்தால் இன்று பொழுது சாய்வதற்குள் அம்பாளின் நகை நட்டு யாவும் சரியாக இருக்கின்றனவா என்பதைக் கண்டு பிடித்து விடுவோம். அப்புறம் உங்களுக்கு அந்தத் தொல்லையே ஏற்படாது, பிரபோ! 'அவள் ஓடிப்போவதற்குள் இருப்பதும் இல்லாததும் தெரிந்துவிடும். என்ன ஜனார்த்தனா?—ஏன் உங்கள் எல்லோர் அபிப்பிராயமும் அப்படித்தானே?" என்றார் தம்முடைய பரிவாரங்களைப் பார்த்து.

அங்கிருந்தவர்கள் சிரோமணிகளின் வார்த்தையை ஆதரித்தனர். ஆனால் சாவி யார் கையில் இருந்ததோ அவன் மட்டும் இதற்கு இணங்கவில்லை. ஜீவானந்தன் ஒரு குறும்புச் சிரிப்புச் சிரித்து, "சிரோமணிகளே! எதற்காக இப்படிக் குதிக்கிறீர்கள்? நகை ஏதாவது இராமற்போனாலும், அநாதையாகப் போகும் அவளிடமிருந்து திரும்பி வரப்போகிறதில்லை. இன்றைக்கு நீங்களெல்லாம் பெரிய மனசு பண்ணிப் போய் வாருங்கள். எனக்கு என்று ஒழிவு ஏற்படுகிறதோ அன்று ஜாபிதாவில் உள்ளபடி உடைமைகள் இருப்பதையும் இராததையும் பார்த்து உங்களுக்கு அறிவித்து விடுகிறேன்" என்றான்.

தங்களுடைய காரியம் பலனளிக்கவில்லையென்று தெரிந்து கொண்டதும் எல்லோரும் கோபத்திற்கு ஆளாயினர். ராய் உட்கார்ந்திருந்தவர் எழுந்திருந்து, "ஆனால் அது முக்கியமான பொறுப்பாயிற்றே......" என்றதும், ஜீவானந்தன் அவரைப் பின்பற்றி, "ஆமாம், ராய்மஹாசயரே! நீங்கள் சொல்வது சரியே. அது எனக்குள்ள முக்கியமான பொறுப்புத்தான்" என்றான்.

அறைக்கு வெளிப்பக்கமாக வந்து சிரோமணிகள் ஜனார்த்தன ராயின் சரீரத்தைத் தொட்டு, "பார்த்தாயா; வரவரத் தன் சொரூபத்தை காட்ட ஆரம்பித்துவிட்டான். குடிவெறி தலைக்கு ஏறிக் கொண்டுவருகிறது. தாறுமாறுமாகப் பிதற்றுகிறான். ரொம்ப நாள் வாழமாட்டான்" என்றார்.

ஜனார்த்தனர், 'உம்' என்று பெருமூச்செறிந்து, "நாம் எதற்கு அஞ்சினோமோ அதுவே நேர்ந்து விட்டது" என்றார்.

"அம்பாளின் விலையுயர்ந்த பொருள்கள் யாவும் ஒவ்வொன்றாகச் சாராயக் கடைக்குப் போக வேண்டியதுதான்! போகிற பிடாரி நம்மேல் சரியாக வஞ்சம் தீர்த்துக்கொண்டாள்" என்றார் சிரோமணி.

ஊரார் கோஷ்டியைச் சேர்ந்த ஒருவர், "யஜமானர் சாவியை நம்மிடம் தர மறுக்கிறார். அதற்குமேல் நாம் நடத்த வேண்டியது என்ன?" என்று ஒரு கேள்வியைக் கிளப்பினார்.

சிரோமணிக் கிழவர் எரிமுகத்துடன், "அதற்குமேல் என்னவா? இன்னும் அவனை வற்புறுத்தினால், நம்மையெல்லாம் கட்டிப்போட்டு வாயில் சாராயத்தையும் மாமிசத்தையும் அடைத்து விடுவான்" என்று கூறும்போது அவரது ஸர்வாங்கமும் மயிர்க் கூச்செறிந்தது.

விசாலமாகத் திறக்கப்பட்டிருக்கும் வாயிலை நோக்கி நிலைத்த கண்களுடன் ஜீவானந்தன் வீற்றிருந்தான். பிரபுல்லன் அவனை அணுகி, "மறுபடியும் இதென்ன? அண்ணா, இன்னுமொரு தொல்லையில் சிக்கிக்கொண்டீர்களே? சாவியை அவர்களிடம் வீசி எறிந்து விடுகிறதுதானே?" என்றான்.

ஜீவானந்தன் வெளியே திரியும் தன் பார்வையை அவன்மீது செலுத்தி, "கொடுத்துவிடுவேன். பின்னால் ஏதாவது தகராறு வரப்போகிறதென்றே நேற்று இரவு அவள் என்னிடம் இந்தச் சாவியைக் கொடுத்தாள்" என்றான்.

பிரபுல்லனுக்கு இந்த வார்த்தையில் நம்பிக்கை உண்டாகவில்லை. "இரும்புப் பேழையினுள் அப்படி விலையுயர்ந்த சொத்துக்கள் என்ன இருக்கின்றன?" என்று கேட்டான்.

"எனக்குமட்டும் என்ன தெரியும்? இன்று காலையில்தான் அதனுள் இருப்பதாகச் சொல்லப்படும் சொத்துக்களின் ஜாபிதாவை ஒருதரம் படித்துப் பார்த்தேன். மோஹராக்கள், வெள்ளிக்காசுகள், வைரமுடி, மரகத ஆபரணங்கள், நல்முத்து மாலைகள், நவரத்ன கவசம், இன்னும் பல அணிகலங்கள் இருக்கின்றனவாம். கோயில் சம்பந்தமான தஸ்தவேஜுகள், பொன்னாலும் வெள்ளியாலும் செய்த பாத்திரங்கள் இவற்றிற்குக் குறைவே இல்லை. இந்தக் குக்கிராமத்தின் தெய்வத்திற்கு எத்தனையோ வருஷங்களாக இப்படி விலையுயர்ந்த சொத்துக்கள் குவிந்திருக்குமென்று நான் கனவிலும் எண்ணவில்லை. கொள்ளைக்குப் பயந்து

பைரவிகள் இதை யாரிடமும் வெளியிடவில்லையென்று தெரிகிறது'' என்முன்.

பிரபுல்லன் மருண்டு போய், ''என்ன? அவையெல்லாம் உள்ள பேழையின் சாவி உங்கள் கையிலா இருக்கிறது? அவை செவ்வைப் பட்டாற்போலத்தான்!'' என்முன்.

பிரபுல்லன் பேசியது ஜீவானந்தனுக்குக் கோபத்தை மூட்ட வில்லை. ''பிரபுல்ல! நீ வாஸ்தவத்தையே சொன்னாய். இவ்வளவு உடைமைகள் இருப்பதை உணரும்போது என்மேலேயே எனக்கு அவநம்பிக்கை ஏற்படுகிறது'' என்றான். சிறிது நேரம் மௌன மாய் இருந்துவிட்டு, ''எனக்கு மட்டும் எதற்கு அந்த வீண் தொல்லை? நான் எவ்வளவோ மறுத்துப் பார்த்தேன். 'ஜனார்த்தன ராயிடமே சேர்த்துவிடேன்' என்றேன் அவளிடம். ஆனால் அவள் சற்றும் கேட்பதாயில்லை. என் கையிலேயே வலியக் கொண்டு வந்து வைத்தாள். அது என் தவறு?'' என்றான்.

பிரபுல்லனும் சிறிதுநேரம் சும்மாயிருந்தான். ''அவள் அப்படிச் செய்ததற்குக் காரணம் என்ன?'' என்றான்.

''தன்மீது ஏற்கெனவே உள்ள கெட்ட பெயர் போதாமல் திருடியென்று தன்னைச் சொல்லிவிடப்போகிறார்களே என்று அவள் பயந்திருக்கலாம். அவர்கள் இந்தப் பழியையும் போடுவார்கள் என்று அவளுக்கு நன்றாகத் தெரியும்'' என்றான் ஜீவானந்தன்.

''ஆனால் உங்களை அவள் நன்றாகத் தெரிந்துகொள்ளவில்லை யென்று தெரிகிறது'' என்றான் பிரபுல்லன்.

ஜீவானந்தன் முகத்தில் சிரிப்பு உலாவிற்று. ஆனால் அந்தச் சிரிப்பில் சந்தோஷத்தின் சின்னமே தென்படவில்லை.

''அது அவளுடைய தவறு; என்னுடையதல்ல. அவள் விஷயத்தில் நான் எந்த விதமாய் நடந்துகொண்டாலும், என்னை இன்னவிதமானவன் என்று அறிந்து கொள்வதை மட்டும் நான் தடுக்கவில்லையே. ஒருநாளும் அந்தக் குற்றத்தை நான் செய்யவில்லை. ஆச்சர்யமானது இந்த உலகம்; அதனினும் அதிசயம் மனிதரின் இயல்பு. அதன் போக்கைத் தெளிவாகச் சொல்வது கடினம். நான் அவள் கையிலிருந்து 'மார்பியா'வைக் கண்ணை மூடிக்கொண்டு உட்கொண்ட கதைதான் உனக்குச் சொல்லியிருக்கிறேனே. அந்த ஒரு நிகழ்ச்சியே அவள் என்னை நம்புவதற்குக் காரணமாயிருக் கிறது. அன்று நிஜமாகவே என்னை இரு பக்கமும் ஆபத்துவந்து கவிந்து கொண்டது. அவளை நம்புவதைத் தவிர வேறு வழி எனக்குத் தோன்றவில்லை. அவற்றையெல்லாம் ஷோடசி மறந்து விட்டிருக் கலாம்; ஆனால், இது ஒன்று மட்டும் அவள் மனத்துள் வேர் ஊன்றிவிட்டது என்று தோன்றுகிறது. எவனை நம்பி ஒரு சமயம் தன் நலனையே மறந்து விட்டாளோ அவனை மீண்டும் எப்படி அவநம்பிக்கையுடன் நோக்குவது? அவ்வளவுதான்; எல்லாவிதப் பொறுப்பையும் கண்ணை மூடிக்கொண்டே என் வசம் தந்தாள். பிரபுல்ல! என்னைப்போன்ற பெரும் புரட்டன் கூடச் சில வேளை

களில் திருத்திக் கொள்ளமுடியாத தவறுகளைச் செய்துவிடுகிறான். இப்படித் தவறுகள் நேராமற் போனால் உலகவாழ்க்கை சாரமற்றே போகும்'' என்றான்.

பிரபுல்லன் தலையை அசைத்து, ''சரியாகச் சொன்னீர்கள், அண்ணா! சட்டென்று இந்தத் தஸ்தவேஜுகளை யெல்லாம் கொளுத்திச் சாம்பலாக்கிவிட்டுத் தாராதாஸைக் கூப்பிட்டு மிரட்டுங்கள். கையில் சிக்கியிருக்கும் மோஹராக்கள் ஸாலமன் துரையின் கடனை அடைக்க உதவியாக இருந்தால், இந்த உலகவாழ்க்கை உங்களுக்கு ஏன் சாரமற்றுப் போகிறது?'' என்றான்.

''பிரபுல்ல, இந்தமாதிரி வெடுக்கான பேச்சுக்களுக்காகத்தான் உன்மேல் எனக்கு அளவற்ற பிரியம்'' என்றான் ஜீவானந்தன்.

பிரபுல்லன் இரு கைகளையும் கூப்பி, ''இந்தப் பிரியத்தை இனிச் சற்றுக் குறைத்துக்கொண்டால் நல்லது, அண்ணா. உங்களுக்குத் தொண்டு புரிந்து புரிந்து இந்த அடிமையின் பாடு தீர்ந்துவிட்டது. கொஞ்ச நாளாவது வெளியே சென்று வாய்க்கு ருசியாகச் சாப்பிட்டால்தான் என்னால் வேறு ஏதாவது செய்யமுடியும், அண்ணா. நாளைக்கே நான் விடை பெற்றுக்கொள்வதாக இருக்கிறேன்'' என்றான்.

''ஆனால் போய்விட நிச்சயித்துவிட்டாயா? நீ இந்த ஒரு தரம் மட்டுமா இப்படி விடைபெற்றுக்கொண்டு போயிருக்கிறாய், பிரபுல்ல?'' என்றான் ஜீவானந்தன்.

''நாலே நாலுதரம்'' என்று சொன்னதும் பிரபுல்லன் சிரித்துவிட்டான். ''அண்ணா, பகவானுடைய கிருபையால் பெரிய மனுஷ்யன் இட்ட அன்னத்தைப் புசித்து வயிறு வளர்த்தேன். நடுநடுவே இரண்டொரு சிங்காரச் சொல்லும் கேட்டுக்கொள்ள வேண்டியிருந்தது. அண்ணா, உங்களைத் தவறாக நினைக்கவில்லை. வெகு நாட்களாக உங்களுக்குத் தாளம் போட்டு என் உடலை வளர்த்தேன். ஆனால் உண்மையில் என் உடலில் சுத்த ரத்தம் ஒரு பொட்டாவது இருந்தால்தானே! சாயந்தரத்திற்குமேல் இருட்டினதும் ஒரு காரியம் செய்யலாமென்று எண்ணுகிறேன். உடம்பை மூடிக்கொண்டு யார்கண்ணிலும் படாமல் ஷோடசி பைரவியை ஒரு தரம் என் மனமார ஸேவித்துவிட்டு அவளுடைய பாததூளியைக் கொள்ளவேண்டு மென்றிருக்கிறேன். அது நல்லதோ கெட்டதோ - உங்களுடைய உப்பைத் தின்றிருக்கிறேன் இன்றுவரை - இந்த ஒரு காரியத்தைச் செய்யாவிட்டால் எனக்கு நீங்கள் இட்டிருக்கும் அன்னம் ஜீர்ணமே ஆகாது; இரும்புக் கட்டியைப்போல் அல்லவோ என் வயிற்றில் உளைத்து என்னை வாட்டும்?'' என்றான்.

ஜீவானந்தன் சிரிக்கவேண்டுமே என்று சிரித்து, ''ஏது, பிரபுல்ல, இன்றைக்குப் பொங்கிப் பொங்கி வருகின்றனவே உணர்ச்சி மிகுந்த வார்த்தைகள்?'' என்றான்.

பிரபுல்லன் மீண்டும் கரங்களை ஒன்று சேர்த்து, ''அண்ணா, சற்றுப் பொறுமையாகக் கேட்கவேண்டும். இதோ முடித்து

விடுகிறேன். உங்களுக்கு நான் செய்த புனிதத தொண்டிற்குப் 'பென்ஷனு'க ரூபாய் ஐயாயிரம் உயிலில் எழுதி வைத்திருக்கிறீர்கள்: தயை கூர்ந்து அந்த உயிலை ரத்து செய்துவிடுங்கள். சண்டீ தேவியின் சொத்து உம் கையில் வந்ததுமே மோப்பம் பிடித்துக் கொண்டு, அனுசரர்கள் தாமாகவே வருவார்கள். அந்த விஷயத்தில் உங்களுக்கு யாதொரு குறையும் உண்டாகாது. ஆனல் இவ்வளவு பெரிய தானம் செய்து பணததைப் பாழாக்கவேண்டாம்" என்ருன்.

"ஆனல் நீ என்னைவிட்டு என்றென்றமே பிரிந்துபோய் விடுவதாகத் தெரிகிறது" என்ருன் ஜீவானந்தன்.

பிரபுல்லன் முன்னிருந்தபடியே கூப்பிய கரத்துடன், "நான் கடைசிவரை மாருமல் இதே கொள்கையுடன் இருக்கவேண்டுமென்று உங்களுடைய ஆசிர்வாதத்தைக் கோரி நிற்கிறேன்" என்ருன்.

ஜீவானந்தன் பேசவில்லை; பிரபுல்லன் மட்டும், "அவள் (ஷோடசி) எப்போது புறப்படுகிருள் என்று தெரியுமா?" என வினவினன்.

"தெரியாதே."

"எங்கே போவதாக உத்தேசம், அவளுக்கு?"

"அதையும் அறியேன்."

"தெரிந்துகொள்வதனல் ஒரு லாபமும் இல்லை, அண்ணு!" என்று கூறியதும் பிரபுல்லனின் முகபாவம் மாறிவிட்டது. "அடே அப்பா! அவள் ஒரு பெண் ஜன்மமாகத் தோன்றவில்லை. புருஷனுக்குரிய தீரம் இருக்கிறதே, அவளிடத்தில். அன்று கோயிலில் அவளை வெகு நேரம் கவனித்தேன். உச்சிமுதல் உள்ளங்கால் வரை கல்லைப்போல் கடினமாகவல்லவோ தோன்றினள்! அடித்து அடித்துத் துகளாகச் செய்யலாமே ஒழிய உலையில் இட்டு உருக்கி நம் இஷ்டப்படி உருவாக்க முடியாத ஒரு கடினமான வஸ்து அவள்" என்ருன்.

ஜீவானந்தன் இகழ்ச்சிக் குறிப்புடன், "ஆனல் பிரபுல்ல! நீ போய்விடுவது இந்தத் தடவை வாஸ்தவந்தானு?" என்ருன்.

பிரபுல்லன் வணக்கத்துடனேயே பதிலளித்தான்; "பெரியவர்களின் ஆசிர்வாதம் இருந்தால் என்னுடைய கோரிக்கை ஈடேருது ஏன் போகிறது?"

"அது எப்படியாவது கிடக்கட்டும். அப்புறம் நீ என்ன செய்வதாக உத்தேசித்திருக்கிருய்?" என்ருன் ஜீவானந்தன்.

"நான்தான் என்னுடைய எண்ணங்களை உங்களிடம் வெளிப்படையாகச் சொல்லிவிட்டேனே, அண்ணு? வாய்க்கு ருசியான சாப்பாட்டைத் தேடுவது முதல் காரியம். அண்ணு! கோபித்துக் கொள்ளவேண்டாம். நீங்கள் எனக்குப் போட்ட அன்னத்தை நான் தூஷிக்கவில்லை. என்னுடைய நாக்கு உங்கள் பரிசார

கனுடைய சமையலை ருசி பார்த்துப் பார்த்துச் செத்துவிட்டது'' என்றான்.

சிலநேரம் ஜீவானந்தன் பேச்சற்று இருந்தான். பிறகு அவன் பிரபுல்லனை நோக்கி, "ஷோடசி இந்த ஊரைவிட்டு என்றுமே போய்விடுவாளென்று உனக்குத் தோன்றுகிறதா?'' என்றான்.

"ஆமாம் அதற்குக் காரணம் உலகத்தில் எல்லோருமே பிரபுல்லனைப்போல் இருக்கமாட்டார்கள். சரிதானே அண்ணா, நான் சொல்வது? ஒரு சமாசாரம் சொல்ல மறந்தே போய்விட்டேனே: நேற்று இராத்திரி ஆற்றங்கரையோரமாக உலாவப் போயிருந்தேன். என்ன அதிசயம், அந்தப் பக்கிரி பாபாவை எதிர் பாராத விதமாய்க் கண்டேன். ஒருசமயம் அவர் வசிக்கும் ஆல மரத்திலுள்ள புறாக்களை நீங்கள் சுட்டுக் கொல்ல யத்தனிக்கையில் உங்களுடைய கையிலிருந்து துப்பாக்கியைப் பிடுங்கிக்கொண்டாரே தெரியுமா? அவர்தான் அண்ணா! அவரை மிகத் தாழ்மையுடன் வணங்கினேன். அவரைத் தூக்கிவிட்டுப் பணம் சம்பாதிக்க ஏதாவது மூலிகையின் ரகஸ்யத்தை அறிந்து கொள்ளப் பிரயத்தனப்பட்டேன். ஆனால் பேர்வழி ரொம்ப அழுத்தமானவர். ஒன்றையும் வெளிவிடவில்லை. அவர் தாம் ஷோடசி பைரவியைப் பார்க்க வந்ததாகவும், இப்போது தாம் திரும்புவதாகவும் சொன்னார். ஷோடசி பைரவி எல்லாவற்றையும் உதறிவிட்டுப் போய் விடுவதைப்பற்றியும் அவர் சொல்லத்தான் நான் கேள்விப் பட்டேன்.''

ஜீவானந்தன் ஆவல் மிகுந்தவனாய், "அவருடைய மொழியைக் கேட்டுக் கொண்டா அவள் போய்விடுகிறாள்?'' என்றான்.

பிரபுல்லன் தலையசைத்து, "இல்லை. அதற்கு மாறாக அவருடைய உபதேசத்தை நிராகரித்தே அவள் போக முற்பட்டிருக்கிறாள்'' என்றான்.

ஜீவானந்தன் பரிஹாஸமாக, "பக்கிரிபாபா அல்லவோ அவளுடைய பரமகுரு என்று கேள்விப்பட்டேன்? அல்லவா, பிரபுல்ல? குருவின் ஆக்ஞையை மீறி நடப்பது பாபமாயிற்றே?'' என்றான்.

"இந்தச் சந்தர்ப்பத்தில் அப்படி மீறவேண்டி யிருக்கிறது'' என்றான் பிரபுல்லன்.

"இத்தகைய விரக்தி அவளுக்கு எதனால் ஏற்பட்டிருக்கும்?''

"உங்களால்தான்'' என்றதும் பிரபுல்லன் சற்று மௌனமாக இருந்துவிட்டு, "இதை உங்களிடம் வெளியிடுவது நன்றாயிருக்குமா என்றுதான் தயங்குகிறேன். பக்கிரிபாபாவுக்கு உங்களிடத்தில் பயம். தம்மை ஏதாவது கலகத்தில் மாட்டி விட்டால் என்ன செய்வதென்ற திகிலே. இல்லாவிட்டால் யாரையும் லக்ஷ்யம் செய்பவர் அல்ல அவர்; யாருக்குமே அஞ்சாதவர்'' என்றான்.

விழிகள் விரிய ஜீவானந்தன் பிரபுல்லனையே நிலைத்து நோக்கினான். பிரபுல்லன் சிரித்தவண்ணம், "அண்ணா, உங்களுக்குப்

பகவான் அல்பசொல்பமான புத்தியைக் கொடுக்கவில்லை. ஆனால் தன்னுடைய பொறுப்பையெல்லாம் நேற்று அவள் உங்களிடம் கொடுத்து விட்டதனால் அவளே பெரும் பிசகைச் செய்திருக் கிறாள். அதை வாங்கிக்கொண்டதனால் நீங்களும் ஒரு பெரும் பிழை யைச் செய்தவராகிறீர்கள். தங்கள் எண்ணம் போகப் போகத்தானே தெரியும்?'' என்றான்.

இந்த வார்த்தைக்கு ஜீவானந்தன் யாதொரு மறுமொழியும் பகரவில்லை; பேசாமல் இருந்தான்.

அந்தி நெருங்கும் சமயம். வேலைக்காரன் மதுபானம் நிரம்பின கிண்ணத்துடன் ஜீவானந்தன் முன்னே வந்து நின்றான். ஜீவானந் தன் கையை அசைத்து, ''தேவை இல்லை; எடுத்துச் செல்'' என்று ஆக்ஞை செய்தான்.

வேலையாள் ஒன்றும் தோன்றாமல் விழிப்பதைப் பார்த்துப் பிரபுல்லன், ''ஏன் அண்ணா, உங்களுக்கு எப்போது தேவை என் பதையாவது சொல்லுங்களேன்?'' என்றான்.

வேறு எங்கேயோ அலையும் மனமுடைய ஜீவானந்தனின் செவிகளில் பிரபுல்லனது பேச்சு விழுந்ததும் அவன் திரும்பினான்.

''இன்றைக்கு எனக்கு வேண்டாம். வேண்டும்போது சொல்லி யனுப்புவேன்'' என்றான். திரும்பிப் போகும் வேலையாளை விளித்து, ''டேய், டீ இப்போது தயாராக இருந்தால் கொண்டுவா'' என்றான்.

பிரபுல்லன் ஏளனம் செய்யும் குரலில், ''அண்ணா, நான் சொல் வதைக் கேளுங்கள். டீ இல்லாமல் நான் எப்படி உயிரை வைத்துக் கொண்டிருக்கிறேன்?'' என்றான்.

''ஆனால் சரி. இரண்டு பேருக்குமாக நிறைய டீ போடச் சொல்லு'' என்றான் ஜீவானந்தன்.

வேலைக்காரன் போனபின்பு பிரபுல்லன் ஜீவானந்தனை நெருங்கி, ''அண்ணா, உங்களுக்குத் திடீரென ஏன் அமிர்தத்தின் மீது வெறுப்பு ஏற்பட்டுவிட்டது?'' என்றான்.

''வெறுப்பு இல்லையடா, தம்பீ. இனிமேல் அதை நான் தொடப்போவதில்லை'' என்றான் ஜீவானந்தன்.

பிரபுல்லன் சிரித்தான். ஜீவானந்தன் சற்றுமுன்பு தன்னைப் பரிகசித்துச் சொன்னது போலவே அவனும், ''இந்தமாதிரி நீ சொன்னது இது எத்தனாவது தடவை தெரியுமா, அண்ணா?'' என்றான்.

ஜீவானந்தனுக்குக் கோபம் வரவில்லை. அவனும் சிரித்துக் கொண்டே, ''இப்போது ஏன் சொல்லவேண்டும்? உயிரோடு மட்டும் நீ இருக்கவேண்டும். அப்புறம் தெரியும், இதன் உண்மை'' என்றான்.

பிரபுல்லன் பல்லை இளித்தானே யொழியப் பதில் ஒன்றும் சொல்லவில்லை. பணியாள் ஒருவன் இவர்கள் இருக்கும் அறையில்

விளக்கை ஏற்றிவைத்துவிட்டுச் சென்றான். வானில் ஒளியும் மங்கிக் கொண்டே வந்தது. ஜீவானந்தன் எழுந்து நின்று, "சற்று வெளியே போய் வருகிறேன்" என்று கிளம்பினான்.

பிரபுல்லன் வியப்படைந்து, "இந்த உடையுடனேயா?" என்றான்.

"இருந்தால் என்ன?"

"கூடத் துணைக்கு யார்? கைத்துப்பாக்கியையும் எடுத்துக் கொள்ளவில்லையே?"

"அதுவும் எதற்கு? இன்று தனியாகவே ஊரை ஒரு தரம் சுற்றி வரலாமென்று புறப்படுகிறேன்."

பிரபுல்லன் இதை ஆக்ஷேபித்து, "வேண்டாம் அண்ணா, இந்த மாதிரி அசட்டுக்காரியம் செய்யாதீர்கள். இருட்டோ கவிந்து கொண்டு வருகிறது. வழி எங்கும் உங்களுக்கு விரோதிகள் இருக்கிறார்கள்" என்று கூறிவிட்டு, உடனே அலமாரியைத் திறந்து பிஸ்தலை எடுத்து ஜீவானந்தனுடைய கையில் கொடுத்தான்.

ஜீவானந்தன் இரண்டடி பின் வைத்து, "பிரபுல்ல, அந்தச் சனியனை நான் இனித் தொடமாட்டேன்" என்று சொல்லிப் பிஸ்தலை வாங்கிக்கொள்ள மறுத்துவிட்டான்.

பிரபுல்லன் திகைத்துப் போய், "என்ன அண்ணா, உங்களுக்குத் திடீரென இந்த மாறுதல்? காவல்காரன் எவனையாவது கூடவே அழைத்துச் செல்லுங்கள். வீணாக ஆபத்தில் சிக்கிக்கொள்ள வேண்டாம்" என்று எச்சரிக்கை செய்தான்.

"எனக்கு இன்று முதல் யாருடைய துணையும் வேண்டாம். நான் எங்கேயும் ஒன்றியாகப் போவதென்று துணிந்துவிட்டேன். எனக்குச் சத்துரு எங்கேயும் இல்லை என்ற எண்ணத்துடனேயே இருப்பேன். என்னால் யாருக்கும் இனி ஒரு தீங்கும் ஏற்படாது. அதற்குமேல் என்ன நேருகிறதோ நேரட்டும்; நான் அஞ்சவில்லை. அப்படியொருகால் எனக்கு விபத்து வந்தால் நான் யாரிடமும் போய் முறையிட்டுக்கொள்ளப்போவதில்லை" என்று மொழிந்து அவன் தன்னந் தனியே வெளியே திகழும் இருளில் மெல்ல மெல்ல நடந்து சென்றான்.

## 24

**வ**ழிய வழியக் கிண்ணத்தில் வந்த மதுபானத்தை ஜீவானந்தன் மறுத்தபோது, 'இது உள்ளூறச் செய்தது அல்ல; வேடிக்கைக்காகவே செய்தது' என்று நினைத்தான் பிரபுல்லன். அதனால்தான் ஜீவானந்தனைக் கேலிசெய்ய அவனுக்கு இடம் வாய்த்தது. குலை நோயால் வேதனைப்படும் சமயங்களில், வைத்தியன் தடுத்துவிடவே குடிக்கும் பழக்கத்தைச் சில நாட்கள் அவன் விட்டொழித்த தென்னவோ உண்மை. ஆனால் ஆரோக்கியத்துடன் இருக்கையில் அவன் குடிப்பதை ஒருபோதும் நிராகரித்ததில்லை.

இன்றுதான் அதற்கு மாருக நடந்துகொண்டான். உலக வாழ்விலே அவனுக்குச் சட்டெனவெறுப்புத் தட்டியது. 'சாந்தி குஞ்ஜ'த்திற்கு வெளியே தன்னைச் சுற்றிலும் உள்ள எளிய மக்கள் பெருந் துன்பத்தினுல் அழுது கண்ணீர் வடிப்பது அன்றுதான் அவனது மூளைக்குள் புக்கது. தான் வாழும் உலகத்தைத் தவிர வேருெரு கடினமான பிரபஞ்சம் இருப்பது அவனுக்கு வெளிச்சமாகிக் கொண்டு வந்தது.

மாளிகையின் வாயிலைக் கடந்து அவன் வெளியே செல்லும் போது வானில் தயங்கும் ஒளி சிறிதுசிறிதாகக் கருமையில் கலந்து வந்தது. ஒருபுறம் நீரற்ற ஆற்றின் மணற்பரப்பு வளைந்து வளைந்து திசைமுடிவைத் தொடும் காட்சி. மறுபுறம் மஹாசண்டிகையின் ஆலயம்வரை விஸ்தீரணமான புல் கருகிய வயல்வெளி. பாட்டையில் ஒரு பிராணிகூடத் தென்படவில்லை. வயல்களில் உழவர் எவரையும் காணவில்லை. ஆடு மாடு மேய்ப்பவர்களும் தம் மந்தைகளை மடக்கிக்கொண்டு வீடு திரும்பி விட்டனர்; அதிக நாழிகை ஆகிவிட்டது. ஜனசந்தடியற்ற அந்தப் பூப்பிரதேசம் அந்த வேளையில் திக்கற்ற ஒரு தாய் வருத்தத்தினுல் மெலிந்து தன்னெதிரே நிற்பது போல் ஜீவானந்தனுக்குத் தோன்றியது. கிராமலக்ஷ்மியின் பரிதாபமான உருவம் அவன் கண்களில் நீரை வரவழைத்து, அவனது உள்ளம் வேதனைப் படும்படி செய்தது. இதற்கு முன்பு அவன் எத்தனையோ முறை வெளியே உலாவச் சென்றிருக்கிருன். ஆனல் அன்னை பூமியானவள் தன் வருத்தத்தையும் ஏழைமையையும் இந்தக் குடியனின் ரத்தக் கண்களில் படவிடாமல் மறைத்து வைத்திருந்தாள். மேட்டிலிருந்து வீசும் வெம்மையான காற்று உடலில் வந்து படும்போது ஜீவானந்தனுக்கு அழுகை நெஞ்சில் வந்து அடைக்க ஆரம்பித்தது. அவன் மனம், 'தாயே! பாவியாகிய நான் உன்னை இதுவரை அலக்ஷ்யம் செய்தேனே; நீ மனோவேதனையினுல் விடும் பெருமூச்சோ இந்த வறண்ட காற்று? உன் இதயத்தைப் பிழிந்தெடுக்கும் துயரை என் பேரிலுள்ள வெறுப்பினுலா இத்தனை நாள் மூடிக்கொண்டு மௌனமாய் இருந்தாய்? ஹே மாத்ரு பூமி! என்னைச் சேர்ந்தவர்கள் உலகத்தில் எவரும் இல்லை. துக்கத்தையும் சுகத்தையும் நான் தனியாகவே அனுபவித்து வருகிறேன். இதனுல் அல்லவோ உன் உண்மை ரூபத்தைக் காண முடியாமற் போய் விட்டது? எனக்கு உன் வேதனையை எடுத்துச் சொல்வார் யார்? தாயே! உயிருடன் இருக்கும்போதே எனக்காக ஒரு பொட்டுக் கண்ணீர் சிந்துவார் இல்லையே. இறந்து போனுல் கேட்க வேண்டுமா! அவ்வளவு பாவம் செய்தவன் நான். இந்த அநாதையின் மீது இரக்கம் கொள், அம்மா!' என்று புலம்பியது.

எவளை அன்னையாகப் பாவித்து இந்த முறையீட்டைச் செய்துகொண்டானே அந்தப் பூமிதேவி எவருடைய எக்கத்தையுங் கண்டு இரக்கங் கொள்ளாத ஜடப்பிரகிருதி; என்றும் போலக் காலத்திற்கொரு தோற்றத்துடன் அவள் சலனமற்று இருப்பவள். உயர் கோட்டிற் பிறந்த அருவி சரிவில் பாய்ந்து சமதரையில் ஊர்ந்து சென்று தன் வேகத்திலேயே கண்ணுடையதாய்க் கடலோடு கலப்

பது போல் திடீரென ஜீவானந்தனுடைய மனத்திடை முளைத்த அமைதியின்மை வருத்தமாகப் பொங்கிக் கண்ணீராகப் பெருகி ஏழைமக்கள்பால் அனுதாபமாக மாறியது.

செல்லும் வழியில் தூர்ந்த வாய்க்கால் ஒன்று குறுக்கிட்டது. பள்ளத்தினின்று நீரை மேட்டிலுள்ள பயிர்களுக்கு இறைத்துக்கொள்ள அவ்வூர்க் குடியானவர்கள் சீர உழைப்பினால் வெட்டிய வாய்க்கால் அது. ஆனால் அது அரை குறையாகக் கிடந்தது. குமாஸ்தா ஏககடி நந்தியைத் திருப்தி பண்ணுமற் போகவே ஏழைமக்கள் பல நாள் பட்ட பாடு பலன் இல்லாமற் போயிற்று. உயிர்வாழ அவர்கள் எடுத்துக்கொண்ட ஒரு நியாயமான முயற்சி அற்பனின் சூழ்ச்சியால் வியர்த்தமாகிவிட்ட கதை ஜீவானந்தனுக்கு இலேசாகக் கவனம் வந்தது. அந்தச் சமயங்களில் அவனுக்கு எளியோர் என்றால் கிள்ளுக் கீரைதான். அவர்கள் விட்ட ரத்தக்கண்ணீரைக் கண்டு அவன் இளகியதில்லை.

தன் கொடுமையான ஆட்சியின் ஒரு கோர சின்னமாக அந்த வாய்க்கால் அவன் கண்ணெதிரே இருந்தது. முன்பு அதை அவன் பலதடவை பார்த்திருக்கிறான்; அதைத் தாண்டியும் இருக்கிறான். ஆனால் இன்றோ பாழடைந்த அந்த வாய்க்காலைக் காணும்போது அவன் விழிகளினின்றும் நீர் கசிந்தது. 'ஐயோ! என்ன அநீதம் செய்துவிட்டேன்! எத்தனை எளிய குடும்பங்கள் வயிறார உணவின்றி இதனால் மடிந்தனவோ? எதனால் மனிதன் இப்படிக் குரூரமான காரியங்களைச் செய்யத் தூண்டப்படுகிறான்?' என்று எண்ணித் தன்னையே நொந்துகொண்டு துடித்தான். அந்த இடத்தை வெகு நேரம் சுற்றிப் பார்த்துவிட்டு, "கையில் பணம் இருந்தால் இன்றே நான் இவர்களுடைய துயரைப் போக்கி விடுவேன். நாளைக்கே ஆட்களை அமர்த்தி இந்த வாய்க்காலை நிரந்தரமான நீர்ப்பாசனத்திற்குத் தகுதியுடையதாகச் செய்துவிடுவேன். அப்போது இவ்வேழைகளின் பசியும் பிணியும் நீங்கிவிடும்" என்று சொல்லிக்கொண்டான். மேட்டிலிருந்து இறங்கிப் பள்ள நிலங்களில் ஏர் உழுது கரடு முரடான ஒற்றையடிப்பாதையில் இடறிக்கொண்டே சென்று, 'கால்வாயைப் புதுப்பிக்க எவ்வளவு ரூபாய் செலவாகும்? சுண்ணும்பு, செங்கல் எவ்வளவு பிடிக்கும்? கட்டி முடிப்பதற்கு எத்தனை நாட்கள் ஆகும்?' என்றெல்லாம் கணக்குப் போடுவதில் ஈடுபட்டிருந்தான். அந்தப் பேயிருளில் ஏதோ ஒன்று திடுதிடுவென்று பாய்ந்து செல்லும் அரவம் கேட்டது. உடனே அவனுக்குத் தன் நினைவு வந்தது. 'ஏதாவது நரி ஓடியிருக்கும்' என்று ஊகித்துக்கொண்டான். பிறருக்காக இவ்வளவு பரிதாபம் காட்டுவது தன் குணமல்லவே என்று எண்ணிக்கொள்ளும்போது அவனுக்கே ஆச்சர்யமாக இருந்தது.

"இந்த வயற் காட்டில் நான் இப்படி அலைவதை யாராவது பார்க்க நேரிட்டால் என்ன நினைத்துக்கொள்வார்? ஜமீன்தாருக்குச் சித்தம் ஸ்வாதீனத்திலிருக்கிறதா என்று சந்தேகிப்பர். இது என்ன, வழக்கத்திற்கு விரோதமாக இருக்கிறதே என்னுடைய

போக்கு! எதனுல் நான் இப்படி மாறிவிட்டேன்! தயை தாக்ஷிண்யம் சற்றும் இராத எனக்கு அவை எங்கிருந்து முளைத்தன?'' என்று தனக்குள்ளேயே கிளத்தி மறுபடியும் பாட்டை வழியாகவே நடந்தான். இந்தப் பலஹீனமான மனப்பான்மைக்கு மதுபானம் அருந்தாமல் இருப்பது ஒருவேளை காரணமாய் இருக்குமோவென்று கூட அவன் ஐயமுற்றுன். இன்று காரணமின்றி ஓர் அழுகைக் குரல் அடிக்கடி உள்ளத்தில் ஒலிப்பது இதனுல்தான் என்று தெரிந்து கொண்டான். வாஸஸ்தலத்தை விட்டு இவ்வளவு தொலைவு வந்தது என்ன நோக்கத்துடன் என்று அவனுக்கே விளங்கவில்லை. திடீரென ஏதோ ஒன்றை நினைத்துக்கொண்டு கிளம்பிவிட்டான். புறப்படுகையில் என்ன என்னவோ யோசனைகள் அவனுக்குத் தோன்றின. ஆனுல் ஆராயுங்கால் அவை தெளிவில்லாதபடி குழம்பிக் கிடந்தன. 'வீட்டைத் துறந்துவிடும் எண்ணமா இது?' என்று ஆலோசிக்கும்போது அப்படி ஒரு பிரதிக்ஞை தான் கொண்டதாக அவனுக்குத் தோன்றவில்லை. ஆனுல் தன்னிடத்திற்குத் திரும்ப அவனுக்குச் சற்றும் மனம் இல்லை. கொஞ்சதூரம் பாட்டைவழியே சென்றுன். மறுபடியும் வயல்களில் விழுந்து சண்டிகா தேவியின் கோயில்வரை நீண்டிருக்கும் ஒற்றையடிப்பாதையைப் பின்பற்றினுன். வழி முழுவதும் வாய்க்காலைப் புதுப்பிக்கும் யோசனையே அவனுக்கு. இந்தச் சிறு கைங்கரியம் பலருடைய வறுமையை நீக்கி அன்னம் படைக்கும் என்ற எண்ணம் வரும்போது புதிய உற்சாகமே கொண்டான். ஆனுல் இவையெல்லாம் அவன் மனம் புனைந்த க்ஷணநேரக் கற்பனைகளே. 'காரியத்தில் அவை கைகூடுமா? நாளைக்கு இவற்றையெல்லாம் மறக்காமலிருப்போம் என்பதை நிலையாகச் சொல்லமுடியுமா?' இவ்வாருன சந்தேகங்கள் அவன் மனத்திடை எழுந்தன. சட்டென எதிரே இருண்ட ஆகாய படத்தில் மஹாசண்டிகையின் கோயில் கோபுரம் மங்கலாகத் தோன்றுவதைக் காணும்பொழுது, 'இவ்வளவு தொலைவா வந்துவிட்டோம்?' என்று பேராச்சரியம் கொண்டான் ஜீவானந்தன். கோயிலை நண்ணியபோது, அதன்சிறிய கதவு மட்டும் திறந்தபடி இருந்தது. அக்கம்பக்கம் ஒரு சந்தடியும் இல்லை. அர்த்த ஜாமம் முடிந்து நாழியும் ஆகிவிட்டது. ஸந்நிதிவாயில் மூடிக்கிடந்தது. பிராகாரங்களில் ஒரு விளக்கையும் காணவில்லை. எங்கும் அந்தகாரத்தின் ஆட்சியே. முன்னுல் இருந்த நாட்டிய மண்டபத்தில் மாத்திரம் இரண்டோர் அகல் விளக்குகள் மினுக்மினுக்கென்று மங்கிய ஒளிவிடுவது தெரிந்தது. ஜீவானந்தன் மண்டபத்தின் மருங்கே சென்று கவனிக்கும்போது நாலைந்து உருவங்கள் தலை முதல் பாதம்வரை போர்த்துக்கொண்டு சுருட்டிப் படுத்தவண்ணம் உறங்கிக் கிடந்தன. எவனே ஒருவன் மட்டும் தூக்கம் பிடிக்காமல் கற்றூணில் தலையைச் சாய்த்தபடி ருத்ராக்ஷமாலையை உருட்டியவாறு ஜபித்துக் கொண்டிருந்தான்.

ஜீவானந்தன் அவனை நெருங்கி, "யாரப்பா நீ? எந்த ஊர்?'' என்று விசாரித்தான்.

அந்தக் கன இருளில் ஜீவானந்தனுடைய வெளுப்பான உடை எடுத்துக் காட்டவே ஜபம் செய்யும் அந்த ஆள் அவனை அந்த ஊரைச் சேர்ந்த பெரிய மனுஷ்யன் எவனாகவாவது இருக்கவேண்டுமென்று ஊகித்து எழுந்தான். பணிவுடன், "ஸ்வாமி! அடியேன் பரதேசி" என்றான்.

"தேசாந்தரியா? ஓ.........நீ எங்கே போகவேண்டும்?" என்று கேட்டான் ஜீவானந்தன்.

"அடியேன் ஸ்ரீ ஜகந்நாத க்ஷேத்திரத்திற்குச் செல்ல வேண்டும்" என்றான் யாத்ரிகன்.

"எங்கிருந்து வருகிறாய்? இவர்களெல்லாம் உன்னுடன் வந்தவர்களா?" என்று ஜீவானந்தன் படுத்து உறங்குகிறவர்களைச் சுட்டிக் காட்டினான்.

"இல்லை, ஸ்வாமி. அடியேன் தனியாகத்தான் வந்தேன். மான்பூம் ஜில்லா என்னுடையது. இது மட்டும் அறிவேன்: இங்கு இருப்பவருள் இருவர் மேதினீபுர் ஆஸாமிகள். இன்று பிற்பகல் தான் வந்து தங்கினார்கள்" என்று அறிவித்தான் யாத்ரிகன்.

"சரி. எத்தனை தேசாந்தரிகள் தினந்தோறும் இந்தக் கோயிலுக்கு வருகிறார்கள் தெரியுமா? தேசாந்தரிப் பிரஸாதம் சரிவர யாத்ரிகர்களுக்கு வழங்கப்படுகிறதா?"

யாத்ரிகன் சற்றுத் தயங்கினான். அவன் பயத்துடனேயே, "ஸ்வாமி, பிரஸாதத்தை நம்பியா எல்லாரும் வருகிறார்கள்? வெகு தூரம் நடந்ததனால் களைத்துப்போய் நான் இங்கு வந்தேன். கொஞ்சநாள்வரை என்னால் நடக்கமுடியாது. உள்ளங்கால் தேய்ந்து வெடிப்பேற்பட்டு ரத்தம் கசிகிறது. பகவான் இந்த இடத்தைக் காட்டினார். இந்த ஆலயத்திலுள்ள பைரவி என்னுடைய கஷ்டத்தைத் தன் கண்ணாலேயே கவனித்துக் கால் சொஸ்தமாகும் வரை இங்கேயே தங்கி விட்டுப் போகச் சொன்னாள்" என்றான்.

"நல்லது. தாராளமாக இருக்கலாம். இடத்திற்கா பஞ்சம்?" என்றான் ஜீவானந்தன்.

"ஆனால் என்னுடைய துரதிர்ஷ்டம் அந்தப் புண்யவதியான பைரவிக்கு இன்று முதல் இந்தக் கோயிலில் யாதோர் அதிகாரமும் இல்லையாம். அவள் ஊரைவிட்டே போய்விடுவதாகக் கேள்விப்பட்டேன்" என்றான் அந்தப் பரதேசி.

"இதற்குள் அந்தச் சமாசாரம் எங்கும் எட்டிவிட்டதா? அவள் இராமற் போனால் என்ன? அவளுடைய உத்தரவுகள் இன்னும் செல்லுபடியாகும். உன்னைப் போய்விடு என்று சொல்வதற்கு யார் இங்கு ஐயன்?" என்று மொழிந்ததும் ஜீவானந்தன் யாத்ரிகன் பக்கத்திலேயே வந்து உட்கார்ந்து கொண்டான். அவ்விரவில் ஸமூகத்தின் இரு கோடியைச் சேர்ந்தவர்கள் அந்தரங்கமாகப் பேசுவது விசித்திரமாக இருந்தது. தனிகனான ஜீவானந்தன் அவ்வேழையின் ஸுகதுக்கங்களை நிதானமாக விசாரிக்கத் தொடங்கினான்.

பரதேசியின் பெயர் உமாசரணன். ஜாதியில் கைவர்த்தன். ஊர், மான்பூம் ஜில்லாவிலுள்ள வம்சீதடக் கிராமம். பஞ்சமும் நோயும் வந்துவிடவே வயிற்றுப் பிழைப்புக்காக அவன் ஊரை விட்டு வரவேண்டியதாயிற்று. இந்தத் துக்கத்தோடு துக்கமாக அவனுடைய மனைவியும், இரு குழந்தைகளும் வைசூரி கண்டு மாண்டு போயினர். மனம் வெறுத்துப்போய்ப் பிதுரார்ஜிதமான தன் வீட்டைத் தூர உறவினள் ஒருத்திக்குக் கொடுத்து விட்டுப் பரதேசியாகப் பரந்த உலகை நம்பி வந்த உருக்கமான கதையைச் சொன்னதும் பொங்கிப் பொங்கிச் சிறு பிள்ளையைப் போல் அழலானான் அப்பரதேசி. ஜீவானந்தனுடைய கண்களினின்றும் நீர் தாரை தாரையாக வழிந்தது. பிறருடைய துயர் அவனுக்குப் புதிதான ஓர் அனுபவம் அன்று. எத்தனையோ பேர் வாழ்க்கையில் இடிபட்டு அழுவதை அவன் பார்த்திருக்கிறான். ஆனால் அவை ஒன்றும் அவன் மனத்தில் பதியவில்லை. அது அவன் ஒருவனுக்கே தெரியும். இருட்டில் அங்கவஸ்திரத்தினால் தன்னுடைய கண்களைத் துடைத்துக் கொள்ளும்போதுதான் அந்த ஏழைக்கு வந்த இன்னல் யாவும் தனக்குத்தான் நேர்ந்ததாக ஜீவானந்தன் பாவித்துக்கொண்டான். அந்தப் பரதேசியைப்போல் ஓ வென்று கதறி அழுது தன் மனத்தை அழுத்திய பெரும் பாரத்தைப் போக்கிக் கொள்ள விரும்பினான். தேசாந்தரி சற்று ஆறுதலடைந்து, "பாபு, என்னைப் போன்ற துர்ப்பாக்கியன் இவ்வுலகில் எவருமே இல்லை" என்றான்.

அவனை ஆச்வாஸப்படுத்த, "அப்பனே! ஸம்ஸாரமென்றால் இலேசா? என்ன நேரிடும் என்பதை நம்மால் அறிய முடியாதே" என்றான் ஜீவானந்தன்.

இதன் தாத்பரியத்தை முற்றும் உணர்வதற்கு அந்த யாத்திரிகனுக்கு ஆற்றலோ அறிவோ சற்றும் இல்லை. ஜீவானந்தனும் அதை எதிர்பாராமல் தான் சொல்வதை மட்டும் நிறுத்தாதிருந்தான். அழுகை நிரம்பி ஒலிக்கும் தன்னுடைய குரலைத் தானே கேட்பதில் அவன் ஓர் ஆனந்தம் கொண்டான். "துக்கத்திற்கு மட்டும் ஜாதி பேதமோ, உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற வேற்றுமையோ இல்லை. துயருக்கு ஆளானவர்களுக்கென்று தனியாக ஒரு பாதை இல்லை. அப்படியிருந்தால் அவர்கள் சுலபமாக அதைக் கடந்து விடுவார்களே; அது வருவதற்குள் மனிதர் உஷாராகி விடுவார்களே. ஆனால் அத்தகைய ஸௌகர்யம் நாம் படைத்திருக்கவில்லை. நான் சொல்வதெல்லாம் உனக்குப் புரியாது. ஸம்ஸாரத்தில் நீ ஒருவன்மட்டும் இப்படித் தவிக்கவில்லையப்பா! துணையாக ஒருவன் இதோ உன்னண்டையே இருக்கிறான். அவன் யாரென்று உனக்குத் தெரியாது" என்றான்.

யாத்ரிகன் மௌனமாக இந்தச் சொற்பொழிவைக் கேட்டுக் கொண்டிருந்தான். ஜீவானந்தனுடைய வார்த்தையின் அர்த்தத்தையோ, அவன் இன்னானென்பதையோ அறிந்துகொள்ளக் கூடிய ஞானமில்லை அப்பரதேசிக்கு.

"பகவந்நாமத்தை நிச்சிந்தையாக ஜபித்துக்கொண்டிருந்ததை நான் பாதியில் வந்து கெடுத்துவிட்டேன். இனிமேல் நீ அதைத் தொடங்கலாம். நான் வருகிறேன். நாளைக்கு இதே சமயம் மீண்டும் உன்னைச் சந்தித்தாலும் சந்திப்பேன்" என்றான் ஜீவானந்தன்.

"பாபு, நான் இனிமேல் தங்களை எப்படிப் பார்ப்பது? வந்து நாலைந்து தினங்களுக்கு மேலாயினவே. நாளைத்தினம் பொழுது விடியும்போது நான் புறப்படுவதாக இருக்கிறேனே" என்றான் அந்த யாத்ரிகன்.

"போய்த்தான் ஆகவேண்டுமோ? கால் இன்னும் ஆறவில்லை யென்று சொன்னாயே; உன்னால் நடக்கமுடியுமோ?" என்று கேட்டான் ஜீவானந்தன்.

"இந்தக் கோயிலின் அதிகாரம் இந்த ஊர் ராஜாவின் கையில் வந்துவிட்டதே. அவர் தேசாந்தரிகளுக்கு மூன்றுநாளே பிரஸாதம் வழங்கவேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறாராமே. இங்கு அதிக நாள் தங்கினால் எனக்குச் சோறு ஏது?" என்றான் அந்த ஏழை யாத்ரிகன்.

ஜீவானந்தன் நகைத்து, "பைரவி இன்னும் போகவில்லையே. ஜமீன்தாரின் உத்தரவு அமுலுக்கு வராது. சண்டிகாதேவியின் நல்லகாலம்!" என்றதும் அவன் மனத்தின்கண் ஒன்று தோன்றவே பரபரப்புக் கொண்டவனாய், "இன்று அதிதிஸேவை எந்த விதமாக நடந்தது? என்ன ஆகாரம் கிடைத்தது இன்று, அப்பனே?" என்றான்.

"மூன்று நாட்களுக்கு முந்தி வராதவர்களுக்கு அன்னையின் பிரஸாதம் வழங்கப்பட்டது" என்றுமட்டும் அந்தத் தேசாந்தரி சொன்னான்.

"உனக்கு...? ஆனால் நீ வந்து மூன்று தினங்களுக்கு மேலாயினவா?" என்று ஜீவானந்தன் கேட்டான்.

அந்த யாத்ரிகன் மகாஸாதுவான பிரகிருதி. சட்டென யாரையும் நிந்திப்பது அவனுடைய இயற்கை அல்ல. "அவர்கள் என்ன செய்வார்கள் பாவம்! ராஜாவின் ஆக்ஞை அந்தவிதமாக இருக்கிறதே" என்றான்.

"அப்படியா?" என்றதும் ஜீவானந்தன் ஒரு பெருமூச்சு விட்டுச் சும்மாயிருந்தான். முன்பெல்லாம் இந்த மாதிரி தேசாந்தரிகள் விஷயத்தில் இந்தத் திட்டம் இருந்திருக்கலாம். ஆனால் வழக்கத்தில் அதைக் கொண்டு வரவில்லை ஷோடசி பைரவி. அவள் தான் எந்தக் கட்டுத் திட்டத்திற்கும் அடங்காதவளாயிற்றே! இப்போது அவள் அகன்று விடவே தாராதாஸும் ஏககடியும் சேர்ந்துகொண்டு ஓர் அக்ஷரம் விடாமல் ஜமீன்தாரின் பேரை வைத்துக்கொண்டு இந்தக் கட்டளையை நடத்தி வருகிறார்களென்று தெரிந்தது. இதைக் கண்டிக்க யாதொரு காரணமும் இராதபோதிலும் ஜீவானந்தனின் மனம் மட்டும் சமாதானம் கொள்ளவில்லை; அறுத்துக் கொண்டேயிருந்தது. 'இனி இந்தவிதம் நடக்கவிடக் கூடாது. பசியுடன் இருப்பவர்களுக்குத்தானே இந்த ஏற்பாடு

முக்கியமாக இருக்கிறது. இதோ இங்கு வாஸ்தவமாக ஓர் அதிதி யின் வயிறு வாடுகிறது. அது எந்தக் கட்டுத்திட்டங்களுக்கு அடங்கும்?' என்றெல்லாம் அவனது உள்ளம் பன்முறை கேட்டது. ஜீவானந்தன் யாத்ரிகனைப் பார்த்து, “அப்பா, நீ சொல்லிக்கொள் ளாமற் போகக்கூடாது. நான் மீண்டும் வருவேன். இப்போது போய் வருகிறேன்” என்றான்.

“கோயில் அதிகாரி ஏதாவது சொன்னால்......?” என்றான் அவன்.

“சொன்னால்தான் என்ன? இவ்வளவு கஷ்டங்களைப் பார்த்த உன்னால் இதை ஸஹித்துக்கொள்ள முடியாதா?” என்று கூறி மெல்ல அவன் மண்டபத்தை விட்டு அகன்றான்; ஆனால் மண்டபத் தின் மற்றோர் இடத்தில் இருவர் தாழ்ந்த குரலில் பேசும் சப்தத்தைக் கேட்டுத் திகைத்து நின்றான். யாரோ கோயிலுக்குத் தான் வருகிறார்களென்று முதலில் நினைத்தான். ஆனால் அவர்கள் பேசுவது வரவர அவன் செவிக்கு நன்றாகக் கேட்டது.

இருவருள் ஒருவன், “நம் பைரவியைக் கெடுத்த அந்தப் பாவியைக் கொல்லாமல் நான் விடப்போவதில்லை” என்று சொல்லிக்கொண்டிருந்தான்.

மற்றவன், “இதோ அம்பாள் ஸந்நிதிக்கு எதிரே நின்று ஸத்யம் பண்ணுகிறேன்; தூக்குத் தண்டனை வந்தாலும் சரி இதனால்” என்றான்.

“ஹ......ஜெயில் என்ற பயம் நமக்கு என்றோ விட்டுப் போச்சே, அண்ணே. தூக்கு மேடை ஒன்று பாக்கியிருக்கிறது. அதையும் பார்த்துவிடுவோம். நம்ம அம்மா போய்விடுகிறாங்கோ. போகட்டும்...” என்று ஒருவன் உறுமுவது கேட்டது.

இருட்டானதால் ஆஸாமிகள் யாரென்று புலப்படவில்லை. குரலை மட்டும் எங்கோ கேட்டிருப்பதாக ஜீவானந்தனுக்குத் தோன்றியது. சற்று யோசித்தால் யாரென்று தெரியவரும். ஆனால் அவனுடைய மனம் அதை ஆராய விரும்பவில்லை. பல ருடைய நாசத்திற்குக் காரணம் தானென்பது அவனுக்குத் தெரி யும். தன்னைத்தான் அவர்கள் குறி வைத்திருக்கிறார்கள் என்பதை அவன் சுலபமாகவே ஊகித்துக் கொண்டான்; தானே சிரித்துக் கொண்டான்.

தன்னை நோக்கி வரும் பேராபத்தையும் பொருட்படுத்தாமல் ஜீவானந்தன் வெளியேறும்போது நடுநிசி வேளைக்குமேல் இருக்கும். நிர்மலமான வானவெளி நக்ஷத்திர மணிகள் பூண்டு விளங்கிற்று. கண்ணுக்குத் தெரியாமல் அவை விடும் ஒளியினால் இருட்டில் பாதை தெளிவாகத் தெரிந்தது. பாட்டையின் இருமருங்கிலும் குத்துக் கற்களும் மண்மேடுகளும் வழி நடந்து களைப்பாறும் பிரயாணிகளைப் போல் மௌனத்துடன் எத்தனை காலமாக நிற்கின்றனவோ; யாருக்குத் தெரியும்? அவற்றுள் ஒன்றின் ஓரமாகவந்து பாட்டைப் புழுதியின் மேல் உட்கார்ந்தான் ஜீவானந்தன். எதிரே சற்றுத்

தொலைவில் ஷோடசியின் குடில் தென்பட்டது. மரங்கள் குறுக்கே மறைப்பதால் ஸ்பஷ்டமாகத் தெரியாத போதிலும் பலபேர் கும்பலாக அங்கிருந்து செல்வதை ஜீவானந்தன் கண்டான். அவர்கள பேசிக் கொண்டதிலிருந்து ஷோடசி புறப்பட்டுச் செல்வதற்கு மாட்டுவண்டி வந்திருப்பதும், மறுநாள் இருட்டு அகலு முன்பே அவள் பிரயாணப்படுவாளென்பதும் தெரிந்தன.

சற்றுமுன் அங்கு வந்தவர்கள் அவளைப் பூஜிக்கும் பக்தர்களே. ஷோடசி போய்விடுவதனால் அவள் பாததூளியைச் சிரமேற் கொண்டு திரும்பினர். அவர்கள் தன்னைப் பணிவதை ஷோடசியால் தடுக்க முடியவில்லை. தடுத்தாலும் அவர்கள் கேட்பவர்கள் அல்ல. இதுவரை அவர்கள் பட்ட துன்பங்களை அவள் தன் கண்ணாலேயே பார்த்திருக்கிறாள். இந்த ஏழை மக்களை விட்டுப் பிரிந்து விடுகிறோமே யென்று அவளுடைய மெல்லிய இதயம் சொல்லொணு வேதனைப் பட்டது.

அச்சமயம் ஜீவானந்தனுக்கு, இந்த எளியோரைத் தான் பலவிதமாக ஹிம்ஸித்தது நினைவுக்கு வந்தது. தான் செய்த அட்டூழியங்கள் மலைபோல் குவிந்து தன்னெதிரே வந்து நிற்பதுபோன்ற பிரமைகொண்டான். இந்தப் பெரும் பாபம் என்னும் குன்றை மறைத்துவைக்க இவ்வுலகில் ஓர் இடமும் இல்லை யென உணர்ந்தான். தன் மனைவியென்ற முறையில் ஷோடசியை அழைத்துக்கொள்ள அவன் தயங்கினன்; ஆனால் அவளை வேறு விதமாகப் பாவிக்கத் தன் ஈன மனம் இடங்கொடுத்ததன் காரணம் அவனுக்கே புரியவில்லை. இன்றோ அவன் முற்றும் மாறியவனாய் உள்ளூற ஷோடசிக்காக ஏங்கி நின்றான். அவளைத் தன் மனைவி யாகக் கொள்ள அவனுக்கு எல்லா உரிமையும் இருந்தது. இதுவரை அவளை அவமானத்திற்கு உள்ளாக்கியதும், ஒதுக்கி வைத்ததும் தனக்குண்டான பெரிய நஷ்டத்திற்குக் காரணங்களெனத் தெரிந்துகொண்டு, எதைச் செய்தால் அந்த நஷ்டத்திற்கு ஈடாகு மென்று அவன் மனம் அலைபாய்ந்தது.

திடீரெனத் தன்னெதிரே ஓர் ஆள் துரிதமாகச் செல்வதை அவன் காண நேரிட்டது. இருட்டிலும் அந்த ஆளை அடையாளம் தெரிந்துகொண்டு, "அலகா" என்று கூப்பிட்டான்.

ஷோடசி திடுக்கிட்டு நின்றாள். தன்னை இந்த மாதிரி பெய ரிட்டு அழைத்தவன் ஜீவானந்தன் என்று தெரிந்துகொண்டாள். ஓரமாக வந்து கடினமான தொனியில், "நீங்கள் எதற்காக இங்கே வந்தீர்கள்?" என்று வினவினாள்.

ஜீவானந்தன் புழுதியிலிருந்து எழுந்து, "நெடுநேர மாக இந்த இடத்திலேயே விழுந்து கிடக்கிறேன், அலகா! பிரயாணப்படுவதற்கு முன்பு அம்பாளை ஸேவித்துவிட்டு வரப் போகிறாயா? வா, நானும் உன்கூடவே வருகிறேன்" என்றான்.

அச்சமயம் அவன் குரலில் அதிசயமானதோர் மாறுதல் தெரியவே ஷோடசி அதை உணர்ந்து வியப்பினால் சற்று மௌன

மாக இருந்தாள். சிறிது நாழிகைக்கெல்லாம் அவள் "என்னோடு வந்தால் ஆபத்து நேரிடுமென்று உங்களுக்கே தெரியும்" என்றாள்.

"தெரியும். ஆனால் அது என்னால் ஏற்படாது; நிச்சயமாகச் சொல்லுவேன். ஏனென்றால் என் கையில் யாதோர் ஆயுதமும் இல்லை. ஒரு சிறு தடிகூட நான் கொண்டு வரவில்லை" என்றான் ஜீவானந்தன்.

"பிரபுல்ல பாபு உங்களைத் தேடிக்கொண்டு வந்தார். அவரிடமிருந்து, நீங்கள் தனியாகக் கையில் ஓர் ஆயுதமும் இன்றி வெளியே எங்கோ சுற்றப் போயிருப்பதாகக் கேள்விப்பட்டேன். இன்னும் அவர்......" என்று கூறி நிறுத்தினாள் ஷோடசி.

"திடீரென மதுபானத்தின்மேல் வெறுப்பு ஏற்பட்டு என்னவோ நினைத்துக்கொண்டு வெளியே போயிருப்பதாகச் சொல்லியிருப்பான். அவ்வளவுதானே?" என்றான் ஜீவானந்தன்.

"ஆமாம். இனிமேலாவது அத்தகைய அசட்டுக் காரியத்தைச் செய்யாதீர்கள்" என்றாள் ஷோடசி ஏளனமாக.

"நான் இனி நித்தியம் இதையே செய்வேன்; என் உயிர் இருக்கும்வரை செய்வேன். பிரபுல்லன் இவ்வளவு சொன்னானே, இது மட்டும் சொல்லவில்லையே; நான் எவ்வளவோ அநீதிகளைச் செய்திருக்கிறேன். இருந்தும் எனக்குச் சத்துரு ஒருவன் இருப்பதாக நான் ஒருகாலும் ஒப்புக்கொள்ளவே மாட்டேன், அலகா!" என்றான் ஜீவானந்தன்.

ஷோடசி நிலைத்து நின்றாள். அவள் ஜீவானந்தனை எதிர்த்துப் பேசவும் இல்லை; அவனுடைய வார்த்தை எவ்வளவு தூரம் உண்மையாகும் என்பதைப்பற்றியும் அவள் சிந்திக்க விரும்பவில்லை. ஜீவானந்தனுடைய முகஜாடை அந்த இருட்டில் அவளுக்கு நன்கு புலப்படவில்லை. ஆனால் தன்னுடைய குரலோசை மட்டும் நள்ளிரவில் அந்த வெட்ட வெளியில் அவள் காதுக்கு விநோதமாக ஒலித்துக்கொண்டே இருந்தது. சில நிமிஷங்கள் கழிந்ததும் அவள், "என்னுடன் கோயிலுக்கு வந்து நீங்கள் செய்யப்போகிற காரியம் என்ன?" என்று கேட்டாள்.

"ஒன்றுமில்லை. நீ அங்கு இருக்கும்வரை நானும் இருப்பேன். நீ புறப்படும்போது உன்னை வண்டியில் ஏற்றி அனுப்பிய பிறகே நான் நகருவேன்" என்றான் ஜீவானந்தன்.

இதற்கு உடனே பதில் தர ஷோடசியினால் இயலவில்லை. ஜீவானந்தன் மீண்டும், "போகும்போது என்மேல் அவநம்பிக்கை கொள்ளாதே, அலகா! என்னுடைய உயிரின் மதிப்பை நீ அறிவாய். ஒருவேளை நாம் மறுபடியும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொள்ளாமலே இருந்தாலும் இருப்போம். என் விஷயத்தில் எவ்வளவோ இரக்கம் காட்டியிருக்கிறாய். என் கடைசி மூச்சுப் போகும்வரையில் நான் அதை மறக்கமாட்டேன்" என்றான்.

ஷோடசி, "சரி, என்னோடு வாருங்கள்" என்றதும் முன்னே சென்றாள்.

இரண்டொரு நிமிஷ காலம் இருவரும் வார்த்தையாடாமலே நடந்த பிறகு ஜீவானந்தன் பேசத் தொடங்கினான்:

"என்மேல் இரக்கம் கொள்ளக்கூடாதென்று எல்லோரும் சொல்லுவார்கள். அலகா, கருணைக்கு யோக்யன் அயோக்யன் என்ற வித்யாஸங்கூட உண்டா? இரக்கங் காட்டுவது அவரவர் இஷ்டம். தயைக்கு நான் யோக்யதை யற்றவன் என்று என் பரம விரோதிகூடச் சொல்லமாட்டானே—நீகூட?"

ஷோடசி மெதுவான குரலில், "என்னைவிடப் பெரிய சத்துரு உங்களுக்கு இந்தப் பிரபஞ்சத்தில் வேறு எவருமே இல்லையா?" என்றாள்.

"இல்லை" என்றான் ஜீவானந்தன்.

ஆலயத்துள் பிரவேசித்த பிறகு ஜீவானந்தன், "இந்த வேடிக்கையைப் பார், அலகா! தங்களுக்கே சோற்றுக்கு வழியிராதவர்கள் பிறருக்கு இடப்படும் அன்னத்தை வந்து தடுத்துவிடுகிறார்களே" என்றான். ஷோடசி வினவும் முகபாவனையுடன் தன்னை நோக்கவே, அவன், "அலகா, நான் சற்றுமுன்வரை கோயிலில்தான் இருந்தேன். பைரவி இனிமேல் கோயிலுக்கு அதிகாரியல்ல; ஜமீன்தார்தான். அவன் பேரால், தேசாந்தரிப் பிரஸாதம் மூன்று நாட்களே வழங்கப்படுமென்று இதற்குள் திட்டம் வந்து விட்டதே தெரியுமா? கால் சொஸ்தமிராத அந்த ஏழை யாத்ரிகன் இதை எனக்குச் சொன்னான். நீதான் அவனை இங்கே சில தினங்கள் தங்கிப் போகும்படிச் சொன்னாயாம். பாவம்! அவன் வாயில் இன்று மண் விழுந்துவிட்டது. அதோ மண்டபத்தில் அவன் ஜபம் செய்துகொண்டு பட்டினியாகக் கிடக்கிறான். கால் காயம் ஆறினாலும் சரி, ஆறாது போனாலும் சரி, நாளைக்கே போய் விடுவதாகச் சொன்னான்" என்றான்.

"இந்த உத்தரவைப் பிறப்பித்திருப்பவர் என்னுடைய தந்தைதானே?" என்றாள் ஷோடசி.

"உன் தந்தைமட்டும் அல்ல. ஏழை மக்களின் மீது தாக்ஷிண்யம் காட்டும் தர்மசீலர்கள் ஊரில் அநேகர் இருக்கின்றனர். ஆனால் ஜமீன்தாரின் பெயர்தான் த்ரிலோகமும் பரவிவருகிறது. அந்த ஆள் அருகிலே உட்கார்ந்து இருக்கும்போது, நீ போய்விட்டாயானால் இந்தக் கன்னப்பிசாசுகள் கோயிலைக் குட்டிச் சுவராக ஆக்கிவிடுமே, எப்படியடா சமாளிப்பது என்று வாஸ்தவமாகச் சிந்திக்கலானேன், அலகா!" என்றான் ஜீவானந்தன்.

ஷோடசி மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்தாள். ஜீவானந்தனும் வெகு நேரம் பேசாமலே இருந்தான். மனத்துள் மட்டும் பல யோசனைகள் சென்றன. திடீரென நடுவில் ஒரு சமயம் அவன், "உன்னால் ஆகவேண்டியதொன்று இருக்கிறது, அலகா!

இரண்டுநாள் உன் பிரயாணத்தை ஒத்தி வைக்கமாட்டாயா?'' என்றான்.

ஷோடசி அமைதியாகவே, ''முடியாது'' என்று மட்டும் உரைத்தாள். பின்பு தாழிடப்பட்டிருக்கும் ஸந்நிதிவாயில் அருகில் சென்று நெடு நேரம் தியானத்தில் ஆழ்ந்துவிட்டு அவள் திரும்பி வருகையில், ஜீவானந்தன், ''ஒரு நாள் தங்கமாட்டாயா?'' என்று மன்றாடினான்.

''மாட்டேன்'' என்றாள் ஷோடசி.

''ஆனால் நான் செய்த தவறுகள் எல்லாவற்றையும் இந்த இடத்தில் மன்னித்துவிட்ட பிறகே நீ செல்ல வேண்டும், அலகா!''

''அதனால் உங்களுக்கு என்ன அனுகூலம் ஏற்படப் போகிறது?''

ஜீவானந்தன் கணநேரம் சிந்தித்துவிட்டுப் பேசத் தொடங்கினான்; ''இதற்கு விடைதர இன்று எனக்குச் சக்தி இல்லை. 'என்ன செய்தால் நீ இரண்டு நாளாவது தங்குவாய்?' என்ற எண்ணமே எனக்கு இப்பொழுது. என்னைப் போல் உதவியற்றவன் இந்த உலகில் உண்டோ? உலகத்தவர் என்ன சொல்லுவார்கள்? நான் உன்னை ஹிம்ஸித்ததாகவும், நீ எல்லாவற்றையும் சகித்துக்கொண்டு ஊரை விட்டே போய்விட்டதாகவும் சொல்லுவார்கள். போகு முன் சண்டீமாதாவினிடம் இதை விடப் பொய் ஒன்றுமே இல்லை யென்று அறிவி'' என்றான்.

இதற்கு மறுமொழி தராமல் நிச்சப்தமாக ஷோடசி வெளியே வரும்போது ஜீவானந்தன் தன் இரு கைகளையும் விரித்து அவள் வழியை மறைத்தவண்ணம், ''உன்னுடைய தெய்வத்தின் ஸந்நிதி எதிரே நின்றுகொண்டு சொல்லேன்; என்ன செய்தால் நீ இரண்டு தினங்களாவது இருந்துவிட்டுச் செல்வாய்? அதற்குமேல் நீ......'' என்று கூறி நிறுத்தினான்.

ஷோடசி பின்வாங்கி, ''சௌதுரி மஹாசயரே! உங்களுடைய ஏவலர்கள் யாருமே இல்லையா என்னை வழிக்குக் கொண்டுவர? இப்படியெல்லாம் கெஞ்சுவானேன்? வேண்டுவானேன்? நான் தான் யாரிடமும் முறையிட்டுக்கொள்வதில்லை யென்பது உங்களுக்குத் தெரியுமே'' என்றாள்.

ஜீவானந்தன் அவளுக்கு வழிவிட்டு ஒதுங்கி நின்றான். அவன் சிறிதும் சினங் கொள்ளவில்லை. நோவும்படி அவளைக் குறித்து எதுவும் சொல்லவில்லை. வினயத்துடன் மெல்லவே, ''ஆனால் நீ போ. வீண் ஆசைக்கு ஆளாகி உன்னை அனுவசியமாகத் தொந்தரவு செய்யமாட்டேன். நீ சொல்லும் ஆட்கள் எல்லாரும் இருக்கிறார்கள், அலகா! ஆனால் தானாகவே சிக்காதவளை, பலத்தைக்கொண்டு பிடித்துவைக்க எனக்குச் சற்றும் விருப்பம் இல்லை'' என்றான்.

ஜீவானந்தன் வழிவிட்டும் ஷோடசியின் கால் மேலே செல்ல எழவில்லை; ''நான் எங்கே போகிறேன் என்பதை அறிய உங்களுக்கு ஆவல் இல்லை போலிருக்கிறது?'' என்றான்.

"ஆவலா? அதற்கு ஓர் எல்லை யுண்டோ? அலகா, இதை மட்டும் கோருகிறேன்: நீ போகும் இடத்தில் எவரும் உனக்குக் கஷ்டம் கொடாமல் இருக்கவேண்டும். உன்மேல் பகைகொண்டு இருப்பவர் உன்னைப் பூர்ணமாக மறந்துவிட்டாலும் விடுவர். ஆனால்......" என்று சொல்லும்போது ஜீவானந்தனுடைய கண்டம் அடைக்க ஆரம்பித்தது. ஆனால் பலஹீனத்திற்கு அவன் இடங் கொடாமல் சமாளித்துக் கொண்டு, "ஸ்வயமான விருப்பத்தின் பேரில் போகிறவர்களைத் தடுத்து என்ன பிரயோஜனம்? என்றைக்கு என் கையில் கோயில் சாவியையும் பொறுப்பையும் தந்தாயோ அன்றே நாங்களெல்லாம் தோற்றுப் போனோம். உனக்குள்ள மனோதிடம் அளவற்றது. இருந்தும் நீ மனிதனின் மனத்தைச் சிறிதும் அறிந்துகொள்ளவில்லை. உயிருடன் இருக்கும்வரை இந்த வருத்தம் என்னைவிட்டுச் சற்றும் நீங்காது, அலகா!" என்றான்.

ஷோடசி நின்றிருந்த இடத்திலேயே சட்டெனக் கீழே குனிந்து ஜீவானந்தனுடைய கால்களைத் தொட்டுக் கண்களில் ஒத்திக்கொண்டு, "தங்களிடத்தில் எனக்கொரு விண்ணப்பம்" என்றாள்.

"என்ன சொல்லு, அலகா?" என்றான் ஜீவானந்தன்.

இமைப்பொழுது ஷோடசி யோசித்துவிட்டு, "அது உங்களுக்குத் தெரியும்" என்றாள்.

ஜீவானந்தன் அது யாதாக இருக்கலாமென்று சிந்திக்கலானான்.

"தெரிந்திருக்கலாம்; இன்னும் யோசித்துப் பார்த்தால் கவனத்திற்கு வரும். அன்றொரு நாள், 'ஜாக்ரதையாக இரு' என்று நீ சொல்லியிருக்கிறாய். சற்று நாழிகைக்கு முன்புதான், கோயிலினுள் மறைவில் நின்றுகொண்டு இருவர் ஸந்நிதி வாயிலின் படிகளைத் தொட்டுத் தங்களுடைய தாய்க்கு ஸர்வநாசத்தை இழைத்த பாதகனை வெட்டி வீழ்த்தப்போவதாக உறுமினார்கள். இதை ஒரு தூண் ஓரமாக நின்றுகொண்டு என் காதாலேயே கேட்டேன். அவர்கள் யாருடைய தலையை வாங்கப் போவதாகச் சொன்னார்களோ அந்த ஆள் நான்தான் என்பது தெளிவாயிற்று. இரண்டு நாளைக்கு முன்பு இருந்த மனநிலையில் இதைக் கேட்டிருந்தால் நான் நடுங்கிச் செத்தேயிருப்பேன். ஆனால் இன்று யாதொரு பயமும் இல்லை; என்ன அலகா?" என்றான்.

"ஒன்றுமில்லை" என்றதும் ஷோடசி நிமிர்ந்து நிற்கப் பிரயத்தனப்பட்டாள். ஜீவானந்தனுடைய முகம் சட்டென வெளுத்ததை இருட்டானதால் அவளால் தெரிந்துகொள்ள முடியவில்லை.

"வாருங்கள்; என்னுடைய வீட்டில் சற்றுத் தங்கிப் போகும்படி வேண்டுகிறேன். என்னை வண்டி ஏற்றி அனுப்பும்வரை நான் உங்களை விடமாட்டேன். வாருங்கள் என்னுடன்" என்று ஜீவானந்தனை அழைத்தாள் ஷோடசி.

# 25

மாட்டுவண்டியின் கீழே கம்பளியைப் போர்த்துக்கொண்டு வண்டிக்காரன் படுத்திருந்தான். சமீபத்தில் ஷோடசியின் காலடிச் சப்தம் கேட்கவே அவன், "சைவாலதிகிக்கு இங்கிருந்து இருபது கல்லுக்குமேல் இருக்கிறது. விடியுமுன்பே கிளம்பிவிட்டால்தான் வெயில் ஏறுவதற்குள் போய்ச் சேரமுடியும், அம்மா! துரிதப்படுத்துங்கள்" என்றான்.

"இதோ வந்துவிட்டேனப்பா" என்றதும் இரண்டடி எடுத்து வைத்து ஜீவானந்தனை நோக்கி ஷோடசி, "நான் போகிற இடம் எதுவென்று தெரிந்து கொண்டீர்களா இப்போது?" என்றாள்.

"தெரிந்துபோயிற்று" என்றான் ஜீவானந்தன்.

"வெகுதூரமில்லை. சுலபமாக அந்த இடத்தை உங்களால் கண்டுபிடித்து விட முடியும்" என்றாள் ஷோடசி.

"ஆனால் எனக்கு அந்த இடத்தின்மீது அப்படியாக மோகம் ஒன்றும் இல்லையே" என்றான் அவன்.

தன் குடிலின் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்ததும் ஷோடசி, "கட்டாந்தரையாயிருக்கிறது. எனக்குள்ள ஓரே கம்பளத்தை மூட்டையில் கட்டிவைத்துவிட்டேன். போடுவதற்கு ஒன்றுமில்லையே. என்ன செய்வதென்று யோசிக்கிறேன். நிர்மல் பாபுவாயிருந்தால் என்னுடைய புடைவைத் தலைப்பைப் பிரித்து உட்காரச் சொன்னால்கூட உடனே உட்கார்ந்து விடுவார். ஆனால் உங்களுக்கு அந்தமாதிரி செய்தால் நன்றாயிராதே" என்று மொழிந்ததும் பக்கென்று சிரித்துவிட்டு, அறையின் ஒரு மூலையிலிருந்த தர்ப்பாஸனத்தை எடுத்துவந்து தரைமேல் பரப்பி, "மன்னிக்கவேண்டும், இதற்காக. உட்காருங்கள்" என்றாள் பரிவுடன்.

ஜீவானந்தன் அதன்மீது அமர்ந்து எதுவும் பேசாமல் இருந்தான்.

இரண்டு பொருள் படும்படி தான் சொன்ன மொழிக்குப் பதில் வராததைக் கண்டு ஷோடசி வியப்படைந்தாள். அச்சமயம் அகல்விளக்கின் ஒளி குறைந்துகொண்டே வந்தது. பிரகாசமாக எரியும்படி தூண்டியதும் அதைக் கையில் எடுத்துக்கொண்டு ஜீவானந்தனுடைய முகத்தண்டை சிறிதுநேரம் பிடித்து, யாதொரு சஞ்சலமுமின்றி, "என்ன சிந்திக்கிறீர்கள்?" என்று வினவினாள்.

"என்னுடைய சிந்தனைக்கு ஒரு முடிவும் உண்டோ?"

"முடிவு இராவிட்டால் ஆரம்பமாவது இருக்கவேண்டுமே. அதையாவது சொல்லுங்கள்."

ஜீவானந்தன் தலையை அசைத்தவாறு, "அதுவும் இல்லை. முடிவில்லாததற்கு ஆரம்பம்மட்டும் ஏது, அலகா?" என்றான்.

"இவையெல்லாம் வேதாந்தம் படித்தவர்களின் பேச்சு. வெறும் பேச்சே ஒழிய, ஸம்ஸாரத்திற்கு இவை ஒவ்வாதன" என்று சொல்ல அவள் உதடுகள் அசைந்தன. ஆனால் ஜீவானந்தனுடைய முகத்தைப் பார்த்தவுடன் அது தொண்டையிலேயே நின்றுவிட்டது. மனத்துள் ஜீவானந்தன் வியப்புற்று, 'அவள் என்னைப் பரிஹஸிக்க வேண்டி இன்று இதைக் கூறவில்லை. நான் ஏன் இதைத் தவறாக எடுத்துக்கொள்ளக் கூடாது. ஸஹஜமாய்ச் சொல்லியிருக்கலாம். அவள் எதற்கும் அடங்காதவளென்று தெரிந்த பிறகு இதைப்பற்றித் தர்க்கிப்பதில் பிரயோஜனம் இல்லை' என்ற முடிவிற்கு வந்தான்.

அதே இடத்தில் சிலகணம் உட்கார்ந்திருந்தபிறகே ஷோடசி எழுந்து விளக்கை ஒருபுறமாக வைத்தாள். கையில்பட்ட எண்ணெயைத் துணிக்கந்தை ஒன்றை எடுத்துத் துடைத்துக் கொண்டே அவள், "ஒரு வேண்டுகோள்" என்றாள்.

"என்ன சொல்லு?"

"இதே அறையில் அன்று 'தின்பதற்கு ஏதாவது தாயேன்' என்று நீங்களாகவே என்னைக் கேட்டு வாங்கித் தின்றீர்கள் அல்லவா? இப்போது என்னுடைய முறை. நீங்கள் ஏதாவது ஆஹாரம் எடுத்துக் கொண்டால்தான் விடுவேன்."

"தாராளமாகக் கொடேன். எனக்குப் பசிதான்."

"புருஷர்கள் முகத்தைப் பார்க்கும்போதே பசியோடு அவர்கள் இருப்பதும் இராததும் தெரிந்துவிடுமே" என்று மொழிந்துவிட்டு, ஷோடசி பானையொன்றில் இருந்த ஜலத்தினால் கைகளை நன்றாக அலம்பிக்கொண்டு உணவுகளைப் பரிமாற இடம் ஒழித்து வைத்தாள். இன்று கோயில் பிரஸாதம் இல்லை. அவளைக் காணவந்த குடியானவர்கள் தங்களாலான உணவுப் பொருள்களை அவளுக்குச் சமர்ப்பித்திருந்தனர். ஓர் இலையில் அவற்றை வைத்து எடுத்துக்கொண்டுவர ஷோடசி சமையல் விடுதிக்குப் போயிருக்கும் சமயம், தனியாக இருக்கும் ஜீவானந்தன் நாற்புறமும் அறையைக் கவனித்தான். ஓரிடத்தில் பேனாவும் மசிக்கூடும் அவனுடைய கண்களுக்குத் தென்பட்டன. உடனே அவன் அவற்றைக்கொண்டு, தன் ஜேபியிலிருந்த ஒரு கடிதத்தின் எழுதாத பாகத்தைக் கிழித்தெடுத்து, விளக்கின் சமீபமாக வந்து அதில் என்னவோ வரையலானான். நாலைந்து வரிகளுக்குமேல் இராது அவன் எழுதிய விஷயம். எழுதி முடித்ததும் கடிதத்தை மடித்து அதன்மேல் 'ஷோடசிக்கு' என்று வரைந்து தன்னுடைய ஜேபியினுள் அதைப் போட்டுக்கொண்டான். இது முடிந்த சற்று நேரத்திற்கெல்லாம் ஷோடசியும் சமையலறையிலிருந்து தின்பண்டங்களை இலையில் எடுத்துக்கொண்டு வந்தாள். கீழே இலையை அவள் பிரித்ததும் தொன்னைகளில் இருக்கும் பலதினுசான சிற்றுண்டிகள் வெளிக்குத் தெரிந்தன. ஒரு தொன்னையில் நல்ல பசுநெய்யில் வறுத்த அவல், வேறு ஒன்றில் கட்டித் தயிர், மற்றோர் இலைப்பாத்திரத்தில் பிட்டு; இவற்றைத் தவிரக் கனிவகைகளும்

இருந்தன. ஒரு சிறிய மண் கூஜாவில் நல்ல ஜலமும் ஜீவானந்தன் பக்கத்தில் வைத்துவிட்டு, முகத்தில் அபூர்வ முறுவல் விளையாட, "அன்று செல்வம் படைத்தவர்கள், கோயிலில் தெய்வத்திற்குப் பிரஸாதமாக ஸமர்ப்பித்ததை உங்களுக்குத் தந்தேன். இன்று பரம ஏழைகளின் வீட்டில் செய்த பக்ஷணங்கள் இவை. அவலும், பிட்டும், பசுந்தயிருமே; உயர்ந்த விதமானவையாக இராதபோதி லும், அன்பின் காணிக்கை அல்லவா? ஆனால் உங்களுக்கு ருசிக்குமா என்பதுதான் என்னுடைய ஸந்தேகம்" என்றாள்.

ஜீவானந்தன் கையைக் கழுவிக்கொண்டு, அந்த உணவை எடுத்து உட்கொள்ள ஆரம்பித்தான். "நீ கொடுக்கும் பக்ஷணங் களை என் நாக்கு ருசிபார்க்க ஆசைப் படுகிறது. ஆனால் தின்ற பிறகு வயிறு உபத்திரவப் படுத்துகிறதே. அதற்குத்தான் தயங்கு கிறேன், அலகா!" என்றான்.

அவன் இதைச் சொல்லி முடிப்பதற்குள் ஷோடசி பக்ஷணங் கள் பரிமாறின இலையை அவன் முன்னிலையிலிருந்து அப்புறப்படுத் தினாள். நெற்றியில் அறைந்துகொண்டு, "நான் செய்த பாவம் இது. உங்கள் உடம்பிற்கு ஆகாதென்பதை நான் மறந்துவிட்டேனே! கடைசிவரை உங்களுக்கு எதுவும் கொடுக்க முடியாது போய் விடுமோ?" என்று வியாகுலப் பட்டாள்.

ஜீவானந்தன் தான் சொன்னதை நினைத்துக்கொண்டு வெட்கி, "நிரம்பத் தின்றால்தான் உடம்புக்கு ஆகாது; கொஞ்சம் ருசிபார்த் தால் ஒன்றும் பண்ணாது" என்றான்.

"அந்தச் சந்தேகம் எதற்கு? எப்போது உடம்புக்கு ஆக வில்லையோ, நீங்கள் சாப்பிடவேண்டாம்" என்றாள் ஷோடசி.

"இதனால் உனக்கு வருத்தமா?" என்று கேட்டான் ஜீவானந் தன்.

ஷோடசியின் இருவிழிகளும் அகன்றன. "வருத்தமா? போகும்போது உங்களுக்குப் பிடித்தவிதமாக என்னால் எதுவும் செய்யமுடியவில்லையே என்ற குறைதான். இந்தக் குறை தீராது போனால் நான் அழுதே சாவேன்" என்று கூறியதும் அவள் சற்று மௌனம் சாதித்து மன்றாடும் பாவனையில் மீண்டும், "அன்று பல காரியங்களுக்கிடையே உங்களுக்கு என் கையால் செய்த உணவைத் தந்து உபசரிக்க முடியாமற் போயிற்று. இன்று நான் சமைத்து வைத்திருக்கிறேன், நல்ல அரிசிச்சாதம், பச்சடி, பரமான்னம் எல்லாம்" என்றாள்.

"இவற்றையெல்லாம் உனக்கு வைத்துக்கொண்டு எனக்கு மட்டும் சிற்றுண்டியைக் கொடுக்க வந்தாயா?"

ஷோடசி சிரித்தவண்ணம், "நான் செய்தது தவறுதான். நூறு தடவை வேண்டுமானாலும் என் பிசகை ஒப்புக்கொள்ளுகிறேன். வஞ்சனையாக அம்மாதிரி செய்தேனென்று எண்ணக் கூடாது. இதோ கொண்டுவருகிறேன், நான் சமைத்ததை" என்று சொல்லி அவள் அதை எடுத்துவர உள்ளே சென்றாள்.

ஷோடசியுடன் வார்த்தையாடும்போது ஜீவானந்தனுடைய மனத்தின்கண் எழுந்த நினைவுகளுக்கு அடிமுடி ஒன்றையும் காண வில்லை. தன் சுயவாழ்வைப் பற்றிச் சிந்திக்க அவன் ஒருபொழுதும் முற்பட்டது கிடையாது. எந்தப் பொருளும் அவனுக்கு அலக்ஷ்யம். கையைத் துடைத்துக்கொள்ள உருமால் பக்கத்தில் இராமற்போனால் அவன் விலையுயர்ந்த டாக்கா சாதரை உபயோகப் படுத்திக்கொள்வான். படுக்கையின்மீது விரித்துப்போடத் துப்பட் டிக்குப் பதிலாகக் காஷ்மீர் சால்வையைப் பரப்பத் தயங்கமாட் டான். சுருட்டின் சாம்பரை உதிர்க்கத் தட்டு அகப்படாத சமயங் களில் அவனுடைய பெரிய பொன் கடிகாரம் பயன்படும். அவனுக்கு எதன்மேலும் மதிப்புக் கிடையாது. பின்னால் தன் வாழ்நாள் எவ்விதமாகப் போகுமென்பதை அவன் யோசிக்கமாட்டான். ஸ்திரீகளைக் கண்டதும் அவன் காம இச்சை கொள்வானே தவிர மேன்மையான ஓர் உணர்ச்சி அவர்கள்பால் அவனுக்கு ஏற் படாது. தம் புருஷரை அன்றிப் பிறரைக் கண்ணெடுத்தும் பாராத கற்புடைய பெண்களைக் கற்பழிக்கும் எண்ணம் மட்டும் அவன் கொண்டதில்லை. ஆனால் இன்று கிரஹசார வசத்தினால் யௌவன தசையைக் கடந்த பின்பே தான் வேறு வழியில் செல் வதை அவன் உணர்ந்தான். இது எதனாலென்று அவனுக்கே தெரிய வில்லை. எதற்காக அலகாவைச் சுற்றிச் சுற்றி அவனுடைய மனம் ஸதாகாலமும் அலைந்து வாடுகிறது? கடினமான ஸாதனையின் பயனாக யௌவனத்தின் வசீகரம் குன்றிய ஒருத்திமீது காரண மின்றி மோகம் எதனால் பிறந்ததென்று அவனுக்கே தெரியவில்லை. 'எந்தவிதமாக அவள் குறையுள்ள தன் வாழ்க்கையைப் பரிபூர்ண மாக்குவாள்? அப்படி அவள் செய்வதனால் பிரயோஜனம் யாது?' என்றெல்லாம் ஆழ்ந்து யோசனை செய்தும் அவனுக்கு ஒன்றும் வெளிச்சமாகவில்லை.

சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் அவன் அடிக்கடி தன் நினைவு தப்பியவனைத் தோற்றினான். எதிரே திறந்த வாயிற் கதவுப் பக்க மாக முதுகுப் புறத்தை வைத்துக்கொண்டு ஷோடசி அமர்ந்திருந் தாள். தன்னுடைய இரண்டொரு வினாக்களுக்கு அவனிடமிருந்து பதில் வராததைக் கண்டு, "என்ன இது? தீர்க்க யோசனையில் ஆழ்ந்து விட்டீர்கள்? என்னுடைய வார்த்தைக்குப் பதிலைக் காணவில்லையே" என்றாள் அவள்.

ஜீவானந்தன் நிமிர்ந்து நோக்கி, "எதற்குப் பதில்?" என்றான்.

"சண்டீகட்டை விட்டு நீங்கள் ஊருக்குப் போய்விடுவது நல்லது. இங்கு இனிமேல் உங்களுக்குத்தான் வேலை யொன்று மில்லையே?" என்றாள் ஷோடசி. மனம் எங்கோ அலைவதனாலோ என்னவோ ஜீவானந்தன், "வேலை இல்லையா?" என்றான். இலை யில் இட்ட பரமான்னம் பாதிகூட ஆகவில்லை.

"அப்படிக் காரியம் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. இந்தக் கிராமமோ உங்களுடையது. இதைப் பெரும் பாபத்தி லிருந்து உத்தாரம் செய்வதற்கே கால் எடுத்து வைத்தீர்கள். கேடு

கெட்டவளான என்னை அப்புறப்படுத்தும் வேலையையும் நிறைவேற்றி விட்டீர்கள். வேறு முக்கியமான காரியம் உங்களுக்கு இந்த ஊரில் என்ன இருக்கப்போகிறது?'' என்றாள் ஷோடசி.

''ஆனால் நீ கேடுகெட்டவள் அல்லவே'' என்றதும் ஜீவானந்தன் அவளையே உற்று நோக்கினான். கணநேரம் இருவருடைய கண்களும் சந்தித்தன. இது நிகழ்ந்ததும் ஷோடசி தன் முகத்தைத் திருப்பிக்கொண்டாள். புலப்படாததும் வாய்ச்சொற்களால் அறிய முடியாததுமாகிய ஓர் உண்மை அவனுடைய கண்ணோடு தன் கண் சேரும்போது அவளுக்குப் புலனாயிற்று. இதனால் அவள் வியப்பின் வசமானாள். ஜீவானந்தனுடைய கண்களில் அவளுக்கிருந்த அறிவின் கூர்மை சற்றும் ஒளிரவில்லை. அவன் பேசும் வார்த்தைகளைப்போல் அவனது பார்வையும் வெள்ளையானது; ஸூக்ஷ்மமற்றது. தான் இரண்டு அர்த்தம்படச் சொன்ன மொழியின் கருத்தை அவன் புரிந்து கொள்ளவில்லை என்பதையும், தன் அகந்தை அவன் எதிரே செல்லாது அழிந்ததையும் அவள் நேர்முகமாகக் கண்டறிந்தாள்.

''இதைப்பற்றி என்னைக் காட்டிலும் உங்களுக்கு அல்லவோ நன்றாகத் தெரியும்?'' என்றாள்.

''நிர்மல் உன்மீது காதல்கொண்டிருக்கிறான் என்பது மட்டும் உண்மை'' என்றான் ஜீவானந்தன்.

இந்த வார்த்தைக்குப் பதில் சொல்லும்போது ஷோடசியின் முகம் சிவந்தது; அவள் வேறு பக்கமாகப் பார்வையைச் செலுத்தி, ''அது என் குற்றமா? என்னைக் காதலிக்கவும் என் வாழ்வை இன்னும் துன்பத்திற்கு உள்ளாக்கவும் ஒருவரைத் தூண்டிய அபராதத்தை நான் செய்யவில்லையே'' என்றதும் அவள் சற்றுத் தாமதித்தாள். பிறகு துரிதமாகவே, ''நான்தான் பாபம் செய்தவள். இவைகூடவா?'' என்று ஜீவானந்தனுடைய இலையைச் சுட்டி, ''ஏன் உண்பதை நிறுத்திவிட்டீர்கள்? ஒன்றையும் தொடவில்லையே'' என்றாள்.

''இல்லையே; இதோ தின்கிறேன்'' என்று ஜீவானந்தன் சாப்பிடுவதில் கவனம் செலுத்தினான்.

வெளியே வண்டிக்காரன், ''அம்மா, அம்மா! நாழி ஆவுதுங்களே'' என்று உரக்கக் கூப்பிடுவது கேட்டது.

ஷோடசி, ''சற்றுப் பொறு, அப்பனே. இதோ வந்து விடுகிறேன்'' என்று பெருங்குரலெடுத்துப் பதில் தந்தாள். உடனே குரலைத் தாழ்த்தி ஜீவானந்தனை நோக்கி, ''சண்டிகட்டை விட்டு நீங்கள் போகத்தான் வேண்டும். என்னுடைய பேச்சைக் கேளுங்கள்'' என்றாள்.

''எங்கே போகச் சொல்லுகிறாய், அலகா?'' என்று கேட்டான் அவன்.

''உங்களுடைய சொந்த ஊருக்கு—பீஜ்காமுக்கு.''

"சரி போகிறேன். அப்புறம் என்ன?"

"நாளைக்கே புறப்படவேண்டும்."

ஜீவானந்தன் அவளை உற்று நோக்கி, "நாளைக்கே போக வேண்டுமா? ஆனால் இன்னும் காரியம் பாக்கியாக நிற்கிறதே. நீர்ப் பாசனத்திற்கு வாய்க்கால் ஒன்று வெட்ட உத்தரவிடவேண்டும். அதைத் தாண்ட ஒரு சிறிய பாலம் அமைக்க உத்தேசம். ஏழைகளிடமிருந்து பறிமுதல் செய்த நிலங்களை அவர்களிடமே திருப்பி விட வேண்டியது அவசியம். அதைச் செய்யும்படி எனக்கு உத்தரவு இடவில்லையா நீ? கோயில் நடவடிக்கைகளைச் சீர்படுத்த வேண்டியது மற்றொரு முக்கியமான காரியம். தேசாந்தரிகளுக்கு இன்னும் சில செளகரியங்களைச் செய்யவேண்டும். இவற்றையெல்லாம் முடிக்காமல் என்னைச் சண்டிகட்டை விட்டுப் போகச் சொல்கிறாயே; நியாயந்தானா?" என்றான்.

ஷோடசி ஸங்கடத்தில் சிக்கிக் கொண்டாள். ஆனால் முகத்தில் புன்னகை அரும்ப, "இந்தப் புண்ணிய கைங்கரியங்களைச் செய்யவேண்டிய சங்கற்பம் பொழுது விடியும்வரையாவது நிலையாக இருக்குமோ?" என்றாள்.

ஜீவானந்தன் இந்தப் பரிஹாஸத்தில் கலந்துகொள்ளாமல் மெளனமாக இருந்தான்.

"அவசியமாக இருக்கவேண்டிய தினங்களுக்குமேல் அதிகமாக நீங்கள் தங்கக் கூடாது. அப்படி இருப்பதாக எனக்கு உறுதிமொழி தரவேண்டும். இருக்கும்வரை சற்று ஜாக்கிரதையாக இருப்பீர்களா?" என்றாள் ஷோடசி.

இதற்கும் அவன் மறுமொழி தரவில்லை; பேசாமலே இருந்தான். ஷோடசி அதற்குமேல் வலியுறுத்திச் சொல்லவில்லை. ஆனால் ஜீவானந்தன் கடைப்பிடிக்கும் மெளனமே அவனுடைய உள்ளத்தில் விளையும் மாறுதலைத் தெளிவுறக் காட்டியது.

ஜீவானந்தன் உண்டியை முடித்துக்கொண்டு வெளியே வரும்போது ஷோடசி கையை அலம்பிக்கொள்ள ஜலம் தந்தாள்.

தனக்குள்ள ஒரே 'காம்சா' (துவாலை) மூட்டையில் சிக்கிக் கொண்டு வண்டியில் கிடந்ததால், ஜீவானந்தன் கைகளைத் துடைத்துக்கொள்வதற்காக அவள் தன்னுடைய சேலையின் தலைப்பை செளகர்யமாக நீட்டி, "இந்தாருங்கள்; துடைத்துக் கொள்ளுங்கள்" என்றாள்.

ஜீவானந்தன் முகத்தையும் கைகளையும் அவளது புடைவைத் தலைப்பினால் துடைத்துக்கொண்டு, "இந்தமாதிரி நீ யாருக்கும் செய்ததில்லையே, அலகா?" என்றான்.

அப்போது ஷோடசி வெடுக்கென்று ஆடையின் தலைப்பை இழுத்துக்கொண்டு தலை குனிந்தவாறு, "உள்ளே வந்து சற்று உட்காருங்கள். நான் ஒழித்துக்கொண்டு புறப்பட அதிக நேரமா

காது. என்னை வண்டியில் ஏற்றிய பின்பே நீங்கள் செல்ல வேண்டும்'' என்றாள்.

''உன்னைக் கடைசிமட்டும் ஊரைவிட்டு அகற்றும் காரியத்தைச் செய்யச் சொல்லுகிறாய்; அதுதானே? நல்லது; அவ்வாறே செய்கிறேன். ஆனால் உன்னால் ஒரு காரியம் ஆகவேண்டியிருக்கிறது. நான் செய்திருக்கும் வினையின் விளைவை நானேதான் அனுபவித்துத் தீரவேண்டும். அதற்காக நான் யாரிடமும் குறை கூறிக்கொள்ள வில்லை. நீ என்னை விட்டுப் போய்விடுகிறாய். ஒன்றுமட்டும் உன்னைக் கேட்டுக்கொள்ள எனக்கு அதிகாரம் உண்டு. அதோடு என் வேதனையும் தொலைந்துபோம்'' என்று இயம்பிவிட்டு ஜீவானந்தன் அறையினுள் வந்து தான் எழுதிய கடிதத்தை ஜேபியிலிருந்து எடுத்து ஷோடசியிடம் தந்தான்: ''நீ இன்னும் முழுவதும் பட்டினியாகக் கிடக்கிறாயா? ஏதாவது வயிற்றுக்குப் போட்டுக் கொள். அதுவரை நான் சற்று வெளியே இருட்டில் உலாவி விட்டு வருகிறேன். நீ புறப்படும் சமயத்திற்குள் வந்துவிடுவேன்'' என்று கூறிவிட்டு வெளிக்கிளம்பும் தருணம் ஷோடசி அவனுக்கு வழிவிடாமல் தடுத்தாள். பிறர் துயரைக் கண்டு சற்றும் இளகாமல் சுய வாழ்வையே முக்கியமாகக் கருதும் ஒருவன், தான் இது வரை பட்டினியாகக் கிடக்கும் துச்சமானதோர் விஷயத்தை மறவாமல் இருக்கிறானே என்றெண்ணும்போது ஷோடசியின் நெஞ்சே அவளை உறுத்தியது. கையிலுள்ள கடிதத்தைப் பார்த்துக்கொண்டே, ''என்ன எழுதியிருக்கிறீர்கள் எனக்கு? உங்கள் முன்னிலையிலேயே இதைப் பிரித்துப் பார்ப்பதனால் தவறொன்றுமில்லையே?'' என்றாள்.

''இல்லை. ஆனால் இப்போது வேண்டாமே. அதைப் படித்து விட்டு எனக்குப் பதில் தரத்தக்க விஷயம் ஒன்றுமில்லை. மன வேதனையிலிருந்து என்னைக் காப்பாற்ற நீ வேண்டிய துயரத்திற் குள்ளாகி இருக்கிறாய், அலகா! இல்லாவிட்டால் இப்படி நீ போக வேண்டிய பிரமேயமே ஏற்படாது. நான் கடைசியாக உன்னைக் கேட்டுக் கொள்வது அந்தக் கடிதத்தில் கண்டிருக்கிறது. அதை நீ பரிபாலித்தால் அதைவிட எனக்கு ஆனந்தம் வேறு இல்லை'' என்றான்.

''என்னதான் இருக்கிறது? பிரித்துப் பார்க்கிறேனே!'' என்றாள் ஷோடசி.

ஜீவானந்தன் சும்மாயிருந்தான். விளக்கண்டை சென்று லிகிதத்தில் எழுதியுள்ளதை ஒரே மூச்சில் படித்துப் பார்த்ததும் ஷோடசி ஸ்தம்பித்துப்போய்ப் பேசச் சக்தியற்று நின்றாள். கடிதத்தின் வெளிப்பக்கம் அவள் பெயர் வரையப்பட்டிருந்தாலும் வாஸ்தவத்தில் அது அவளுக்கு எழுதியதல்ல. அதன் உட்புறம் பின் வருமாறு வரையப்பட்டிருந்தது:

''பக்கிரிபாபாவுக்கு,

ஷோடசியின் நிஜப்பெயர் அலகா. அவள் என்னுடைய மனைவி. தாங்கள் குஷ்டரோகிகளுக்காக ஆரம்பித்துள்ள ஸேவாச்ரம இயக்கம் வெற்றி

யடையுமாறு பிரார்த்திக்கிறேன். அவள் இத்தொண்டில் ஈடுபடத் தங்களது ஆச்ரமத்திற்கு வருவதனால் அவளைத் தாங்கள் சரிவரக் கவனிப்பீர்களென்று நம்புகிறேன். கடினமான பணிகளைச் செய்ய அவளை ஏவவேண்டாம். தாங்கள் ஆச்ரமத்தைப் பிரதிஷ்டை செய்துள்ள இடமானது என்னுடைய தல்லவெனினும் அதற்கருகிலிருக்கும் சைவாலதிகி என்ற ஊர் எனக்குச் சொந்தமானது. இந்தக் கிராமத்தின் வருவாய் சுமார் ஆறாயிரம் ரூபாய்க்கு மேலிருக்கும். இதை நான் தங்களுக்கு அளிக்கிறேன். தங்களுக்குப் பிறகு ஆச்ரமம் அழியாது நிலவும்பொருட்டு நான் சைவாலதிகியை ஷோடசியின்பேரில் எழுதி வைத்துவிடுகிறேன். தாங்களும் ஒரு காலத்தில் சட்ட நிபுணராய் இருந்திருப்பதால் என்னுடைய இந்த நன்கொடை ஊர்ஜிதமடையும் விதத்தைத் தேடவேண்டும். அதற்கு வேண்டிய செலவையும் நான் தருகிறேன். பத்திரம் எழுதியானதும் அதை நான் ரிஜிஸ்டர் (பதிவு) செய்தனுப்புகிறேன்.

இங்ஙனம்,

ஸ்ரீ ஜீவானந்த சௌதுரி."

ஷோடசி அறையின் வெளியே வந்து தனக்கு வரும் கண்ணீரை விரைவில் துடைத்துக்கொண்டு திரும்பினாள். "இவ்வளவு சமாசாரம் எப்படி உங்களுக்குத் தெரியவந்தது? நான் குஷ்டாச்ரமத்தில் ஸேவைபுரியச் செல்வது உங்களுக்கு எப்படி வாசனையடித்தது?" என்றாள் ஷோடசி.

"குஷ்டாச்ரமத்தை அறியாதவர்களே கிடையாது. மேலும் சைவாலதிகிக்குச் செல்வதாக நீ சொல்லவில்லையா? என்னை வெட்டிவிட்டு மறுவேலை பார்ப்பதாகக் கங்கணம் கட்டியிருப்பவர்கள் இன்று கோவிலில் பேசிக்கொண்டிருக்கையில் இதன் உண்மை எனக்குத் தெரியவந்தது" என்றான் ஜீவானந்தன்.

இதற்கு ஏற்ற மறுமொழி தரமுடியாமல் ஷோடசி முதலில் விழித்தாள்; அப்புறம், "ஆனால் நீங்கள் ஸம்ஸார இச்சையைத் துறந்துவிட்டீர்களா என்ன? எல்லாவற்றையும் தானம் செய்துவிட்டு ஆண்டியாகப் போய்விட உத்தேசமா?" என்றாள்.

இந்தக் கேள்வி இருவர் காதுகளுக்கும் விநோதமாகப் பட்டது. உடனே ஜீவானந்தனால் பதில் சொல்ல முடியவில்லை. ஆனால் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே அவன் உணர்ச்சியின் வேகத்துடன், "நானா ஆண்டி? அது பொய்யான பேச்சு. உலகத்தில் எதையும் நான் நஷ்டமாக்கமாட்டேன். இனியல்லவோ உண்மையான வாழ்வு எனக்கு வரப்போகிறது? மனிதருள் ஒருவனாக நான் மதிக்கப்படவேண்டும். வீடு வாசல், மனைவி மக்கள், ஆசை அந்தக்கரணம் எல்லாவற்றையும் நான் எதிர்பார்த்து நிற்கிறேன். இத்தகைய ஸுகத்தை அனுபவித்த பிறகே நான் சாக விரும்புகிறேன். நான் எவ்வளவோ இழந்துவிட்டேன். விவரித்துச் சொன்னால் நீ திடுக்கிடுவாய். இனிமேல் எதையும் பாழ்படுத்தமாட்டேன், அலகா!" என்றான்.

ஷோடசியின் மெய் சிலிர்த்தது. அவள் தயங்கிக்கொண்டே, "ஆனால் நான் ஸன்யாஸினியாயிற்றே. உலகத்தில் உங்களுக்குக்

கிடைக்கக்கூடிய ஸ்திரீகளுக்கு என்ன குறைவு? இந்தப் பாசத்தில் என்னை ஏன் மாட்டிவிடுகிறீர்கள்?'' என்றாள்.

ஜீவானந்தன் பேசவில்லை. பரந்த உலகில் ஸ்திரீகளுக்காகக் குறைப்படவேண்டியதில்லை யென அலக்ஷ்யமாகக் கூறுபவளுக்கு அவன் என்ன பதில் தருவது?

இதற்குள் வண்டிக்காரன் வெளிமுற்றத்திலிருந்து, "அம்மா, ஓ அம்மா! கிழக்கு வெளுக்கும் நேரமாச்சே! வாங்க அம்மா ஜல்தியா?'' என்று சப்தம் போடுவது கேட்டது.

"வருகிறேனப்பா'' என்று மொழிந்ததும், ஷோடசி குடுவையில் மிகுந்திருந்த எண்ணெயை அகலில் இட்டுத் தீபம் சுடர்விட்டு எரிவதற்காகத் திரியைச் சரிப்படுத்தி வெளிப்போந்தாள். குடிலின் கதவைத் தாழிடவேண்டிய அவசியமே ஏற்படவில்லை. நிலைகுலைந் திருக்கும் கதவை மட்டும் சாத்திச் சங்கிலியிட்டதும் மேலாடையைச் சரிப்படுத்திக்கொண்டு ஜீவானந்தனுடைய காலடியில் விழுந்து சேவித்தாள். அவன் பாததூளியை எடுத்துச் சிரமேல் வைத்துக் கொண்டு, "நான் போய் வருகிறேன்'' என்றாள்.

"சாப்பிடக்கூட உனக்குப் பொழுதில்லை'' என்று ஜீவானந்தன் வெய்துயிர்த்துக் கூறினான்.

"என்னுடைய எளிய குடிமக்களுக்கு நான் அதிகாலையில் புறப்படுவது தெரியும். அவர்கள் வந்துவிடுவார்களானால் என்னுடைய பிரயாணம் தவக்கப்படும். அதனால் இப்போது புறப்படுவது மேல். உத்தரவா? நான் பட்டினி கிடப்பதைப்பற்றி நீங்கள் கலங்க வேண்டாம். இரண்டுபொழுது அப்படியிருப்பதனால் நான் இறந்து விடமாட்டேன்'' என்றாள் அபூர்வமான புன்முறுவல் முகத்தில் பூக்க. கூடவே வந்து ஜீவானந்தன் அவளை வண்டியில் ஏற்றி விட்டான். வண்டி அந்த இடத்தை விட்டு அகன்றதும், பின்னாலேயே வந்து ஷோடசியின் காதோடு வாய்வைத்து அவன், "அலகா! உன்னுடைய அம்மா ஒருநாள் உன்னை என்னிடம் ஒப்பித்திருந்தாள். இருந்தும் உன்னையடையும் பாக்கியம் எனக்குக் கிடைக்கவில்லை. ஆனால் அன்று என்னுடைய பொறுப்பை யெல்லாம் உன்கையில் கொடுத்து விட்டிருந்தேனானால் நீ இப்படி என்னை விட்டுச் செல்வாயா?'' என்றான்.

இதற்குப் பதில் என்ன சொல்வதென்று ஷோடசிக்குத் தோன்றவில்லை. ஜீவானந்தனுடைய மொழிகளில் தொனிக்கும் கரையற்ற வியாகுலம் - வெளிப்படாத ஏக்கம் - அவள் செவியில் ஒலித்துக் கொண்டே இருந்தது.

வண்டி ஊரின் கோடியில் மறையும்வரை அந்த இருட்டில் ஜீவானந்தன் அதைப் பார்த்துக்கொண்டே மரம்போல் நின்றிருந்தான். பொழுதுபுலர்ந்த பிறகே அவன் அவ்விடத்தை விட்டு அகன்றான்.

செவேலென அடிவானத்தில் சூரியபிம்பம் எழும் சமயம் ஜீவானந்தன் புல்வெளியைத் தாண்டித் தன் வீட்டை ஸமீபித்துக்கொண்டிருந்தான். கொஞ்ச நாழிகையாக ஜனங்கள் ஆரவாரிப்பது அவன்

செவிக்கு எட்டியது. விஷயம் என்னவென்றறிய அவன் சற்றுத் தொலைவு வந்ததும் எதிரே சூரியனின் செங்கிரணங்களையொத்து நெருப்பின் ஜ்வாலை ஆகாயத்தை நோக்கித் தாவுவதைக் கண்டான். வர வர ஜன சந்தடியும், நெருப்பின் உக்கிரமும் பன்மடங்காகப் பெருகத்தொடங்கின. மாளிகை வாயிலை அடையும்போது பலபேர், குடங்குடமாக நீரை எடுத்துக்கொண்டு ஓடுவதும் கூவுவதுமாயிருந்தனர். பீஜகாம் ஜமீன்தார்களின் கேளிக்கை நிலயமும், ஜீவானந்தனுடைய பாபச்செயல்களுக்கு உறைவிடமுமாய் இருந்த அந்தச் 'சாந்தி குஞ்ஜம்' தீயினால் கருகிச் சாம்பலாக வெகுநேரம் பிடிக்கவில்லை.

(அடுத்த இதழில் முடிவுறும்.)

---

## மதிப்புரை

1914—39: ஹிட்லரும் மஹாயுத்தமும்:—[ஸ்ரீ எ. ஜி. வெங்கடாச்சாரி எழுதியது; கிடைக்கும் இடம்: பிருந்தாவனப் பிரசுராலயம், மயிலாப்பூர், சென்னை; 401 பக்கங்கள்; விலை ரூ. 1-4-0.]

சென்ற மகாயுத்தமே இப்பொழுது நடந்து வரும் பெரிய யுத்தத்திற்குக் காரணம் என்றால் அது ஆச்சரியமாகத் தோன்றலாம்; ஆனால் அது மறுக்க முடியாத ஓர் உண்மையாகும். நேச தேசங்களுக்கு, மஹா யுத்தத்தினால் ஏற்பட்ட நஷ்டத்திற்கு ஈடாக, ஜெர்மனி தன் குடியேற்ற நாடுகளை விருப்பமின்றிக் கொடுக்க நேர்ந்தது. ஆனால் தோல்வியுற்றவன் எப்பொழுது தனக்கு நல்லகாலம் வரும் என்று காத்திருப்பது சகஜந்தானே? அது போலவே ஜெர்மானியரும் மனத்திற்குள்ளே இந்தப் பகைமையைப் புதைத்து வைத்துக்கொண்டிருந்தார்கள். சமயம்வந்ததும் சென்ற மகா யுத்தத்தின் சிருஷ்டியான ஹிட்லர் இப்பொழுது தம் பலத்தைக் காண்பிக்க ஆரம்பித்திருக்கிறார். 'வெர்ஸேல்ஸ் விபரீதம்' என்ற முதல் அத்தியாயத்திலிருந்து முடிவுரை வரை, (1913 முதல் 1939 வரை) முக்கியமாக ஜெர்மனியையும் பொதுவாக அதைச் சுற்றியுள்ள நாடுகளையும் பற்றிய அரசியல் நிகழ்ச்சிகளை மனத்தைக் கவரும் விதத்தில் ஆசிரியர் எழுதிக்கொண்டு போகிறார். இந்த யுத்தம் முடிவடைந்தாலும், இனிமேலாவது யுத்த பீதி ஒழியாமலிருக்குமா என்ற கேள்விக்குக் கடைசியில் ஆசிரியர் எழுதியுள்ளதைவிடச் சாதுர்யமான விடை வேறு இல்லை எனலாம். "உலகை இடைவிடாத நெருக்கடிகளில் ஆழ்த்திவரும் யுத்தபீதி நிறைந்த நிலைமை ஒழியவேண்டியதுதான். ஆனால் அத்தகைய வெற்றியுடன் யுத்தமே அற்றுப் போகுமென்றும், ஜனநாயகம் நிம்மதியாக வளர்ச்சி யடையலாமென்றும் நம்பமுடியாது. எல்லாத் தேசங்களிலும் எல்லா மக்களும், சம சந்தர்ப்பங்களைப் பெற்றுச் சுதந்திரர்களாய், பரிபூர்ண வளர்ச்சியுடன், சந்தோஷமும் சௌக்கியமும் நிறைந்த வாழ்க்கை ஏற்படுவதற்கு ஏற்றவாறு பாமர மக்களிடம் உண்மையான ராஜீய அதிகாரம் கிடைக்கும் வரை யுத்தங்கள் வந்துகொண்டுதானிருக்கும்" என்கிறார்.

சமயத்திற்கேற்ற பிரசுரமான இதைப் பல படங்களுடன் வெளிக்கொண்டுவந்த பிருந்தாவனப் பிரசுராலயத்தாருக்கு தமிழ் நாட்டார் மிகவும் கடமைப் பட்டுள்ளனர். யாவரும் படித்து அநேக முக்கியமான உலக விஷயங்களை இதினின்று அறியலாம்.

---

# மூளையின் வேறுபாடுகள்

என். ஆர். ரகுநாதாசாரியார், எம். ஏ., எல். டி.

## ஜீவராசிகளின் உணர்ச்சி

ஜீவராசிகளுக்கு உணர்ச்சி முக்கியமான குணம். மிகவும் தாழ்வான ஜந்துக்களுக்குத் தேகத்தில் அவயவ வேறுபாடுகள் இல்லை. பெரிய ஜந்துக்களின் தேகத்தில் ஒவ்வொரு செயலுக்கும் ஒவ்வோர் அவயவம் ஏற்பட்டிருக்கிறது. அதுபோல் கிருமிகள் (Microbes), கடற்பாசி (Sponge) முதலிய தாழ்வான ஜந்துக்களின் சரீரத்தில் இன்ன இன்ன செயலுக்கு என்று தனித்தனியே உறுப்புக்கள் அமைக்கப்படவில்லை. இந்த ஜீவராசிகளின் சரீரம் மிகவும் நுட்பமானது. ஒருவேளை சரீரம் பெரியதாயிருந்தபோதிலும் ஒரு பாகத்திற்கும் மற்றொரு பாகத்திற்கும் பேதம் காணப்படுவதில்லை. உண்ணுவதற்கோ, மூச்சுவிடுவதற்கோ, பிரஜோத்பத்தி செய்வதற்கோ எதற்கானாலும் ஒரே அவயவந்தான். இப்பிராணிகளை விடச் சற்று உயர்ந்த நாடாப்புழு (Tapeworm), நாக்குப்பூச்சி (Intestinal Round worm), மண்ணுண்ணி, ஈ, நத்தை முதலிய பிராணிகளைக் கவனித்தால், சரீரம் சிறியதாக இருந்தபோதிலும் அதில் வேறுபாடுகள் பல காணப்படுகின்றன. இடம்விட்டு இடம் பெயர்வதற்கு ஓர் அவயவம்; ஆகாரம் உட்கொள்ளவும் அதை ஜீரணத்திற்குக் கொண்டுவரவும் ஓர் அவயவம்; மூச்சுவிடுவதற்கு ஓர் உறுப்பு; மலத்தைக் கழிப்பதற்கு ஒன்று; பிரஜோத்பத்திக்கு மற்றொன்று; உணருவதற்குத் தனியே ஒரு கருவி. இங்ஙனம் பல வகையான இந்திரியங்கள் ஒன்றுக்கு ஒன்று விரோதமின்றித் தேக சௌக்கியத்திற்காக ஒத்து வேலைசெய்யும்படி அமைக்கப்பட்டிருக்கின்றன. பிராணிகளின் உடலிலே நிகழும் செயல் ஒவ்வொன்றும் அவசியமானதே; ஆயினும் உணர்ச்சி மற்ற எல்லாவற்றைக்காட்டிலும் விசேஷமானது. உணர்ச்சி இல்லாவிட்டால் ஜீவனுக்கே ஹானி ஏற்படும்.

## இயற்கையோடு சண்டை

வாழ்க்கையே ஒரு பெருந் துன்பம். அபிசீனியருக்கும் சீனருக்கும் மட்டும் அல்ல; மகாத்மாவுக்கும் முஸ்ஸோலினிக்குங் கூட வாழ்க்கை துன்பமே. நாய், காக்கை, மீன், புழு எல்லாவற்றிற்கும் வாழ்க்கை கஷ்டமாகவே இருக்கிறது. ஒரு குருவி ஒரு பொந்தில் கூடுகட்டப் பார்க்கிறது. மற்றொரு குருவிக்கும் அதே பொந்துதான் தேவை. உடனே இரண்டுக்கும் யுத்தம் உண்டாகின்றது. ஒரு நாய்க்கு ஓர் எச்சில் இலை அகப்பட்டால் அந்த இலைக்கு வேறு ஒரு நாய், ஒரு கழுதை, ஒரு மாடு எல்லாம் போட்டி போடுகின்றன. மழையில்லாத ஒரு பிரதேசத்தில் வெயில் 110 டிகிரி மூன்று நாள் சேர்ந்தாற்போல் காய்ந்தால் மாடு கன்றுக்குச் சேதம்; மரம் மட்டைக்கு நாசம்; பக்ஷிகள், பழந்தின்னி வௌவால், முள்ளம் பன்றி, கரடி முதலியவைகளுக்குச் சாவு. மழை அதிகமாகப் பெய்து வெள்ளம் ஏற்பட்டாலோ, மரம், செடி, ஆடு, மாடு, கோழி எல்லாம் கூண்டோடு கைலாஸம் போகவேண்டியதுதான். இவ்வாறு பிரகிருதிக்கும் ஜீவனுக்கும் விடாச் சண்டை நடந்துகொண்டேயிருக்கிறது. உணர்ச்சியினால் ஜீவராசியானது தன்னால் இயன்றமட்டும் இயற்கையை வென்று மரணகாலத்தில்தான் அபஜய மடைகிறது. இயற்கை ஒருவேளை இருப்பது போல் அடுத்த நிமிஷம் இருப்பதில்லை; மாறுபாடுகள் ஏற்பட்டுக்

கொண்டே இருக்கின்றன. இம்மாறுபாடுகளுக்குத் தக்கவாறு ஜீவராசியும் தன்னுடைய சரீர தத்துவத்தை மாற்றிக்கொள்ள வேண்டும். இல்லாவிடில் அதற்கு உடனே ஹானி நேரிடு மென்பதிற் கொஞ்சமேனும் ஸந்தேக மில்லை. நல்ல உணர்ச்சி - அறிவு - இருந்தால் விட்டில் பூச்சி விளக்கில் விழுந்து பொசுங்குமா? சிட்டுக்குருவி கிணற்றில் கூடுகட்டிக் குஞ்சுகளை நீருக்கு இரையாக்குமா? உணர்ச்சியினாலல்லவா காக்கை வேப்பங்காயைத் தொடாமல் பழத்தை விழுங்குகிறது? உணர்ச்சியினாலல்லவா பூனையைக் கண்டதும் எலி ஓடிவிடுகிறது? ஆகவே இயற்கையின் மாறுபாடுகளுக்குத் தக்கபடி ஒரு பிராணி தன் தேகத்தில் உண்டாக்கிக்கொள்ளும் வேறுபாட்டுக்கே உணர்ச்சி என்று பெயர். உயர்வான ஜீவராசிகளின் சரீரத்தில் உணர்ச்சிக்காகவே தனியே ஒரு கருவி உள்ளது. மற்றச் செயல்களைவிட, உணர்ச்சி ஜீவனுக்கு விசேஷமாதலினால் மற்ற அவயவங்கள் உணர்ச்சிக் கருவிக்கு அடங்கியே நடக்கின்றன.

## மூளை என்பது என்ன?

முதுகு எலும்பு இல்லாப் பிராணிகளில் உணர்ச்சிக்கருவியானது (Nervous system) நுட்பமாகவும், சிறிய நூல் போன்றும், கம்பியுருவத்தினதாகவும் இருக்கும். பெரும்பான்மையான முதுகெலும்பற்ற பிராணிகளின் சரீரத்தில் அடிப்பாகத்தில் நரம்புக்கம்பிகள் ஜோடியாக முன்பக்கத்திலிருந்து பின் கோடிவரையிற் காணப்படுகின்றன. இக்கம்பிகளின் இடையிடையே சிறிய நரம்புமணிகளும் (Ganglia) உண்டு. இவைகளிற் சிலவற்றுள், சரீரத்தின் முன் பாகத்தில் உள்ள நரம்பு மணிகள் சற்றுப் பருத்திருப்பதும் உண்டு. இந்த மணிகளுக்கே மூளை என்று பெயர்.

இவ்வகையான ஜந்துக்களில் மூளை மிகுந்த பிராதான்யத்தை அடையவில்லை. ஒரு வேளை சரீரம் துண்டுபட்டாலும், ஒவ்வொரு துண்டுக்கும் உணர்ச்சிக்குறைவு விசேஷமாக ஏற்படுவதில்லை. நரம்பு மணிகளிலிருந்தும், மூளையிலிருந்தும் மேல் தோலிலுள்ள சிறிய உணர்ச்சி அணுக்களுக்கும் (Sensory Cells), கண்கள் முதலிய அவயவங்களுக்கும் சில நரம்புகள் செல்லுகின்றன. இந்நரம்புகளின் வழியாக மத்திய நரம்புகள் (Central nerves) பிரகிருதி மாறுபாடுகளை அறிகின்றன.

## மூளையின் பகுதிகள்

முதுகெலும்புள்ள பிராணிகளின் உணர்ச்சி எத்தகையது என்பதைக் கவனிப்போம். இப்பிராணிகளின் உடலில் முதுகுப் பக்கத்தில் முதுகு நரம்பும் முன்பாகத்தில் மூளையும் இருக்கின்றன. இந்த முதுகுநரம்பை முதுகெலும்பற்ற பிராணிகளின் உடம்பிலுள்ள மத்திய நரம்புக்கு ஒப்பிடலாம். ஆனால் முதுகெலும்புப்பிராணியின் மூளைக்கு மற்றப்பிராணிகளின் மூளை ஒப்பானதன்று. முதுகெலும்புப்பிராணியின் மூளையை மூன்று பாகங்களாகப் பிரிக்கலாம்; அவை பின்மூளை, மத்தியமூளை, முன்மூளை என்பவை. ஒவ்வொருபாகத்திலும் சிறிய பிரிவுகள் வேறு உண்டு. வேறொரு வித்தியாசம் என்னவென்றால், முதுகெலும்பற்ற பிராணிகளின் மத்திய நரம்புகளும் மூளையும் முழுதும் கெட்டியாகவிருக்கும்; முதுகெலும்புப் பிராணிகளின் உடலிலோ மூளையிலும் முதுகு நரம்புக்கயிற்றிலும் உள்ளே திரவங் கொண்ட குழல் (Cavity) இருக்கிறது. அந்தக் குழலைச்சுற்றித்தான், மூளைப்பதார்த்தம் என்னும் சுவர் சில இடங்களில் கனமாகவும், சில இடங்களில் இலேசாகவும் இருக்கிறது. உதாரணமாகப் பின்மூளையின் சுவர் மேல்பாகத்தில் மிகவும் மெலிந்தும், கீழேயும் பக்கங்களிலும் கனத்தும் இருக்கிறது.

முதுகெலும்புப்பிராணி, அற்பப்பிராணியோ அல்லது உயர்ந்ததோ, எதுவானாலும், மூளையின் ஒவ்வொரு பாகத்திலும் பிரிவுகள் சில தவறாமற் காணப்படும். பின்மூளையில் இரண்டு பிரிவுகள்: (1) உயிர்நிலை ஆதாரப் பாகம் (Medulla oblongata or Spinal bulb), (2) நேர் நிலைமைக்கும் (Equillibrium) சரியான நடமாட்டத்திற்கும் ஆதாரமான பாகம் (Cerebellum). மத்திய மூளையை, கண்ணைச் சார்ந்த பாகம் (Optic lobes) என்று சொல்வார்கள். இப்பாகத்தில் மீன், தவளை, பல்லி, பறவையினங்களுக்கு இரண்டு உருண்டைகளும், ஸ்தன்யபானிகளான மிருகங்களுக்கு நாலு சிறிய உருண்டைகளும் உள. முன் மூளையிலும் இரண்டு பிரிவுகள் உண்டு: (1) மத்திய மூளைக்குச் சமீபித்த மூன்றாம்கண் முன்மூளை (Malamencephalon), (2) புத்திஸ்தானமாகிய முன்மூளை (Cerebrum) என்பன அவை. எல்லா முதுகெலும்புப்பிராணிகளுக்கும், முன்மூளைக்கு முன்னால் வாஸனையை அறிவதற்கு ஆதாரமான பாகம் (Olfactory lobe) உண்டு. இப்பாகம் ஒவ்வொன்றிலும் உள்ளே குழல் உண்டு. மேற்படையின் கன வேறுபாட்டினால், குழல் சில பாகங்களில் டைமன்போலவும் (Lozenge-shaped), சில பாகங்களில் குழாய்போலவும், மற்றும் கைப்பெட்டி போலவும், சுரைக்காய்போலவும் இருக்கிறது. எப்பாகத்தில் எந்த ரூபம் இருந்தபோதிலும், எல்லாப்பாகங்களிலும் இருக்கும் குழல் ஒன்றே; ஏனென்றால், ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு மார்க்கம் இருக்கிறது. பின் மூளையிலிருக்கும் குழலுக்கும் முதுகு நரம்புக் கயிற்றுக்குள் இருக்கும் குழலுக்கும் வழி உண்டு. இதுவே முதுகெலும்புப் பிராணிகளின் மூளையின் பொது அமைப்பு. இந்த அமைப்பிற் பலவிதமான வேறுபாடுகள் காணப்படுகின்றன. மொத்தத்தில் மீன் இனத்தில் மூளை பழமையாகவும் எளியதாயும், ஸ்தன்யபானிகளில் அதிகமாக விரிந்தும், இவ்விரண்டு வகுப்புக்களுக்கும் நடுவேயுள்ள பிராணிகளில் மத்தியமாகவும் இருக்கிறதென்று சொல்லலாம்.



மீனின் மூளை: மேல் தோற்றம்: 1. வாஸனைக் கிரஹண ஆதார பாகம். 2. முன் மூளை. 3. மூன்றாம் கண் முன் மூளை. 4. கண்ணைச் சார்ந்த கோளங்கள். 5. நேர் நிலைமை ஆதாரபாகம். 6. பின்மூளை.

## மீனின் அறிவு

**மீன்** நீரில் வசிக்கும் ஜந்துவானதால், அதற்குத் தக்கவாறு அதன் உடல் அமைந்து இருக்கிறது. நீரில் காது அவசியமில்லை. தூரதிருஷ்டிப் பார்வையும் இருக்கமுடியாது. மீன் எல்லாப்பக்கங்களிலும் ஜலத்தினால் சூழப்பட்டிருப்பதனால், தண்ணீரில் ஏற்படக் கூடிய அழுத்த வித்தியாசங்களைத் (differences of pressure) தெரிந்துகொள்ளவேண்டியது மிகவும் அவசியம். ஆகையால் மீனுக்கு இருபக்கத்திலும் நீண்ட கோடு தலைமுதல் வால்நுனி வரையில் இருக்கிறது. இந்தக் கோட்டில் சிறிய துவாரங்கள் அநேகம் உள. இத் துவாரங்களில் அழுத்த வித்தியாசங்களைக் கண்டு பிடிக்கும் ஜீவ அணுக்கள் இருக்கின்றன. மீனின் கண் உருண்டையாக இல்லாமல், கொஞ்சம் தட்டையாக இருக்கிறது. ஆகையால் மீனால் சமீபத்தில் இருக்கும் வஸ்துக்களைத்தான் பார்க்கமுடியும். மீனின் செவியும் காற்றில் பரவும் ஒலி அலைகளை உணருவதற்கு ஏற்பட்டதன்று. மீனுக்கு வாஸனையைக் கிரகிக்கும் சக்தியும் பதார்த்தங்களை ருசிபார்க்கும் சக்தியும் உண்டு. நம்மைப் போல் ருசி நாக்கில்மட்டும் இல்லாமல் மீனின் மேல்தோல் முழுவதிலும்

பரவி இருக்கிறது. மீன் மந்த புத்தியுள்ள ஜந்து. ஆனாலும், பழகினால் கொஞ்சம் புத்தியுள்ளதாய்க் காணப்படுகிறது. குளத்தில் வசிக்கும் மீனுக்குத் தினந்தோறும் ஒரு மணியை அடித்து உணவு அளித்தால், நாளடைவில், மணி ஓசை கேட்டதும் ஆகாரத்தைத் தேடிவரும்.

## தவளையின் இயல்பு

மற்ற முதுகெலும்புப் பிராணிகளில் தவளை மீனைவிட உயர்ந்தது. மீனைத்தவிர மற்ற முதுகெலும்புப் பிராணிகள் ஆகாயத்திலிருக்கும் காற்றிலிருந்து ஜீவனுக்குத் தேவையான பிராணதார வாயுவை உட்கொள்ளுகின்றன. ஜீவநூலில், பிராணிகள் முதன்முதலில் நீரில் உதித்தனவென்றும், பிறகு அவைகளினின்றும் தோன்றிய உயர்ந்த ஜந்துக்கள் நிலத்திற்கு வந்தனவென்றும் கூறுவர். ஆதியில் ஜலத்தில் மச்சம் தோன்றிப் பிறகு ஜலத்துக்கும் நிலத்துக்கும் மத்தியமமாகத் தவளை உண்டாயிற்று என்பது பிராணிநூல் நியாயம். ஜலத்தைவிட்டுப் பூமியில் அடிவைத்த ஆனந்தத்தை அடக்கமுடியாததனால்தான் தவளைக்குக் குரல் உண்டாயிற்றுப்போலும்; மீனுக்குச் சப்தம் செய்யும் சக்தி மிகக் குறைவு; இல்லையென்றுகூடச் சொல்லிவிடலாம். தவளையின் சப்தம் மழைக்காலத்தில் மனிதர்களைக்கூட ஒருவரோடொருவர் பேச முடியாமல் அடக்கிவிடும். தவளைக்கு ஒலிக்கும் சக்தி ஏற்பட்டிருப்பதனால் சப்தத்தைக் கேட்கும் சக்தியும் உண்டு என விளங்குகின்றது. ஆகையால் மீனைவிடத் தவளைக்குக் காது விசாலமானது. கண்பார்வையும் கொஞ்சம் அதிகமென்றாலும், பூச்சி நகர்ந்தால் ஒழியத் தன் இரையைக் கண்டுபிடிக்கத் தவளைக்குத் தெரியாது.




தவளையின் மூளை: பக்கத் தோற்றம்: 1. வாஸனை ஆதார பாகம். 2. முன்மூளை. 3. மூன்றாம் கண் குறி. 4. கண்கோளம். 5. நேர்நிலைமைப் பாகம். 6. பின்மூளை. 7. பிட்யூடரி மணி.

தவளை ஒரு பூச்சியைத் தொடரும்போது பூச்சி திடீரென்று நின்றுவிட்டால், தவளையும் முட்டாளைப்போல் அசைவற்று நிற்கும். தவளை முட்டாள் என்பதற்கு என்ன ஸந்தேகம்? ஒரு கண்ணாடித் தொட்டியில் தண்ணீரை நிரப்பி, அதில் ஒரு தவளையைவிட்டுத் தொட்டிக்கு வெளிப்புறத்திலிருந்து கையால் அடித்தால், தவளை நீருக்குள் ஓடிப்போகும். பல தடவைகள் இப்படிச் செய்தாலும், தனக்குப் பயமில்லை என்னும் எண்ணம் ஒருகாலும் அதற்கு ஏற்படுவதில்லை. புத்தியுள்ளதாயிருந்தால் நுணல் தன் வாயாலே கெடுமோ? இப்பேர்ப்பட்ட புத்திஹீன ஜந்து ஆயிரக்கணக்கான முட்டைகளை இட்டுக் குஞ்சுபொரிப்பதனால்தான் வாழ்ந்துவருகிறது. இல்லாவிட்டால் தவளை இனம் அழிந்துபோய் ஆயிரம் நூற்றாண்டுகள் ஆகியிருக்கும். தவளைக்கு வாஸனையை மோப்பதற்கு உரிய சக்தியும் குறைவு. ஆயினும், அது மீனைவிட உயர்ந்ததே. இவ்வுயர்வுக்குக் காரணம் யாது என்று பரீக்ஷை செய்தால், மூளையின் முன்பாகத்தில் (Cerebrum) பிரத்தியேகமாக வாஸனையை மோப்பதற்கு ஒரு பாகமும், முன் மூளையின் வெளிப்பாகத்தில் நரம்பு அணுக்களின் (nerve cells) ஸமூகமும், முன்மூளையின் பக்கங்களில் நரம்புப் பதார்த்தத்தினால் ஏற்பட்ட மேடுகளும் காணப்படுகின்றன. மூளையின் மற்றப் பாகங்களில் அதிக வித்தியாசம் காணப்படவில்லை.

## ஊர்வனவற்றின் மூளை

பல்லி, பாம்பு, முதலை, ஆமை முதலிய ஊர்வனவற்றின் மூளைகள் தவளையின் மூளையைவிட அதிகமாய் விரிவாக்கப்பட்டிருக்கின்றன. இவைகளில் முன் மூளையின்மேல் எல்லாப்பக்கங்களிலும் பிரத்தியேகமான நரம்பு ஓடு (Cortex) ஒன்று ஏற்பட்டிருக்கிறது. இந்த ஓட்டில் பலவித நரம்பு அணுக்களும் சிறிய நரம்புக் கம்பிகளும் காணப்படுகின்றன. இந்த ஓட்டினால் முன்மூளை பருத்து இருக்கிறது. மேல் நரம்பு ஓட்டில், நரம்பு அணுக்களும் பிரத்தியேகமான இடங்களும் (Centres) உள. இந்தத் தனி ஸ்தலங்களிலிருந்து நரம்புகள் நேராகச் சரீரத்திலுள்ள அவயவங்களுக்குப் போகாமல், முன்மூளையின் கீழ்ப்பாகத்திலும் பக்கங்களிலும் உள்ள நரம்பு அணுக்களின் கிளைகளோடு சேருகின்றன. அதாவது சரீரத்திலுள்ள அவயவங்களிலிருந்து வரும் செய்தி நேராக மேலோட்டுக்குச் செல்லாமல், மத்தியிலுள்ள கீழ் அல்லது பக்கத்து நரம்பு அணுக்களைச் சேருகிறது. இவைகளிலிருந்து செய்தி மேலே செல்லுகிறது. அவ்வாறே மேலோட்டிலிருந்து தேகத்தின் பாகங்களுக்குச் செல்லும் செய்தியும், கீழ் அணுக்களின் வழியும் பக்க அணுக்களின் வழியும் செல்லுகிறது. மேல் ஓட்டை ஓர் அரசனைப் போலவும், கீழ்ப்பாகங்களையும் பக்கபாகங்களையும் மந்திரிகளைப் போலவும், அவயவங்களைப் பிரஜைகளைப் போலவும் சொல்லலாம். ஊர்வனவற்றின் மேல் ஓடு அதிகப் பருமனன்று.



பல்லியின் மூளை: பக்கத் தோற்றம்: 1. வாஸனை ஆதாரபாகம். 2. முன் மூளை. 3. மூன்றும் கண் குறி. 4. கண்கோளம். 5. நேர்நிலைமைப் பாகம். 6. பின்மூளை. 7. பிட்யூடரி மணி.

மேற்பட்ட பக்ஷி இனங்களிலும் ஸ்தன்ய பானிகளிலும் மேல் ஓடு அதிகப் பருமனை அடைகிறது. பக்ஷிகளின் முன்மூளையின் கீழ்ப்பாகம் மிகவும் பருமனாயிருப்பதாலும் மேல் ஓடு பருமனாயிருப்பதாலும் மூன்றும் கண் முன் மூளை புத்தி முன்மூளையினால் மூடப்பட்டு வெளியே காணப்படாமலிருக்கிறது. மேலும் மத்தியமூளையில் இருக்கப்பட்ட இரண்டு கண்ணைச் சார்ந்த உருண்டைகளும், மூளையின் மத்திய பாகத்தில் இராமல், பக்கத்துக்குத் தள்ளப்பட்டிருக்கின்றன. ஸ்தன்யபானிகளின் முன் மூளையில் இரண்டு பக்கங்களும் மிகவும் பருத்து, மேல் ஓடும் அதிகப் பருமனாகி, மூன்றும் கண் முன் மூளையையன்றி மத்திய மூளையிலுள்ள நான்கு சிறிய கண்ணைச் சார்ந்த உருண்டைகளையும் முழுவதும் கவர்ந்து வெளியே காணவொட்டாமலடிக்கின்றன. இவ்வாறு முன் மூளை வேறுபடுவதன் பயன் யாது?

தவளை இனத்தைவிட, ஊர்வனவற்றிற்குப் புத்தி கூர்மை அதிகம். ஏனென்றால், ஒரு பல்லியைச் சுலபமாய்ச் செல்லமுடியாதபடி வளைந்து வளைந்து செல்லும் ஒரு மார்க்கத்தில் விட்டால், 7, 8 முறை அது தட்டுத் தடுமாறி வழியைக் கண்டுபிடித்த போதிலும், 9-ஆம் முறை அதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு, தடுமாறாமல் செல்லும். பார்வையும் தவளையைவிடக் கூர்மை. ஓடுவதனாலும் பறப்பதனாலும், குதிப்பதனாலும் ஊர்வனவற்றிற்குத் தவளையைவிடச் சிறந்த அறிவுடைய மூளை தேவை.

## பறவையின் புத்தி

பக்ஷிகள் பறக்கும் பிராணிகளாதலால், இதற்கும் மேற்பட்ட மூளை அவைகளுக்கு அவசியம். ஆனபோதிலும், பக்ஷிகள் ஊர்வனவற்றைவிட

அதிகமான புத்திசாலிகள் அல்ல. ஏதோ இயற்கையிலே அமைந்த சில விஷயங்கள் மட்டும் ஆச்சரியமாகப் பக்ஷிகளிடம் காணப்படுகின்றன: அழகிய கூடுகட்டுவது, ருதுக்களில் நாடுவிட்டு நாடு மாறுவது முதலியன. பக்ஷிகளின் புத்திசாலித்தனத்தைப்பற்றி ஒரு நிபுணர் தாம் கண்டதைப் பின்வருமாறு சொல்லுகிறார்: "ஒரு கூட்டில் பிப்பிட் என்னும் ஒரு ஜாதிப்பறவை முட்டையிட்டுக் குஞ்சுபொரித்திருந்தது. அதே கூட்டில், ஒரு குயிலும் தன் முட்டையை இட்டிருந்தது. குயில்குஞ்சு பிப்பிட்டின் குஞ்சைக் கூட்டிலிருந்து வெளியே தள்ளிவிட்டது. தாய் பிப்பிட் வெளியே தள்ளப்பட்ட தன் குஞ்சுக்கு உணவு தேடிக் கொண்டுவந்து கொடுத்தது. ஆனால், தன் குஞ்சை மறுபடியும் கூட்டில் வைக்கவேணுமே என்ற ஞானம் அதற்கு ஏற்படவில்லை. குஞ்சு சற்று நேரத்திற்கெல்லாம் உயிர் மாய்ந்தது."

## பகுத்தறிவுள்ள பிராணிகள்

இதேமாதிரி இருக்கும் ஸந்தர்ப்பங்களில் ஸ்தன்யபானிகள் மிகவும் ஆச்சரியகரமாக நடந்து கொள்ளுகின்றன. இவைகளும் மற்றப் பிராணிகளைப்போல், பல காரியங்களை இயற்கையாக அமைந்த அமைப்பினால் செய்கின்றன. ஆனாலும் இவைகளுக்கு இடம், பொருள், ஏவல் என்னும் ஞானம் உண்டு. "இது என்ன?, அது எப்படி?" என்று ஆராய்ச்சி செய்யும் சக்தியும், ஆராய்ச்சியிலிருந்து யுக்தியும், ஸ்தன்யபானிகளுக்கு ஏற்படுகின்றன. பகுத்தறிவு என்பது ஸ்தன்யபானிக்குத்தான் உண்டு. இதற்கு அவைகளின் விசித்திர மூளையே காரணம்.



# பொன்னகையும் புன்னகையும்

கி. சாவித்திரி அம்மாள்

ஆங்கில ஆசிரியர் ஒருவர் ஓரிடத்தில் வேடிக்கையாக, "பத்துப் பன்னிரண்டு பக்கங்களுக்கு வேண்டிய விஷயங்கூட விரைவில் சுலபமாய் எழுதிவிடலாம். ஆனால் அவ்விஷயங்களைப் பளிச்சென்று எடுத்துக்காட்டும் தலைப்பு அமைவதுமட்டும் சிலசமயம் கடினமாய் விடும்" என்று சொல்லுகிறார். இது பிரபல எழுத்தாளர்களுக்கு நேரக்கூடிய நிலைமை; என் போன்றவருக்கல்ல. என் போன்றவருக்கு ஏற்படக்கூடிய சிரமம் என்னவென்பது நான் சொல்லாமலே விளங்கும்.

நவநாகரிக முறைப்படி அன்றன்று புதிது புதிதாய் மாறிக் கொண்டுவரும் நகைகளைப்பற்றி வேண்டுமானால் எவ்வளவோ ரஸமான விஷயங்கள் சொல்லமுடியும். ஆனால் புன்னகையைப் பற்றிச் சொல்வதற்கு என்ன இருக்கிறது என்று தோன்றலாம். இந்நாளில் 'பாஷனை'ப்பற்றிய குறிப்புகளும் கட்டுரைகளும் வெளிவராத பத்திரிகையே இல்லை. அவைகளைப் படிப்பதில் மனம் சலிப்படையும் பெண்ணும் அருமை என்றுதான் சொல்லவேண்டும். மேல்நாட்டு நாகரிகத்தினின்றும் நமக்குக் கிடைத்திருக்கும் நூதனக் கலை இது. இதில் தேர்ச்சிபெற்று முன்னணியில் நிற்க வேண்டுமென்று அநேகம்பேர் மிகுந்த பிரயாசை எடுத்துக் கொள்கிறார்கள். அவர்களுக்கு அது வாழ்க்கையின் முக்கிய லக்ஷ்யமாகவே விளங்குகிறது. 'பாஷனி'ல் பின்தங்கி விடப்போகிறோமே என்ற கவலைமட்டும் ஒவ்வொருவருக்கும் இருக்கத்தான் செய்கிறது.

"பொன் நகை" என்று சொல்லும்பொழுது ஒரு சந்தேகம் உண்டாகிறது. வாழ்க்கைக்கு நகைகள் அத்தியாவசியமா? நகைகளில்லாத குறை பெருங்குறையாக இருப்பானேன்? நகைகள் அணிவதில்தான் வாழ்க்கையின் சந்தோஷம் முற்றும் ஏற்படுகிறதா? இக்கேள்விகளுக்குப் பதில் எதுவாயினும் பொன் நகையில்லாத பெண்ணுக்கு அவ்வாறுதான் தோன்றுகிறது. 'ஆடைகளும் ஆபரணங்களும் இருந்துவிட்டால் பிறகு சந்தோஷத்திற்குக் குறைவேது?' என்றுதான் அவள் எண்ணுகிறாள். ஆனால் பெட்டி நிறையப் பொன் நகைகள்—அதாவது இக்காலத்திற்கேற்றபடி வைரநகைகள்—இருந்தாலும் அவைகளை அணிய மனம் உற்சாகமில்லாமல் இருக்கலாம். இதை அவள் யோசிப்பதில்லை. அழகுக்கு என்னவோ நகைகள் அவசியந்தான். அழகுக்காகத்தான் அவை ஏற்பட்டிருக்கின்றன. பெண்களுக்கு அழகும் வேண்டாம், ஆபரணங்களும் வேண்டாம் என்று யார் சொல்லுவார்கள்? ஒரு நண்பர் மிகவும் ரஸமாய் ஓரிடத்தில், "நம் பெண்மணிகள் நகையணிந்து கொள்வதெல்லாம் வெறும் ஆடம்பரத்துக்கல்ல; இயற்கையழகை எடுத்துக் காட்டத்தான். ஒட்டியாணம் இடையின் ஒடுக்கத்தைக் காட்டும்; கல்லட்டிகை கழுத்தின் அழகை எடுத்துக் காட்டும்" என்று எழுதியிருக்கிறார். 'ஜில்க் ஜில்க்' என்று பாதசரத்தின் நாதம் கேட்பதிலிருந்து ஒரு பெண்மணி ஜோராக நடந்து வருகிறாள் என்று அறிகிறோம். அது மட்டுமா? பாத

சரத்தின் சப்தத்திலிருந்து, பெண்மணி மெள்ள அன்ன நடை நடந்து வருகிறாளா, வேகமாக நடந்து வருகிறாளா, அல்லது ஓடியே தான் வருகிறாளா என்பவற்றையெல்லாம் அறிந்து கொள்ளலாம். இதனால் இயற்கையழகு எவ்வளவு இருந்தாலும் செயற்கையழகும் வேண்டியதுதான் என்று தெரிகிறது. ஆனால் 'அழகுள்ளவர்களுக்குத்தானே நகைகள் அவசியம்? அழகில்லாதவர்களுக்கு வேண்டாமே' என்றால் அழகில்லாதவர்கள் நமக்கெதற்கு என்று பேசாமலிருக்கிறார்களா? இந்த நகைகள் விஷயத்தில் மட்டும் அம்மாதிரி ஸந்தேகமெல்லாம் நமக்குக் கிடையாது. அழகிருக்கிறதோ, இல்லையோ, நகைகள் இருந்தால் போதுமென்ற திருப்தியே சிலருக்கு. ஆடையாபரணங்களில் மனம் பறிகொடுக்காத பெண் உண்மையில் உலகில் அருமையென்றே சொல்லலாம். இது பற்றித் தான் அசோக வனத்தில் சீதா தேவியைக்கூட ராவணன், "என்னைப் பதியாகக் கொண்டால் மூவுலகங்களிலும் கிடைத்தற்கரிய வஸ்திரங்களையும் பூஷணங்களையும் அடைந்து அனுபவிப்பாய்" என்றுகூறி ஆசை காட்டுகிறான். ஆனால் கற்பையே சிறந்த பூஷணமாகக் கொண்ட தேவி இவைகளைக் கண்டு எவ்வாறு மயங்குவாள்?

"குன்றிமணி பொன்பூட்டிக் கொள்ளக் கோடி தவம் செய்திருக்க வேண்டும்" என்றெல்லாம் நகையணிவதைப் பற்றி வயதான பாட்டிமார்கள் சொல்லக் கேட்டிருப்போம். ஒன்று நிச்சயம்: நகை யணிவதற்கு அழகு அவசியமானாலும், ஆகாவிட்டாலும் பணம் அவசிய மென்பதுமட்டும் எல்லாருக்கும் தெரியும். ஆனால் அதற்கு வழியில்லாதவர்கள் எங்கே சும்மா இருக்கிறார்கள்? "அந்த வைர லோலக் நாம் அணியக் கொடுத்து வைக்கவில்லையே!" என்று தானே ஏங்கி வருந்துகிறார்கள்?

வைர லோலக் முகத்திற்கு அழகுதான்; அதிற் சந்தேகமில்லை. ஆனால் அதைக் காட்டிலும் சிறந்த பூஷணம் வேறு ஒன்று இருக்கிறது. அது முகத்திற்கு யாவற்றையும்விட மேலான ஒளியைக் கொடுக்கக் கூடியது என்பதை மறந்து விடுகிறார்கள். அதை அணிவதற்குப் பணம் தேவையில்லை. அது ஏழை பணக்காரர்கள் அனைவருக்கும் உரியது. பொன் நகை முகத்தின் அழகைமட்டும் எடுத்துக் காட்டும். ஆனால் **புன்னகை** அகத்தின் அழகையும் சேர்த்துக் காட்டுமல்லவா? சிரித்த முகத்தைக் காணும்பொழுது தான் பார்ப்பவர்களின் மனம் களிப்படைகிறது. இதனால்தான் கவிகள், "வெண்ணிலவனைய புன்னகை பொலியும் மதிமுகம்" என்றெல்லாம் வர்ணித்துக் கூறியிருக்கிறார்கள்.

ஆனால் எப்பொழுதும் சிரித்த முகத்துடன் இருப்பதற்குப் பணம் நகை இரண்டும் அவசியமில்லையென்றால் அவைகளுக்குப் பதிலாகக் குணம் அவசியமாயிருக்கிறது. பணமில்லாவிட்டால் நகைகளை இரவல் வாங்கியாவது அணிந்து நம் ஆசையைத் தீர்த்துக் கொள்ளலாம். ஆனால் புன்னகையை அணிவதற்குக் குணத்தை நாம் எப்படி இரவல் வாங்க முடியும்? அது நம்முடன் பிறந்ததல்லவா? அப்பொழுது, பொன்னாலாகிய நகையணிந்த பெண்ணைக் காட்டிலும் புன்னகைபணிந்த பெண் நூற்றிலொருத்தியோ ஆயிரத்திலொருத்

தியோ வென்று சொல்லும்படி அவ்வளவு அருமையாகி விடுவாள். அத்தகைய பெண் 'பட்டுப் பட்டாடைகள் இல்லையே! ஆபரணங்கள் இல்லையே!' என்று வருந்தமாட்டாள். அதற்குப் பதிலாகத் தன் மலர்ந்த முகத்தினாலும் இனிய மொழிகளினாலும் பிறர் உள்ளங்களைக் கவர்ந்து விடுவாள்.

கணவன் அழகுள்ள மனைவியைத்தான் கேட்கிறான். என்றாலும் கடைசியில் அவனுக்கு ரூபத்திலும் அலங்காரத்திலும் சிறந்த மனைவியைக் காட்டிலும், மனத்துக்கு இசைந்தபடி நடக்கும் குணமுள்ள மனைவியே போதுமென்று தோன்றிவிடுகிறது. அழகுக்குத் தன்னை மறக்கும் சக்தி கிடையாது; பிறர் எவ்வளவு புகழ்ந்தாலும் திருப்தியும் கிடையாது.

தற்காலத்தில் இயற்கை யழகைக் காட்டிலும் செயற்கை யழகிற்கே மதிப்பு அதிகம். நவநாகரிகம் முதிர்ந்த பெண்களாயிருந்தால் அலங்கரித்துக் கொள்வதில் மிகுந்த சிரத்தை கொண்டவர்களாகத்தான் இருப்பார்கள். ஏனெனில், அதில் ஒரு சிறு குறை தென்பட்டாலும், பிறர் மதிப்புக் குறைந்துவிடுமே என்ற கவலை அவர்களுக்குப் பெரிது. ஒரு 'ஸெகண்டை'க்கூட மதித்துக் கணக்கிட்டிருக்கும் இந்த ரேடியோ நிலயத்தில்தான் நாம் காலத்தின் அருமையை முற்றிலும் உணருகிறோம். ஆனால் மணிக் கணக்காக அலங்காரத்தில் முனைந்திருக்கும் பெண்ணுக்கு நேரத்தைப்பற்றிக் கவலையில்லை. வேண்டுமானால் காலந்தான் அவளுக்காக நின்று செல்ல வேண்டும். தன்னை அலங்கரித்துக் கொள்ளும் பணியில் பணம், நேரம் இரண்டையும் தாராளமாய்ச் செலவு செய்யக் கூடியவர்கள் அவ்வாறு செய்யட்டும், அப்படிச் செய்ய இயலாதவர்கள் அதற்காக மனமுடைய வேண்டுமாவென்றுதான் நமக்குத் தோன்றுகிறது.

தன் குறைகளைப் பாராட்டாமல் சந்தோஷமுள்ள மனத்துடனிருப்பதில் லாபமுண்டு. சிரிக்கக் கற்றுக்கொண்டால் எவ்வளவோ கவலைகளை மறக்கலாம். ஆங்கிலத்தில், "சிரித்தால் சேர்ந்து சிரிக்க எவ்வளவோ பெயர்கள் இருப்பார்கள். அழுதால் நாம் தனியாகத்தான் அழவேண்டும்" என்று ஒரு பழமொழி உண்டு. இன்பம் துன்பம் இரண்டும் நம் எண்ணத்தில்தான் இருக்கின்றன. நாம்தான் ஒன்றைச் சந்தோஷமாகவும் மற்றொன்றைப் பெரிய துக்கமாகவும் நினைத்துக் கொள்ளுகிறோம். நம்மைப்பற்றிய நினைவை விட்டுவிட்டுப் பிறருக்காகக் கஷ்டப்படுவதில் நிஜமான சுகமிருக்கிறது. அதைத் தெரிந்துகொள்ள வேண்டும். இவ்வுண்மையை நிலைநாட்டுவதற்கல்லவா தம் வாழ்நாட்களைப் பிறர் பொருட்டு அர்ப்பணம் செய்யும் புண்யாத்மாக்கள் உலகில் எப்பொழுதும் தோன்றிக் கொண்டிருக்கின்றனர்? நம் அற்பக் குறைகளை மறந்து பெரிய லக்ஷ்யங்களைக் கைக்கொள்ளுவோமாக.

———

சென்னை அகில இந்திய ரேடியோவில் 3—11—'39 இல் பேசியது; அனுமதியுடன் பிரசுரிக்கப்பட்டது.



# சிறுவர் பகுதி

## மானம்

‘முத்தண்ணா’

---

முன் ஒரு காலத்திலே சிற்றரசன் ஒருவன் தன்னுடைய பரிவாரங்களோடு புறப்பட்டுத் தல யாத்திரை போனான். போகிற வழியில், அந்நிய நாட்டு அரசனுடைய தலைநகர் ஒன்றின் வழியாகப் போகவேண்டி இருந்தது. அந்த நகரத்தில் அவன் பரிவாரத்தோடு வந்திருப்பதை அறிந்துகொண்ட அந்நாட்டு அரசன் அவனைத் தன்னுடைய அரண்மனையிலே விருந்திற்கு அழைத்தான்.

அந்தச் சிற்றரசனும் அந்த அழைப்பைச் சந்தோஷமாக ஏற்றுக்கொண்டு, தன்னுடைய சிறு பரிவாரத்தோடு அரண்மனைக்குப் போய்ச் சேர்ந்தான். உள்ளே சென்றதும் அந்த நாட்டு வேந்தனும் அவனுடைய சபையோர்களும் அங்கிருந்த ஆசனங்களிலெல்லாம் உட்கார்ந்திருப்பதைக் கண்டான். வந்தவர்கள் உட்காருவதற்கு ஆசனங்கள் இல்லை.

ஆயினும் அரசன் எழுந்திருந்து, சிற்றரசனைப் பார்த்து, “வாருங்கள், வாருங்கள். உங்களைப் பார்த்ததில் வெகு சந்தோஷம். உட்கார வேணும்” என்று சொல்லிவிட்டுத் தான் முன்போலவே உட்கார்ந்துகொண்டான். அவன் எழுந்திருந்தபொழுது அவ

னோடுகூட எழுந்து நின்ற அவனுடைய சபையோர்களும் முன்போலவே ஆசனங்களில் உட்கார்ந்து கொண்டார்கள். வந்தவர்களுக்கு உட்கார ஆசனம் இல்லை. வந்த சிற்றரசன், இது வேண்டுமென்று செய்தது என்பதை அறிந்தான்; ஆனாலும் முகம் கோணாமல் புன்சிரிப்போடு தான் மேலே போர்த்திருந்த விலையுயர்ந்த சால்வையை எடுத்து மடித்துக் கீழே போட்டுக்கொண்டு, அதன்மேல் உட்கார்ந்து கொண்டான். அவன் அப்படிச் செய்வதைக் கண்ட அவனுடைய பரிவாரத்தில் ஒவ்வொருவனும் தன்னுடைய சால்வையை மடித்துப்போட்டு அதன்மேல் உட்கார்ந்து கொண்டான். அதைப் பார்த்த அரசன் சற்றே வியப்படைந்தான்.

பிறகு விருந்து நடந்தது. சிற்றரசன் குதூகலமாகப் பேசிக்கொண்டு உற்சாகமாக இருந்தான். அவனை விருந்திற்கு அழைத்த அரசன் அப்பொழுது சற்றே வெட்கமடைந்தவன்போல் காணப்பட்டான். தான் செய்தது கௌரவமான காரியம் அன்று என்பது அவனுக்குக் கொஞ்சம் கொஞ்சமாகப் புலப்பட்டுக்கொண்டே வந்தது. விருந்தும், அதன்பிறகு நடந்த நடனக்கச்சேரியும் முடிந்த பிறகு சிற்றரசன் அரசனுக்கு வந்தனம் கூறி விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டான். அவன் வெளியே செல்லும்பொழுது, கீழே போட்டு உட்கார்ந்திருந்த மிக விலையுயர்ந்த சால்வையை எடுத்துக்கொள்ளவில்லை. அவனுடைய பரிவாரத்தில் இருந்தவர்களும் அவனைப் போலவே நடந்துகொண்டார்கள். சால்வைகள் எல்லாம் கீழே கிடந்தன.

மிகவும் விலையுயர்ந்த சால்வைகளை அவர்கள் லக்ஷியம் செய்யாமல் அப்படியே போட்டுவிட்டுப் போவதைக் கண்ட அரசன் சிற்றரசனைப் பார்த்து,

"உங்கள் சால்வைகளை வைத்துவிட்டுப் போகிறீர்களே" என்று ஞாபகப்படுத்தினான்.



அதற்குச் சிற்றரசன், "ஐயா, மன்னிக்கவேண்டும். விருந்து நடந்தபொழுது நாங்கள் உட்கார்ந்திருந்த ஆசனங்களைத் தூக்கிக்கொண்டு போவது எங்கள் நாட்டிலே வழக்கமில்லை" என்று புன்சிரிப்போடு பதில் சொல்லிவிட்டுத் தன் பரிவாரத்துடன் தங்கியிருந்த விடுதியைப் போய் அடைந்தான்.

அச்சிற்றரசன் அளித்த பதிலைக் கேட்ட அரசன், தான் செய்தது முற்றும் தவறு என்பதை நன்றாக உணர்ந்து மிகவும் வெட்கம் அடைந்தான்.

17. வெஞ்சரவிற் கானவரும் வெம்பிடியைப் பின்பிடித்த
குஞ்சரமுஞ் சேவகஞ்சேர் குற்ருலம்—அஞ்சரங்கிற்
சித்திரமா மன்றரியார் செங்கணரி யார்க்கரியார்
குத்திரமா மன்றரியார் குன்று.

18. நெட்டசலஞ் சாரிடமு நீர்வேட்ட குஞ்சரமும்
கொட்டமிடு மஞ்சளுறுங் குற்ருலம்—கட்டனலோன்
அஞ்சக் கரங்களைந்தா ரஞ்சடக்கி ஞர்கருத்தில்
விஞ்சக் கரங்களைந்தார் வீடு.

19. மாபுரத்து நாரியர்க்கு மாமேருப் பொன்னுக்கும்
கோபுரப்பொன் ஞணிநிற்குங் குற்ருலம்—நூபுரப்பொற்
பூந்திருப்ப தாம்புயத்தார் பூதரமெட் டுங்குழுமிச்
சேந்திருப்ப தாம்புயத்தார் சேர்பு.

---

17. வெவ்விய சரத்தையும் வில்லையுமுடைய; கானவர் சேவகம் சேர் - வேடர்கள் வீரத்தைப் பெற்றிருக்கின்ற. பிடி - பெண்யானை, குஞ்சரம் சேவகம் சேர் - ஆண்யானை துயிலுமிடத்தின்கட் சேர்கின்ற. சேவகம் - வீரம், யானைகள் துயிலுமிடம். அஞ்சு அரங்கில் - ஐந்து சபைகளுள்; "ஐவகை மன்றுதொ ருடிய வள்ளல்" (கந்த. கடவுள். 16.) ஐவகைச் சபைகள் இவையென்பது 25-ஆம் பாடலால் அறியப்படும். சித்திரமாம் மன்று அரியார் - சித்திர சபையில் ஆடுகின்ற சோதியாக வுள்ளவர்; அரி - சோதி; இத்தலத்திலுள்ள சபை சித்திரசபையெனப்படும். மற்ற நான்கு சபைகள் 25-ஆம் செய்யுளிற் கூறப்படும். அரியார்க்கு அரியார் - திருமாலுக்கு எட்டாதவர். குத்திரம் மாமன் - வஞ்சனையையுடைய மாமனுகிய தக்கனுக்கு. தரியார் - பகைவர்.

18. நெடுமையாகிய மலையைச் சார்ந்த இடங்களில் கொட்டமும் மஞ்சளும் உறும்; கொட்டம் - ஒருவகை வாசனைப்பூடு; "கொட்டமே கமழுங் கொள்ளம் பூதூர்" (தே.) குஞ்சரமானது கொட்டமிடும் மஞ்சை அள்ளுறும்; சொட்டம் - விளையாட்டு; மஞ்சு - மேகம். கட்டு அனலோன் - வலியையுடைய அக்கினிதேவன். அனலோன் அஞ்சும்படி அவன் கையை வெட்டியவர்; "வெய்யவ னங்கி விழுங்கத் திரட்டிய, கையைத் தறித்தானென் றுந்தீபற" (திருவாசகம்.) அஞ்சு - ஐம்பொறிகளை. விஞ்சுகின்ற அக்கரங்கள் ஐந்து: பஞ்சாக்ஷரம்.

19. மா புரத்து - பெரிய இந்நகரத்துள்ள; நாரியர்க்கு - பெண்களுக்கு; கோ புரம் பொன் நாணி நிற்கும் - திருமாலின் திருமேனியிலுள்ள திருமகள் நாணி நிற்கும்; கோ - தலைவன்; புரம் - உடம்பு. மேருவிலுள்ள பொன்னுக்கு இத்தலத்துக் கோபுரத்துள்ள பொன் ஆணிப்பொன்ஞக நிற்கும். நூபுரம் - காலணி. பதாம்புயம் - திருவடித்தாமரை. பூதரம் எட்டும் -

20. மேலவிட பக்கொடிமேல் விண்ணிடபம் வந்தேறிக்
கோலவிட பக்கொடியாங் குற்றாலம்—ஆலவிடப்
பந்தனைம றுத்தழைத்தார் பத்தர றுத் துக்கறிசெய்
மைந்தனைம றுத்தழைத்தார் வாழ்வு.

21. ஆடுபரா காயசித்த ரல்லாருங் கல்லாரும்
கூடுமறு கூடடையாக் குற்றாலம்—நீடுதிசை
அம்பரவி சேடத்தா ராலால முண்ணவுண்ணும்
உம்பரவி சேடத்தா ரூர்.

22. கண்டலுக்குப் பூவுங் கமழ்துளிக்குச் சாதகமும்
கொண்டல் வரத்துதிக்குங் குற்றாலம்—அண்டலரைப்
புக்கச் சிவந்திருப்பார் பொற்பவளக் குன்றம்போற்
செக்கச் சிவந்திருப்பார் சேர்வு.

---

மலைகளெட்டும். குழுமி - கூடி. சேந்து இருப்பதாம் புயத்தார் - தங்கியிருப்பதைப் போன்ற எட்டுத் தோள்களையுடையவர்; சேத்தல் - தங்குதல். எட்டுத்தோள்கள்: "போர்கொண்ட வெண்டோட் பொலங்குவடு" (குமர. 2.)

20. இச்செய்யுளிற் சிலேடை இல்லை. மேல விடபம் கொடிமேல் - மேலேயுள்ள மரக்கிளையிற் படர்ந்த பூங்கொடியின் மேலே. விண் இடபம் - இடபராசி. இடபக்கொடி - ரிஷபக்கொடி. ஆலவிடம் பந்தனை மறு தழைத்தார் - திருப்பாற்கடலிற்றோன்றிய நஞ்சைப் பந்தித்த கருமை தழைப்புற்றவர். பத்தர் - சிறுத்தொண்ட நாயனர். மறுத்து - மீட்டும். வாழ்வு - வாழும் இடம்.

21. பரகாய சித்தரல்லார் கூடுகின்ற மறுகூட்டை அடையாத; மறு கூடு - வேறு உடம்பை; பரகாயப்பிரவேசம் பண்ணுத என்றபடி. கல்லாதார், பலரும் கூடுகின்ற மறுகினிடத்தே அடையாத; மறுகு - வீதி; கல்லாதாரை இத்தலத்தின் வீதியிற் காண்டல் அருமை என்றபடி. திசையாகிய அம்பரவிசேடத்தை உடையவர்; அம்பரம் - ஆடை. உம்பர் அவி - தேவர் இறக்கும். சேடத்தார் - மிச்சமாகவுள்ளவர்; அமுதத்தை உண்ட தேவர் இறப்பவும், தாம் இறவாதவர் என்றபடி; "சங்கையொன் றின்றியே தேவர் வேண்டச் சமுத்திரத்தி னஞ்சுண்டு சாவா மூவாச், சிங்கமே" (தே. திருநா.)

22. கண்டலுக்கு - தாழைக்கு. கொண்டல் வரத்து பூ உதிக்கும் - கீழ் காற்றின் வரவால் பூ உண்டாகும்; "தாழை காற்றடிக்கப் பூத்த கதைபோல" என்பர். சாதகப்பறவை: கொண்டல் வர துதிக்கும் - மேகம் வரும்படி துதிக்கின்ற; "தற்பாடிய தளியுணவிற், புள்" (பட்டினப்.) புக்கு அண்டலரை அ சிவம் திருப்பார் - புகுந்து தம்மைச் சேராதவரை அந்த முத்திக்குரிய வழியில் திருப்பாதவர். செக்கச் சிவந்திருப்பார்; மிகச் சிவந்திருப்பார்; வழக்கு.

23. ஆடிப் படர்காற்று மாடரவின் செம்மணியும்
கோடிப் படங்காட்டுங் குற்றாலம்—பிடித்து
வந்தியா கத்தருவார் வந்தனையாற் கந்தனைமுன்
சந்தியா கத்தருவார் சார்பு.

24. தோட்டுநறும் பூமரத்துஞ் சோனைமத மாமுகத்தும்
கோட்டுவழி தேனிரைக்குங் குற்றாலம்—எட்டெழுதா
வேதத் துவனிடத்தார் மிக்கதந்தை தாடடிந்த
மாதத் துவனிடத்தார் வாழ்வு.

25. மேடைத் தளமுமதின் மென்கொடியுஞ் செங்கதிரோன்
கோடைக்கு வாடைதருங் குற்றாலம்—ஆடைக்கு
மாதங்க மன்றுரித்தார் மாணிக்கம் வெள்ளிசெம்பொன்
மாதங்க மன்றுரித்தார் வாழ்வு.

26. வல்லியர்செய் குன்றுகளும் வண்பாடல் வண்டுகளும்
கொல்லிமலை யத்திசைக்குங் குற்றாலம்—செல்வச்
சிவமதுகங் கைத்துறையார் செம்மையிலார் நெஞ்சிற்
பவமதுகங் கைத்துறையார் பற்று.

---

23. ஆடிமாதத்துக் காற்று, புதுமையாகிய படங்களைக் காட்டும்; ஆடிக் காற்றில் படம் பறக்கவிடுதல் இயல்பு; படம் - பட்டம் அல்லது காற்றாடி. அரவின் மணிகளைக் கோடிப்படம் காட்டும். பிடித்து வந்த - சூலனாற் பிடிக்கப்பட்டு வந்த; தியாகத்தருவார் - கொடுத்தலையுடைய கற்பகத்தைப் பெற்ற தேவர்கள் செய்த; வந்தனையால் - வழிபாட்டினால். சந்ததியாக - பிள்ளையாக.

24. தோடு - பூவிதழ். மரத்தில்: கோட்டு வழி தேன் நிரைக்கும் - கிளைகளின் வழியே தேன் வரிசையாக ஓடும். மதமாமுகத்திலுள்ள; கோட்டு வழி - தந்தத்தினிடத்தில்; தேன் இரைக்கும் - வண்டுகள் மதத்தை உண் பதற்கு ஒலிக்கும். வேதத்து உவநிடத்தார்; உவநிடம் - உபநிடதம். மா தத்துவன் இடத்தார் - சண்டேசநாயனாரது இடத்திலுள்ளவர்.

25. கோடைக்கு வாடை தரும் - கோடையின் வெப்பத்தைத் தீர்த் தற்குக் காற்றைத் தரும்; சூரியனது குதிரைக்கு வீதியைத் தரும். மாதங்கம் அன்று உரித்தார் - யானையை அக்காலத்து உரித்தவர். மாணிக்கம், வெள்ளி, செம்பு, ஒள்ளிய பெரிய தங்கம் இவற்றாலாகிய சபைகளுக்கு உரியவராது; உரித்தார் - உரியவர்; உரித்து, உரிமையென்னும் பொருளில் வந்தது. மாணிக்கமன்று - திருவாலங்காடு. வெள்ளிமன்று - மதுரை. செம்புமன்று - திருநெல்வேலி. தங்கமன்று - சிதம்பரம்.

26. செய்குன்றுகள் கொல்லிமலையையும், மலயத்தையும் ஒத்திருக் கும்; மலயம் - பொதியில்மலை. வண்டுகள், கொல்லிப்பண்ணை மேற்

27. கோடீர மால்வரைக்குங் கூரிருட்கு மாமுனிவர்
கோடீர மாதவஞ்செய் குற்றாலம்—கோடீரம்
தோன்றாக் கடலடைத்தான் றாயபணிக் காப்பகையை
வான்றாக் கடலடைத்தான் வாழ்வு.

28. பம்புகுயில் காமனுக்கும் பானுமதி வான்வழிக்கும்
கொம்பு குறித்துவருங் குற்றாலம்—நம்புமெனை
ஆளத்திக் கண்ணுதலா ரண்ணு மலைகாசி
காளத்திக் கண்ணுதலார் காப்பு.

29. தார்களினாற் போதளைந்துந் தண்டே னிறால்கிழிந்தும்
கூர்களினால் வண்டிரைகூர் குற்றாலம்—மார்கழிநாள்
இட்டவிழாச் செங்கையா ரேந்தரவக் கங்கணத்தின்
கட்டவிழாச் செங்கையார் காப்பு.

---

கொள்ளுதற்குத் திகைக்கும்; மலைய - மேற்கொள்ள; திசைத்தல் - திகைத்தல்; "திசைத்தது மில்லை யெனக்கு வந்து தீயோர், இசைத்தது மில்லை" (கம்ப. கைகேசி சூழ்வினை. 19.) செல்வம் பொருந்திய சிவமதுகங்கைத் துறையார்; சிவமது கங்கை - குற்றாலத்திலுள்ள ஓர் அருவித்தீர்த்தம். பவம் மதகம் கைத்து செம்மையிலார் நெஞ்சில் உறையார் - பிறப்பாகிய இருப்பை மரத்தை வெறுத்துச் செம்மையில்லாதாருடைய நெஞ்சில் உறையாதவர்.

27. கோடு ஈரம் மால் வரைக்கு - சிகரங்களையுடைய குளிர்ச்சியான பெரிய மலையில்; முனிவர் கோள் தீர மாதவம் செய் - முனிவர்கள் குற்றங்கள் தீரும்படி பெரிய தவத்தைச் செய்யும். கூர் இருட்கு - மிக்க இருளைத் தீர்த்தற்கு; முனிவரது கோடீரம்; கோடீரம் - சடை; ஆதவம் செய் - வெயிலைச்செய்யும். கோள் தீரம் தோன்றா - வலிய கரைகள் தோன்றாத. கடல் அடைத்தான் - கடலில் அணைகட்டிய இராமனது. பணிக்கா - பணிவிடைக்காக. பகையை - இராவணன் முதலிய பகையை. வான் தாக்கு அடல் அடைத்தார் - வானில் தாக்கும் அடலை அவனுக்குச் சேர்த்தவரது; இவ்விருவரும் ஆகாயத்திற்போர் செய்தமை இங்கே அறிதற்குரியது.

28. காமனுக்கு - மன்மதனுக்கு; குயில் கொம்பு குறித்து - குயில் கொம்பு ஊதி; மன்மதனுக்குக் குயில் காளம். பானுமதி - சூரியனும் சந்திரனும்; வான் வழிக்கு - வான்வழியே செல்லுதற்கு; கொம்பு குறித்துவரும் - இங்கேயுள்ள மரங்களின் கொம்பு தம்மேற் படாதபடி குறித்து வருகின்ற. எனை ஆள - என்னை ஆளுதற்கு. திக்கு அண்ணுதலார் - கதியாக அணுகுதலை யுடையார்; "அட்ட திக்கிலு மினியொரு திக்கிலை" (குமர. 418.)

29. தார்களில் நாற்போது அளைந்து கூர் கள்ளின் ஆல் வண்டு இரைகூர் - மாலைகளில் உள்ள கோட்டுப்பூ முதலிய நால்வகைப் பூக்களில் அளைந்து மிக்கதேனில் ஒலிக்கின்ற வண்டுகள் இரையை மிக உண்ணுகின்ற. கூர்களினால் இறால்கிழிந்து வண் திரைகூர் - கூரிய கொம்புகளால் தேனடை

30. தாளசலங் கைந்நிமிர்ப்பத் தண்சுடரும் வெஞ்சுடரும்
கோளரவ மென்றயிர்க்குங் குற்ருலம்—நீளரவம்
ஆர்க்கு மறைச்சிலம்பா ராடருவி பொன்ருரை
வார்க்கு மறைச்சிலம்பார் வாழ்வு.

31. விம்பவித ழார்முலேக்கு மெய்த்தவத்த ருங்கணிக்கும்
கும்பமுனி யாவணஞ்சேர் குற்ருலம்—தம்படிவப்
பங்கொடுகண் டங்கறுத்தார் பண்டுதக்கன் சென்னியைக்கோ
பங்கொடுகண் டங்கறுத்தார் பற்று.

32. கன்ருர்க்குங் காந்தளங்கைக் கன்னியர்க்குந் தொல்குடிக்கும்
குன்ருத் தனங்குவியுங் குற்ருலம்—ஒன்ருன
மூலவோங் காரத்தார் மூசுவரிப் பன்னகங்கள்
சாலவோங் காரத்தார் சார்பு.

---

கிழியப்பெற்று வளவிய (தேன்வெள்ளத்தின்) அலேகள் மிக்க. மார்கழி மாதத்தில் தமக்கு இஷ்டமான விழாவைத் திருவாதிரைநட்சத்திரத்தில் உடையவர்; செங்கை - திருவாதிரை நட்சத்திரம். கங்கணத்தின் கட்டு அவிழாத சிவந்த கையையுடையவர்.

30. இச்செய்யுளிற் சிலேடை இல்லே. தாள் அசலம் - யானே. கோள் அரவம் என்று - ஒன்பது கோள்களுள் ஒன்ருகிய ராகுவென்று. அயிர்க்கும் - சந்தேகிக்கும். யானேயின் துதிக்கைக்குப் பாம்பு உவமை. அரவம் ஆர்க்கும் மறைச்சிலம்பார் - ஒலியை மிகச் செய்கின்ற வேதமாகிய சிலம்பையுடையவர். ஆடருவி - வடவருவி. பொன்தாரை வார்க்கும். அறை சிலம்பார் - பாறைகளேயுடைய திரிகூடாசலமென்னும் மலேயையுடையவரது.

31. விம்ப இதழார் முலேக்கு - கொவ்வைக்கனிபோன்ற அதரத்தை யுடைய மகளிரது நகிலுக்கு; கும்பம் முனியா வண்ணம் சேர் - குடம் கோபம் கொள்ளாதவிதமாகச் சேரப்பெற்ற. மெய்த்தவத்தரும்: உம்மை, சிறப்பு; கணிக்கும் - மேலாகக் கருதும்; கும்பமுனி ஆவணம் சேர் - அகத்திய முனிவர் வீதியில் சேரும். படிவம் - வடிவம். பங்கு - இங்கே இடப்பாகம். கண்டம் - கழுத்து; "கண்டமுங் காமர் மெய்புங் கறுத்தவர்" (குமர. 166.) கோபம் கொடு கண்டு அங்குச் சென்னியை அறுத்தார்; சென்னி - தலே.

32. கன்று - வளேயல். கன்னியர்க்கு, குன்ருகத் தனம் குவிந்திருக்கப் பெறும்; தனம் - நகில். குடிகளுக்கு: குன்ருத்தனம் குவியும் - குறையாத செல்வம் குவிகின்ற. மூல ஓங்காரத்தார் - எல்லாவற்றிற்கும் காரணமாகிய பிரணவமந்திரத்தையுடையவர். பன்னகங்கள் - பாம்புகளாகிய. சால - மிக. ஓங்கு ஆரத்தார்; ஆரம் - மாலே.

33. வாடிய மெய்த்தவரும் வாரி மணித்திரளும்
கோடி வரம்படைக்குங் குற்றாலம்—நீடியதாள்
மன்றினிடைத் தூக்கினார் வான்கோ வணத்திலன்பர்
நன்றினிடைத் தூக்கினார் நாடு.

34. இட்டுண்பார் கைக்கு மினவளையா ராடலுக்குங்
கொட்டுந் தருவிளக்குங் குற்றாலம்—பிட்டுண்டு
வைகைக் கரைசமைத்தார் வாழ்மூர்த் தியைமதுரை
உய்கைக் கரைசமைத்தா ரூர்.

35. சேட்டுவரைத் தேனுக்குஞ் செண்பகப்பூங் கானுக்கும்
கோட்டுமறு கால்விலகுங் குற்றாலம்—காட்டு
நரியும் பரிசெய்தார் நல்லறிவில் லார்க்குத்
தெரியும் பரிசெய்தார் சேர்வு.

36. தேவரிசை வாணாட்டுத் தேனுவுஞ்சொற் பாவலரும்
கோவரிசை யேற்கவருங் குற்றாலம்—பூவரிசை

---

33. மெய்த்தவர்: கோடி வரம் படைக்கும் - கோடியளவான வரங்களைப் படைக்கும். மணித்திரள் கோடு இவர் அம்புஅடைக்கும் - மணிகளின் கூட்டங்கள் கரையில் ஏறுகின்ற நீரை அணையாக அடைக்கும். தாளை மன்றினிடைத் தூக்கினார். கோவணத்தில் - கோவணத்தால். அன்பர் - அமர்நீதி நாயனாருடைய. நன்றின் இடை - சிவபுண்ணியமாகிய எடையை அளவிட்ட; தூக்கினார் - தராசையுடையவரது.

34. கொட்டும் தரு இட்டுண்பார் கைக்கு இளைக்கும் - தியாகப் பொருளைச் சொரியும் கற்பகதரு பிறருக்கு இட்டு உண்பவருடைய கைக்குத் தோற்கும். மகளிர் ஆடலின் பொருட்டு: கொட்டும் தரு விளக்கும் - கொட்டுதற்குரிய கீர்த்தனங்களை மேன்மேலும் உண்டாக்கும்; தரு - கீர்த்தனங்கள். வைகை நதியின் கரையைச் சமைத்தவர். மூர்த்தியை - மூர்த்தி நாயனாரை; உய்கைக்கு - பிழைத்தற்பொருட்டு; அரைசு அமைத்தார் - அரசராக அமைத்தவரது.

35. சேடு - பெருமையையுடைய. தேனுக்கு கோட்டு மறு கால் விலகும் - தேனருவியாற்றுக்குக் கரையையுடைய வேறு வாய்க்கால்கள் குறுக்கே ஓடும். கோட்டும் அறுகால் - வளைந்த ஆறுகால்களையுடைய வண்டுகள்; விலகும் - விலகிச்செல்லும்; செண்பகப்பூந்தேனை வண்டுகள் உண்ணுவதில்லை. காட்டிலுள்ள நரியையும் பரியாகச் செய்தார்; உம்மை, இழிவு சிறப்பு. தெரியும் பரிசு எய்தார் - தெரியும்வண்ணம் அடையாதவர்.

36. தேவர் இசை - தேவர்கள் பொருந்திய. தேனு - காமதேனுவானது; கோவர் இசை ஏற்க வரும் - இடையாது வேய்ங்குழலினிசையை ஏற்றுக்கொள்ள வருகின்ற. பாவலர் கோ வரிசையேல் கவரும் - கவிஞர் அரசனாற் கொடுக்கப்படும் வரிசையாயின் பெற்றுக்கொள்ளும்; பிறரிடத்துப்

ஓதியர்கற் பங்கழிப்பா ரோர்கணத்திற் பல்கோடி
வேதியர்கற் பங்கழிப்பார் வீடு.

37. காட்டுக் கனியழித்துங் கான்யாறு நீர்செழித்தும்
கோட்டுக் குரங்குறையுங் குற்றாலம்—தோட்டுக்
கிருவா ரணத்தினரீரா யிரங்கோட்
டொருவா ரணத்தின ரூர்.

38. காலஞ்செய் வேனிற் கழைமதனு நாடகரும்
கோலஞ்செய் தாடிவருங் குற்றாலம்—மூலஞ்சேர்
செம்மற்காண் டீபனர் தேகமறப் பூவாளிச்
செம்மற்காண் டீபனர் சேர்வு.

39. ஒட்டினருங் கூத்தினரு மோடையும்வா ளுந்துகிலும்
கொட்டினெய்த லைக்காட்டுங் குற்றாலம்—கட்டியபூண்
அக்குமணிக் கோவையா ரம்பரவை நாவலன்சொல்
வைக்குமணிக் கோவையார் வாழ்வு.

---

பெறுமென்றபடி. ஓதியர் - தாருகாவனத்து முனிவர் பத்தினிகளுடைய. கற்பு அங்கு அழிப்பார். வேதியர் - பிரமதேவர்களது. கற்பம் - பிரமன் வாழ்நாள். பல பிரமர்களுக்குரிய கற்பம் இவருக்கு ஒரு நொடிப்பொழுதென்றபடி.

37. கனிகளை அழித்துக் கோட்டுக் குரங்கு உறையும் - பழங்களை உண்டு அழித்து மரக்கிளைகளில் குரங்குகள் தங்கும். நீர் செழித்தலால்: கோட்டுக்கு உரம் குறையும் - கரைக்கு வன்மை குறையப்பெற்ற. தோட்டுக்கு இரு வாரணத்தினர் - தோடாக அணிதற்கு இரண்டு சங்குகளை யுடையவர். ஈராயிரங் கொம்பையுடைய ஒரு வாரணம்; ஐராவணம் என்னும் யானை.

38. வேனிலில்: மதன் - மன்மதன்; கோல் அஞ்சு எய்து ஆடிவரும் - பஞ்சபாணங்களை எய்து வென்றுவரும். நாடகர்: கோலம்செய்து ஆடிவரும் - அலங்காரங்களைச் செய்துகொண்டு கூத்தாடி வருகின்ற. மூலம் சேர் - பஞ்சாட்சரமாகிய மூலமந்திரத்தை இடைவிடாது நினைத்த; செம்மல் காண்டீபனர் - செவ்விய மற்போர் செய்த காண்டீபனையுடையவர்; காண்டீபன் - அர்ச்சுனன்; காண்டீபம் - அர்ச்சுனனது வில். தேகம் அறும்படி. பூ வாளிச் செம்மல் - மன்மதனை. காண் தீபனர் - பார்த்து எரித்த தீபம்போன்ற நெற்றிக்கண்ணை யுடையவர்.

39. இச்செய்யுளில் ஐம்பொருட் சிலேடை வந்தது. ஒட்டினர் - சபதஞ்செய்த போர்வீரர்; கொட்டின் எய்தலைக் காட்டும் - தோளைக் கொட்டுதலோடு அம்பு எய்தலைக் காட்டும். கூத்தினர், வாத்தியங்களைக் கொட்டுதலோடு வருதலை. ஓடை, கொட்டிப்பூவையும் நெய்தற்பூவையும் காட்டும்; கொட்டி - ஒருவகை நீர்ப்பூடு. வாள், (சம்மட்டியால்) அடிக்கப் பட்டு நெய் தலைக்கு ஆட்டும்; வாளில் நெய் பூசுதல் வழக்கம்.

40. மன்றத்தின் மாளிகைமேல் வானிரவி வந்தேறிக்
குன்றத்தின் மேல்விளக்காங் குற்றாலம்—பொன்றத்தும்
தேனு ரருவியார் தெய்வமலர்ச் செண்டகப்பூங்
கானு ரருவியார் காப்பு.

41. ஆள்வேடர் கொல்லையினு மாயரிசை முல்லையினும்
கோள்வேங்கை தேக்கெறியுங் குற்றாலம்—நீள்வேழத்
தந்திவழி பாட்டினர் சங்கமெலாஞ் செந்தமிழ்த்தேன்
உந்திவழி பாட்டின ரூர்.

42. சாலஞ்செய் வித்தகருஞ் சாபநுத லார்விழியும்
கோலம் பலகாட்டுங் குற்றாலம்—சூலம்
விரும்புவன சக்கரத்தார் வேதாவாய்ப் பண்டு
தரும்புவன சக்கரத்தார் சார்பு.

---

நூலைத் தட்டி நெய்தற்றொழிலைத் துகில் காட்டும். சிலேடையில் னகர நகரங்கள் வேற்றுமையின்றி வந்தன. பூணுக அக்குமணிக்கோவையை உடையவர்; அக்குமணி - சங்குமணி; உருத்திராக்கமுமாம். பாவையை யுடைய நாவலன்; சுந்தரமூர்த்திநாயனர். சொல் வைக்கும் மணிக்கோ - மாணிக்கவாசகர். ஐயார் - இவ்விருவருக்குந் தலைவர்.

40. இச்செய்யுளிற் சிலேடை இல்லை. மாளிகை - மேன்மாடம். தேனருவியார் - தேனருவியை யுடையவர்; தேனருவி : குற்றாலத்தில் உள்ள ஒரு விசேட தீர்த்தம்; இது சிவமதுகங்கை எனவும் வழங்கும் (20). செண்பகப்பூங் கானர் - செண்பகாரணியத்தை உடையவர்; சண்பகாரணியம்: இத்தலத்தைச் சார்ந்ததாகிய ஒரு பூஞ்சோலை; இதுபற்றியே இத்தலம் சண்பகக் குற்றாலம் என்று வழங்கப்படும். அருவியார் - அருவத்தையுடையவர்.

41. ஆட்சிபுரியும் வேடர்கள் தினைக்கொல்லையில் வலியையுடைய வேங்கைமரத்தையும் தேக்குமரத்தையும் வெட்டி எறிகின்ற. ஆயர் இசைந்த முல்லையில்; கோள் வேங்கை தேக்கு எறியும் - கொல்லுதலை யுடைய வேங்கைப்புலி (மான்முதலியவற்றைக் கொன்று தின்று) ஏப்பம் விடும். தந்தி வழிபாட்டினர் - யானை செய்த வழிபாட்டினை யுடைய வர்; இதனைக் குற்றலப் புராணத்துள்ள யானைபூசித்த சருக்கத்தால் அறிய லாகும். சங்கமெல்லாம் - புலவர் கூட்டங்களிலெல்லாம். செந்தமிழ்த் தேன் உந்தி - செந்தமிழாகிய தேனாறு. வழிகின்ற பாட்டுக்களையுடை யவர்.

42. சாலம்செய் வித்தகர் - இந்திரசாலம் முதலியவற்றைச் செய்யும் திறமையையுடையோர்; கோலம் பல காட்டும் - பலவகையான காட்சிகளைக் காட்டும். சாபநுதலார் - வில்லைப்போன்ற நெற்றியையுடைய மகளிரது; விழி கோல் அம்பு அலகு ஆட்டும் - கண்கள் ஈர்க்கையுடைய அம்பினது

## பாவகஸ்புட ஜோதிஷம்

எவ்வித உபமார்க்கங்களும், ஆடம்பரமும் இல்லாமல் ஜோதிஷ முறையிலேயே உள்ளது உள்ளபடி சொல்லப்படுவது.

L. V. S. மணி
(B. A. Hons. Maths.)
பாவக ஸ்புடத்துடன் கணிதம்
ஜாதக பாவஸ்புட கணிதம் ரூ. 2.
கேள்விகள் 5-க்கு ரூ. 1.



E. S. K. சுவாமி ஜோதிஷர்
பலனில் உங்களைத் திருப்தி செய்வது நிச்சயம்.
ஒரு வருஷ மாதப் பலா பலன் ரூ. 2.
ஒரு தசை பலன் ரூ. 5.

பிறந்த ஊர், தேதி, நேரம் அல்லது எழுதும் நேரம் தேவை.

பிரஹத் ஜோதிஷ நிலயம், அக்கிரஹாரம், புரசபாக்கம், மதராஸ்

---

# இளைஞன் கனவு

ஸ்ரீ சுபாஷ்சந்த்ரபோஸ் வங்காளியில் எழுதியதை ஸ்ரீ த. நா. குமாரசுவாமி, பி.ஏ., அழகாய் மொழிபெயர்த்தது. இப்போது நீங்கள் படிக்க வேண்டிய நூல். விலை ரூ. 1—4—0

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

---

# கலைமகள் வருட சந்தா

(தபால் செலவுடன்)

இந்தியா, ஸிலோன் ரூ. 4-0-0

பர்மா ரூ. 4-8-0

பிணாங்கு, சிங்கப்பூர், நேடால் ரூ. 6-0-0

தனி ஸஞ்சிகை அணா 6

அல்லது 36 சதம்

# கலைமகள்

## பழைய தொகுதிகள்

—)o(—

கலைமகள் தொகுதிகள் அறிவியற்களஞ்சியமாகத் திகழ்பவை. எல்லாப் புத்தகசாலைகளிலும் இருக்க வேண்டியவை. அழகான பைண்டு, கில்ட் எழுத்துக்களுடன் கூடியவை.

| | | | |
|---|---|---|---|
| 1-ம் | தொகுதி | **712** | பக்கங்கள் |
| 2-ம் | தொகுதி | **704** | பக்கங்கள் |
| 3-ம் | தொகுதி | **664** | பக்கங்கள் |
| 4-ம் | தொகுதி | **680** | பக்கங்கள் |
| 5-ம் | தொகுதி | **690** | பக்கங்கள் |
| 6-ம் | தொகுதி | **634** | பக்கங்கள் |
| 7-ம் | தொகுதி | **668** | பக்கங்கள் |
| 8-ம் | தொகுதி | **652** | பக்கங்கள் |

தனித்தனியே வாங்குபவர்களுக்கு ஒவ்வொன்றும்
விலை ரூ. 2—0—0

எட்டுத் தொகுதிகளும் ஒருங்கே வாங்குபவர்களுக்கு
விலை ரூ. 15—0—0
தபாற் கூலி வேறு

மேல், 11, 15-ஆம் தொகுதிகளே உள்ளன
விலை ரூ. 2—12—0
தபாற் கூலி வேறு

மானேஜர், கலைமகள், மயிலாப்பூர்.

## உங்கள் வாழ்க்கையில்..........

பொதிந்து கிடக்கும் முக்கிய சம்பவங்களை இன்றே அறிந்து தக்கபடி பயன்படுத்திக் கொள்ளுங்கள். சென்னையில் ஒரு வருஷ காலமாக எதிர்காலப் பலன் உரைப்பதில் நிபுணராக விளங்கும்

பண்டிட் **M. R. K.** மூர்த்தி

(ஜோதிஷக் கழகம்
1, ஆடம் வீதி, மயிலாப்பூர், சென்னை.)

அவர்களிடம் கேட்டறியுங்கள்.

---

## ஸ்ரீ சரத்சந்திர சட்டர்ஜீ எழுதிய

# பைரவி

புஸ்தக ரூபமாக டிஸம்பர் மாதம் வெளிவரும். முன்னுடியே பதிவு செய்து கொள்பவர்களுக்கு 25% கமிஷன் அளிக்கப்படும். ஏறக்குறைய 500-பக்கம். அழகிய படங்கள். உயர்ந்த கிளேஸ் காகிதம்.

:: மானேஜர், கலைமகள், மயிலாப்பூர், சென்னை ::

---

# "ஜோதி"

சிறந்த சித்திர சகிதமான

## மாதப் பத்திரிகை

உலக அரசியலைத் தெளிவாக எடுத்துக் காட்டுவது

**இதுவே**

தினசரி உலகத்தில் நடைபெறுகிற சம்பவங்களை "அன்றாட உலகம்" என்ற பகுதியில் காணலாம்.
விஞ்ஞானத்தைப் பற்றிய விவரங்கள்
ஒவ்வோர் இதழிலும் உண்டு

வருஷ சந்தா

| | |
|---|---|
| பர்மா | — ரூ. 4—0—0 |
| இந்தியா | — .. 4—8—0 |
| மலேயா முதலிய வெளிநாடுகளுக்கு | — .. 6—0—0 |

விவரங்களுக்கு எழுதுக:—

மானேஜர்,

ஜோதி பப்ளிஷிங் கம்பெனி லிமிடெட்,
47, 31-வது வீதி, இரங்கூன்.

# டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் பதிப்பு

## ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தங்கள்

விரிவான முகவுரை, ஆராய்ச்சி, குறிப்புரை முதலியவற்றுடன் அழகாகப் பதிப்பிக்கப் பெற்றது.

108-பக்கங்கள் ஆராய்ச்சி

விலை ரூ. 4—0—0

## நூதனமாக வெளிவந்த நூல்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| 1. குறுந்தொகை: விரிவான உரை, சங்கநூல்களைப் படித்தறிவதற்குக் கண்ணாடிபோல் உதவும் ஆராய்ச்சி முதலியவற்றுடன் ... | 7 | 8 |
| 2. தணிகாசல புராணம்: திருத்தணிகைக் கந்தப்பையரென்னும் வித்துவானால் இயற்றப் பெற்றது; எளிய நடையில் அமைந்தது; கதைச்சுருக்கம், முகவுரை முதலியன அடங்கியது ... | 0 | 10 |
| 3. திருக்காளத்தி இட்டகாமிய மாலை: பக்தி ரஸம் ததும்பும் நூல் ... | 0 | 2 |
| 4. குழைக்காதர் பாமாலை: சிறையிலிருந்த புலவர் மன முருகிப் பாடியது ... | 0 | 4 |
| 5. புகையி விடுதூது: புகையிலையின் சிறப்பைக் கூறுவது ... | 0 | 2 |
| 6. நல்லுரைக் கோவை—4-ஆம் பாகம்: 20 ரஸமுள்ள கதைகளும் கட்டுரைகளும் அடங்கியது ... | 0 | 12 |
| 7. மணிமேகலைக் கதைச் சுருக்கம்: மாற்றி எழுதிய புதுப்பதிப்பு ... | 0 | 8 |

தியாகராஜ விலாஸம், திருவல்லிக்கேணி, சென்னை.

---

பின்வரும் இடங்களில் கலைமகளுக்கு

ஏஜெண்டுகள் தேவை

திருப்பூர்—ரங்கூன்—தேவக்கோட்டை—காரைக்குடி—பழனி

ஸ்ரீ ரவீந்த்ரநாத் டாகுர் வங்காளியில் எழுதிய

# குமுதினி

ஸ்ரீமதி ரங்கநாயகி

மொழிபெயர்த்தது

ரூ. 1—8—0

சுமார் 400 பக்கங்கள் — நல்ல கிளேஸ் காகிதம்

கலைமகள் சந்தாதார்க்கு மாத்திரம், ரு. 1—2—0

(தபால், வி. பி. செலவு தனி.)

# மாயா விநோதினி

மிகவும் சிறந்த நாவல்

ரவீந்திரநாத் டாகுர் எழுதியது

ஸ்ரீமதி தஞ்சம் மொழிபெயர்த்தது

விலை ரூ. 1-8-0

---

ரிஷப விஜயம்

ஓர் அரிய இனிய நாடகம்

ஸ்ரீ கே. வி. பஞ்சநதையர் எழுதியது

விலை ரூ. 0-12-0.

தபாற் கூலி வேறு.

மானேஜர், கலைமகள், மயிலாப்பூர்

29-3-45

Regd. No. M. 2748] [Vol. XVI, No. 5


## டிசம்பர் முதல் வாரத்தில்

சென்னை, ஸெலெக்ட் டாக்கிஸிலும் ஆந்திர தேசத்திலுள்ள மற்ற முக்கியமான இடங்களிலும் எதிர்பாருங்கள்!

டக்திரசம ததும்பும் மகத்தான

பாண்டுரங்க விட்டல்

தெலுங்கு பேசும் படம்



For Booking apply to: **The General Film Distributing Co.,**
48, Armenian St., G. T. MADRAS.


மயிலாப்பூர், மெட்ராஸ் லா ஜர்னல் அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டு, ரா. நாராயணசாமி ஐயர், பி.ஏ., பி.எல்., அவர்களால் பதிப்பித்துப் பிரசுரம் செய்யப்பட்டது.